தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண் - 7

# இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை

(இந்திய ஒற்றுமை, வேற்றுமைபற்றிய
ஓர் ஆராய்ச்சி)

(Peasant Life in India)
A Study in
Indian Unity & Diversity

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—74

# இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை

(இந்திய ஒற்றுமை, வேற்றுமைபற்றிய
ஓர் ஆராய்ச்சி)

**(Peasant Life in India)**
**A Study in**
**Indian Unity & Diversity**

மூல நூல் :
இந்திய மானிடவியல் ஆராய்ச்சித் துறை வெளியீடு,
இந்திய அரசு.

தமிழாக்கம் :
எஸ். இலட்சுமி, எம்.ஏ., பீ.டி.,
டாக்டர் அழகப்பா பயிற்சிக் கல்லூரி,
காரைக்குடி.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—March, 1965.

B.T.P. No. 74

# PEASANT LIFE IN INDIA

## A STUDY IN INDIAN UNITY & DIVERSITY

*Translation*

**S. Lakshmi**

© Bureau of Tamil Publications

**PRICE Rs. 3-50.**

This translation is published by arrangement with the Anthropological Survey of India, Government of India, Calcutta.

***Printed by***

Muthukumaran Press,
14-A, Kuppier Street,
Madras-1.

# அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழ்நாடு அரசாங்கம், சில ஆண்டுகளுக்கு முன்னர்க் கல்லூரித் தமிழ்க் குழுவொன்றை நிறுவி, அதன்மூலம் கல்லூரி மாணவர்கட்குத் தேவையான பல தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தது. தமிழை ஆட்சி மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிறகு, தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுகின்ற முறையில், இன்னும் முதத்தான அளவில் தமிழில் நூல்கள் வெளிவரவேண்டும் என்ற கருத்தில் தமிழ் வெளியீட்டுக் கழகம் 1962-ல் நிறுவப்பெற்றது.

உலகின் பிற பகுதிகளிலுள்ள மக்களின் அறிவு வளர்ச்சிக்குக் குறையாமல் தமிழ் மக்களும் அறிவு வளர்ச்சி பெறவேண்டுமானால், பிற மொழியிலுள்ள நூல்களைப் படிக்க முடியாதவர்கள் தமிழின் மூலமே எல்லாவற்றையும் கற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே தமிழ் வெளியீட்டுக் கழகம் கல்லூரி மாணவர்களுக்குரிய நூல்களை வெளியிடுவதுடன், பொது மக்களுக்கும் பயன்படுகின்ற முறையில் வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், விஞ்ஞானக் கலைகள் ஆகிய பல துறைகளிலும் பல்வேறு நூல்களை வெளியிட முனைந்துள்ளது.

அத்தகைய முயற்சிகளுள் ஒன்றாக இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 74ஆவது வெளியீடாக வருகிறது.

கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து, இதுவரை 109 நூல்கள் தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பெற்றுள்ளன. இந் நூல்களை வாங்கிப் படிப்பதன்மூலம் தமிழ் மக்கள் மேலும் வளர்ச்சி பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

எம். பக்தவத்ஸலம்

# நூன் முகம்

இந்தியப் பொருள்களின் கலாசாரத்தைப்பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 1959ஆம் ஆண்டு இவ்வாராய்ச்சி தொடங்கப்பட்டது. மத்திய இந்திய நிலையத்தின் பொறுப்பாளரும், மேற்பார்வையிடும் மானிடவியல் வல்லுநராகவுமிருந்த சுரஜித் சந்திரசின்ஹா இவ் வேலைக்குத் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். இந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கென்றே அகில இந்தியாவிலிருந்து இதற்கெனப் பணிபுரிவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் இவ்வறிக்கையில் தனித்தனி இயல்களில் தமது முடிபுகளை அளித்துள்ளனர். டாக்டர் சின்ஹாவின்கீழ் அக் குழு முழுவதும், ஒரே குடும்பமாக இருந்து பணி புரிந்ததென்பதை மகிழ்ச்சியுடன் குறிக்கின்றேன். இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலஅளவில் இந்தியா முழுவதையும்பற்றிய செய்திகளை இவர்கள் தமது கூட்டுறவினால் சாதித்திருப்பது போற்றத்தக்கதாகும்.

திருவாளர்கள் மஞ்சுசென், சிரவஸ்ரீ ரஞ்சித் தாஸ் குப்தா, திவ்யேந்து ராய் சவுத்ரி ஆகியோர் தேசப் படங்களைத் தயாரிப்பதற்கு அளித்துள்ள உதவிக்கு நான் உளங்கனிந்த நன்றியை இவ்வறிக்கையில் குறிக்கின்றேன். திருவாளர் கலிகிங்கர் கோஷ்தாஸ்திதார், காளிதாசன் சாமந்தா அவர்கள் பேனா, மை ஆகியவற்றால் வரையப்பட்ட படங்களை உதவி, இவ்வறிக்கையை அழகுபடுத்தியுள்ளனர்.

வீனஸ் அச்சகத்தாரின் முயற்சியால்மட்டுமே இவ்வளவு குறைந்த கால அளவில் இவ்வறிக்கையைப் பொதுமக்களின் முன்னிலையில் சமர்ப்பிக்க முடிந்தது; ஆகையால் அவர்களுக்கு எமது தனிப்பட்ட நன்றி உரித்தாகுக.

ஆகஸ்டு 20, 1961.

இந்திய மானிடவியல்
ஆராய்ச்சித் துறை.

நிர்மல் குமார் போஸ்
ஆணையாளர்.

# முன்னுரை

இவ்வறிக்கையின் தனித்தனிப் பகுதிகளை நோக்குமிடத்து, கிராமீய இந்தியாவின் பொருட்கலாசாரத்தின் பல்வேறு உறுப்புகளிடையே பொதுப்படையான ஒற்றுமை இருப்பது கண்கூடு. முதலாவதாக ஓரளவு அக வேறுபாடு காணப்படுகிறது; மேலும் ஒவ்வொரு விஷயத்திலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளூடுருவும் தன்மையும் காணப்படுகிறது. இரண்டாவதாகக் கலாசாரப் பிரிவுகள், உபபிரிவுகள் ஆகியவை 'கிரீர்சன்' (Grierson) என்பவர் கண்டுபிடித்த இந்தோ-ஆரியர், திராவிடர் ஆகிய மொழி வழிக் குடும்பங்களுடனோ அல்லது அக் குடும்பங்களின் கிளைகளுடனோ பொருந்தவில்லையென்றறிகிறோம். பொருள்கள்பற்றிய கலாசாரம் தனித்தேயிருக்கக் காண்கிறோம். இவை அநேக விஷயங்களில் ஒன்றோடொன்று பொருந்துவனவாகவுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்தியா இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. சில விஷயங்களில் அவை ஒன்றோடொன்று இணையக் கூடியவை. ஒரு பிரிவு, மகாராஷ்டிரம் முதல் பீகார் வரையிலும் காணப்படுகிறது. மற்றொரு பிரிவு ஒரிஸ்ஸா அல்லது வங்காளம் வரையில் பரவலாகக் காணப்படுகிறது. உருவ அமைப்பிலும் செயல் முறையிலும் வெவ்வேறு வகையான கலாசாரங்கள் இங்கு உள்ளூடுருவிச் செல்கின்றன.

உதாரணமாக, இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் காணப்படும் கிராம அமைப்புகளிடையே சில மேற்போக்கான வேறுபாடுகள் உள்ளன. வடக்கிலுள்ள கிராமங்கள் அநேகமாக ஒழுங்கற்ற கூட்டங்களாகவும், தெற்கிலுள்ள கிராமங்கள் ஒழுங்கான நல்ல தெருக்களைப் பெற்றனவாகவும் ஒன்றுபட்ட அமைப்புள்ளனவாகவும் காணப்படுகின்றன. எண்ணெய் எடுக்க உதவும் செக்குகளிடையேகூட, வட இந்தியாவுக்கும் தீபகற்ப இந்தியாவுக்கும் இடையே வேறுபாடிருக்கின்றது. சிற்சில கலாசார விஷயங்கள் ஒன்றோடொன்று இணைந்து, வேற்றுருவங்களைப் பெறுகின்றன. இவை எவ்வாறிருப்பினும் இடத்துக்கிடம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கலப்பைகளிடையேயும் பூகோளவாரியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. ஆயின், இவ் வேறுபாடுகளைக் கொண்டு இவற்றை, வடக்கு தெற்கு என்று பிரிப்பது முறையாகாது. தெற்கில் காணப்படும் பண்பாடு பீஹார் வரை தொடர்ந்து காணப்படுகிறது. குறைந்த அளவில் பரவியுள்ள இதர தன்மைகள், இந்தியாவின் வடகிழக்கு, வடமேற்கு ஆகிய பகுதிகளில் உள்ளன.

மாட்டுவண்டிகளின் சக்கரங்கள்கூட இடத்துக்கிடம் வேறுபடு கின்றன. கிராம அமைப்பு, எண்ணெய்ச் செக்குகள் ஆகியவற்றை விட, வண்டிச் சக்கரங்களும் கலப்பைகளும் கிராமீயப் பண்பாட்டை விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

இந்திய வாழ்க்கை முறை அருகேயுள்ள இதர நாடுகளின் வாழ்க்கை முறையோடு ஒத்திருக்கிறது. குறிப்பிடத்தக்க ஓரிரு வகைக் கலப்பைகள், நுகத்தடி, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய பல குழிகளையுடைய, நெல் குத்தப் பயன்படும் மரஉரல்கள் ஆகியவை நம்மைத் தென்கிழக்கு ஆசியாவுக்கு அழைத்துச் செல் கின்றன. இந்தியா, சுமத்ரா ஆகிய நாடுகளின் உள்நாட்டுக் கட்டடக் கலையிலும் இவ்வகையான ஒற்றுமையைக் காணலாம்.

இத் தொடக்க அறிக்கையில் மிக முக்கியமான ஒரு செய்தி வேண்டுமென்றே விடப்பட்டிருக்கிறது. பலவகை மட்பாண்டங் களின் உருவ அமைப்பும், அவற்றைச் செய்யும் முறைகளும் இவ் வறிக்கையில் சேர்க்கப்படவில்லை. அவைபற்றிய ஆராய்ச்சி நடை பெற்று வருகிறது.

இவைகளைப்பற்றி இதுவரையிலும் கிடைத்துள்ள செய்தியி லிருந்து தென்கிழக்கு ஆசியாவுடன் அல்லாமல் இந்தியாவின் மேற்கு, வடமேற்குத் திசைகளில் உள்ள நாடுகள் ஆகியவற்றுடனும் இந்திய உறவு நீடித்துள்ளது என அறியலாம். இந்தியா, சென்ற பல நூற்றுண்டுகளாக, மேற்கு, கிழக்கு நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த தென்பதை வரலாற்று வாயிலாக நாம் அறிவதால், இதில் வியப்பதற் கொன்றுமில்லை. கையினுல் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்கள், உணவு சமைக்கும் முறை முதலியவை நகர நாகரிகம் ஏற்படுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே இங்கு வழக்கில் இருந்தன. எனவே இத் தொடர்பு சரித்திர காலத்திற்கு முன்னரே ஏற்பட்டிருக்கலாமென அறிகிறேம். பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களால் மங்கிப்போன கலாசாரத் தொடர்புகளைக் காண இவை உதவுகின்றன.

மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் இந்தியாவில் புகுந்த கலாசாரங்கள் நாளடைவில் ஒன்றேடொன்று கலந்துவிட்டன. ஆயின் புதிய இணைப்புகளும். சில புதிய கண்டுபிடிப்புகளும் இந் நாட்டில் மட்டுமே தோன்றியுள்ளன. இப்பொழுது கலாசார வரலாற்றை ஆழ்ந்து நோக்குவது நமது செயல் நோக்கமன்று; இடத்துக்கிடம் வேறுபட்டு நிற்கும் கலாசாரங்களையும், அவை சிற்சில இடங்களில் உள்ளூடுருவிச் செல்கின்றன என்பதற்கான சான்று களையும், எடுத்துக் காட்டுவதே இவ் வாராய்ச்சியின் முதற்படியாகும்.

மறுபடியும் இரண்டு முக்கிய விஷயங்கள் இப் பிரச்சினையின் சம்பந்தமாகத் தெளிவாகப் புலனாகின்றன. முதலாவதாக இடத்துக்கிடம் மாறுபட்டுநிற்கும் கலாசாரங்கள், மொழியினாலோ அல்லது இயற்கையமைப்புகளாலோ தோன்றவில்லை என்பதாகும். இதனால் கலப்பை, உரல், உலக்கை, தைக்கப்படாமல் தத்தம் சடங்குகளுக்குத் தூய்மையானதென்று கருதி மகளிர் அணியும் ஆடை, கிராமங்களின் வெவ்வேறு அமைப்புகள், எண்ணெய்ச் செக்குகள், எண்ணெயைப் பயன்படுத்தி உணவு சமைக்கும் முறை ஆகியவை இந்தியாவின் பல பகுதிகளில் வாழும் குடியானவர்கள், நெசவாளர், குயவர் முதலியோரிடையே காணப்படும் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகின்றன.

இரண்டாவது குறிப்பு, பூகோளரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ள பொருள்களைப்பற்றியதன்று. இந்திய மானிட இயல் ஆராய்ச்சியாளர் (The Anthropological Survey of India) இவ் வகை ஆதாரங்களைப் பூரணமாகக் கண்டுபிடிக்க முயன்றுவருகின்றனர். செயல்முறையில் இதற்கான தொடக்கத் திட்டங்கள் உருவாக்கப் பட்டுவருகின்றன.

அன்றாட வாழ்க்கையில் பயன்படும் பொருள்களைப் பொறுத்த மட்டில் பிராந்திய வேறுபாடுகள் ஓரளவு இருந்தபோதிலும், நாட்டின் சமூக அமைப்பில் காணப்படும் வேறுபாடுகள் அவற்றை விடக் குறைந்த அளவினவேயாம்.

சாதிகள், உற்பத்தியமைப்பு முதலியவற்றை நோக்குவோம். இவை ஒன்றோடொன்று பிணைந்தும், சில விஷயங்களில் ஒன்றினுள் ஒன்று அமிழ்ந்தும் உள்ளன. இத் துறையில் ஓரளவு பணி ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து, வடக்கு, தெற்குப் பகுதிகளில், சாதி அமைப்புகளிடையேயும் சிறிது வேறுபாடிருக்கக் காண்கிறோம். இவற்றிடையே வேற்றுமைகளைவிட ஒற்றுமையே அதிகம். எனவே, மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்களில் காணப்படும் வேறுபாடுகளைப் போலன்றி, சாதியமைப்பில் காணும் வேறுபாடுகள் நுணுக்கமானவையேயாம். ஆயினும் இன்றுவரையில் நிலைத்துநிற்கும் சாதியமைப்பின் குறிப்பிட்ட சில பகுதிகளைக் காணும்பொழுது அவ்வித நுண்ணிய வேறுபாடுகளைக் காண்பதும் இயலுவதொன்றே.

வாரிசுமுறை, உறவினர்களுள் தனிப்பட்டவர்களின் கடமைகள் உரிமைகள் ஆகியவைபற்றிய சட்டங்கள், மக்களின் லட்சியங்கள், நம்பிக்கைகள், கலைகள் போன்ற உயர்வான துறைகள் ஆகிய வாழ்க்கையின் வேறுபல துறைகளை நோக்கின், உலகியல் அளவில்

காணப்படும் வேறுபாடுகள் குறைந்துகொண்டு செல்வதோடு மங்கிவிடுதலையும் காண்கிறோம். வேற்றுமைகளைவிட இவற்றில் காணப்படும் ஒற்றுமை, இந்திய கலாசாரத்திற்குத் தனிப்பட்ட சிறப்பைக் கொடுக்கின்றன.

எனவே, இந்திய ஐக்கியத்தின் அமைப்பை ஒரு கூர்நுதிக் கோபுரத்தோடு (Pyramid) ஒப்பிடலாம். அன்றாட்டம் பயன்படும் பொருள்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் சாதாரண மக்களின் பண்பாட்டில் பல்வகை வேறுபாடுகளிருப்பினும், உயரச் செல்லச் செல்ல, இவை குறையக் காணலாம். இதனால் நகர மக்கள், செயற்கையாக வாழ்க்கையை நடத்துவோர், சொத்துள்ளவர் ஆகியோரைவிடக் கிராம மக்கள் ஒருவருக்கொருவர் அதிகமாக வேறுபடுகின்றனர் என்பதல்ல. ஆயின், நகரங்களிலும் கிராமங்களிலும் வசிக்கும் இந்திய மக்களின் வாழ்க்கையில் சில விஷயங்களில் அதிக வேறுபாடும், சிலவற்றில் மிகக் குறைந்த வேறுபாடும் காண்பது கண்கூடு.

மேலும், நாம் ஏற்கெனவே கூறியதற்கொப்ப, பொருள்களிடையே காணப்படும் கலாசார அமிசங்கள், மொழியின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவையாகும். இந்தியாவில் வேற்றுமைகளிடையே காணும் ஒற்றுமையே அதிகம் என்பதை நாம் மறந்தும் மறுக்கவியலாது. இந்திய மானிட இயல் ஆராய்ச்சியாளரின் முயற்சியின் பயனாக, இவ்வொற்றுமையை நாம் உணரமுடிந்தால், அக் குழுவில் பணிபுரிவோர் தகுந்த பயனடைந்தவராவர் என்பது உறுதி.

வாழ்க்கையின் உண்மைகளைப்பற்றிய ஆழ்ந்த பரிச்சயம், எந்தச் சமூக சாஸ்திரத்திற்கும் சிறந்த முகவுரையாகும்.

# திட்டத்தின் அமைப்பு

மத்தியப் பிரதேசம் (ஜபல்பூர் டிவிஷன்), மகாராஷ்டிரம் (நாகபுரி டிவிஷன்) ஆகியவற்றில் தொடர்ச்சியாகப் பதினறு மாவட்டங்களில் தொடக்க ஆராய்ச்சிக்கான முதல்திட்டம் 1959ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1959ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் தொடக்க ஆராய்ச்சி செய்வதற்காக இருவரும், அவர்களுடன் ஒரு புகைப்படக்காரரும் அனுப்பப் பட்டனர். பல வகுப்பினர் வசித்து வரும் ஒரு கிராமத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் அவர்கள் தங்கவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இத் தொடக்க அறிக்கையை ஆய்ந்ததன் பயனக இப் பணியில் உள்ள குறைகளைத் தேர்ந்து, திட்டத்தில் சிறிதளவு மாறுதல் ஏற்பட்டது (பிற்சேர்க்கை 1). இதனுல் கிராமத்தில் ஆராய்ச்சியாளர் தங்கவேண்டிய காலம் ஒரு வாரம் என்று தீர்மானிக்கப்பட்டது.

1959ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் அக்டோபர் மாதம் வரையில் இத் திட்டத்திற்கான ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் வேலையின் பெரும்பான்மைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பதினறு பேர்களில் ஒன்பது பேர் ஏற்கெனவே ஆராய்ச்சிக் குழுவில் பணி புரிவோராவர். மீதி ஏழு பேர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்களில் இருவர் மானிடவர்க்க முன்னேற்றவியல் வல்லுநர். மற்ற இருவர் பூமிநூல் வலலுநர்; மற்றவர் மானிட இயல் ஆராய்ச்சியில் எம்.ஏ., அல்லது எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றவர். மேலே கூறப்பட்ட இம் முழுநேர ஆராய்ச்சியாளரைத் தவிர, வேறு சிலரும் தமது உதவியை இவ் வாராய்ச்சிக்கு அளித்துள்ளனர். அவர்கள் கெ. என். துசு (காஷ்மீரம், மத்தியப் பிரதேசம்), பீமன் தாஸ்குப்தா, எச். பானர்ஜீ, தாராஷிஷ் முகர்ஜீ (மேற்கு வங்காளம்), டி. ஹஜ்ரா, டி. எஸ் டாண்டன் (மத்தியப் பிரதேசம்).

ஆராய்ச்சிக் களத்துக்குப் பலவகைப்பட்ட பணியாளர்களை அனுப்பு முன்னர், நாகபுரி மாவட்டத்தில் மேற்பார்வையாளரின் கீழ் அக் குழுவினர் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட ஒரு கிராமம் ஆராய்ச்சிக்கென அளிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தமது பணியைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கே இவ்வாறு செய்யப்பட்டது. கீழே கொடுத்திருப்பதுபோல் பலவகைப்பட்டவர்க்கும் வேலை பங்கிட்டுக் கொடுக்கப்பட்டபோது, ஆராய்ச்சியாளருக்குக் கிராமமக்கள் பேசும் மொழி புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்படி தீர்மானிக்

கப்பட்டது. மொழிபெயர்ப்பாளரின் உதவியின்றியே, ஆராய்ச்சி செய்வோர் தமது பணியைச் செய்வதற்கு இது பயன்படுமென்று கருதப்பட்டது.

பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட பணி பின்வருமாறு :

| இராச்சியம் | ஆராய்ச்சியாளர் |
|---|---|
| அஸ்ஸாம் | என். கே. சியாம் சௌத்ரி, எஸ். கெ. பிஸ்வாஸ் |
| மேற்கு வங்காளம் | ஜெ. தத்த குப்தா, எஸ். நந்தி |
| ஒரிஸ்ஸா | என். கெ. பெஹரா |
| ஆந்திரா | இ. இராமசுவாமி |
| சென்னை | சி. ஆர். இராஜலட்சுமி |
| கேரளம் | பி. ஆர். ஜி. மதூர் |
| மைசூர் | எஸ். ஜி. மொராப் |
| மகாராஷ்டிரம் | எம். எஸ். அர்தபுரே, எஸ். முகர்ஜி |
| குஜராத் | எம். எஸ். அர்தபுரே |
| இராஜஸ்தானம் | பி. கெ. மிஸ்ரா |
| உத்தரப் பிரதேசம் | டி. எஸ். தியாகி, பி. என். சரஸ்வதி, எஸ். முகர்ஜீ, பி. கெ. தாஸ்குப்தா |
| பஞ்சாப் | டி. எஸ். தியாகி |
| இமாசலப் பிரதேசம் | பி. கெ. தாஸ்குப்தா |
| பீஹார் | எஸ். கெ. கங்குலி |
| மத்தியப் பிரதேசம் | பி. ராய்சௌத்ரி, எஸ். கெ. பிஸ்வாஸ் |
| காஷ்மீரம் | கெ. என். துசு |

1959ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1960ஆம் ஆண்டு மார்ச்சு, 1960ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1961ஆம் ஆண்டு மார்ச்சு ஆகிய ஆராய்ச்சிக் காலங்களில் இந்தியாவிலுள்ள 322 மாவட்டங்களில் 311 மாவட்டங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அநேகமாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராமம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் பூகோளரீதியாகவும், வகுப்பு வாரியாகவும் வேறுபாடுகள் காணப்பட்ட இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் ஆராயப்பட்டன. இவ்வாறு 430 கிராமங்கள் ஆராயப்பட்டன. வெவ்வேறு மாவட்டங்களைப் பார்வையிடுகையில் நகர நாகரிகம் பரவியிருந்த கிராமங்களையும், பழங்குடியினர் மட்டுமே வசித்துவந்த கிராமங்களையும் ஆராய்ச்சிக் கெடுத்துக் கொள்ளப்படவில்லை. ராஞ்சி, பஸ்தார், காரோ குன்றுகள் ஆகியவற்றில் இப் பழங்குடியினரே பெரும்பான்மையோராதலால், அவ்விடங்கள்மட்டும் ஆராய்ச்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

• ஆராய்ச்சிக் களத்திலிருந்து புள்ளிவிவரங்கள் வரத்தொடங்கிய போது, அவை 9″ × 5″ அளவுள்ள அட்டைகளில் (அனுபந்தம்—3) எழுதப்பட்டன. அசல் திட்டத்தில் (அனுபந்தம்—1) காணப்பட்ட 19 விஷயங்கள், 41 தலைப்புகளாகப் (அனுபந்தம்—2) பிரிக்கப் பட்டன.

இத் தொடக்க அறிக்கை 11 தேர்ந்தெடுக்கப்பட்ட குணங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அவையாவன: குடியேற்ற அமைப்பு, வீட்டின் வகை, உணவு, பயன்படுத்தப்பட்ட கொழுப்புகளும் எண்ணெய்களும், ஆண் பெண்கள் ஆடைகள், காலணி, மாட்டு வண்டி, கலப்பை, உமிநீக்குவதற்கான கருவிகள், எண்ணெய்ச் செக்கு என்பனவாம். ஆராய்ச்சிக் களத்தில் பணிபுரியும் ஒவ்வொரு வரும், ஒரு குறிப்பிட்ட இராச்சியத்தில் பல மாவட்டங்களை ஆராய்ந்தனர். ஆனால், அகில இந்திய அறிக்கை வெளியிடப்பட்ட போது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளரிடம் ஒவ்வோர் இயலும் ஒப்படைக்கப்பட்டது.

இப் பதினொரு குணங்களைப்பற்றிய விரிவான அறிக்கைகளும், அட்டைகளில் புள்ளிவிவரங்களை எழுதும் பணியும் 1961ஆம் ஆண்டு இறுதியில் முடிவடைந்துவிடும். இதர பொருட்களின் குணங்களைப் பற்றிய (கூடை முடைதல், மட்பாண்டம் செய்தல் முதலியனவும், கிராம தேவதைகள், திருவிழாக்கள், சுகாதாரப் பழக்கங்கள் முதலி யனவும்) அறிக்கை விரைவில் வெளிவரும்.

இந்தியப் மானிட இயல் ஆராய்ச்சி இலாகா, தம்மிடமுள்ள புள்ளி விவரங்களை (அட்டைகளிலுள்ளவை) ஏதேனும் ஆராய்ச்சிக் குழு அல்லது அறிஞர்கள் ஆகியோருக்குத் தேவையானால் பயன் படுத்துவதற்கு வழங்குவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கென இவ்வட்டைகளிலுள்ள புள்ளி விவரங்களின் பல நகல் களைத் தட்டெழுத்தினால் தயாரிக்கலாம்; அல்லது மைக்ரோஃபிலிம் சுருளில் இப் புள்ளி விவரங்கள் அனைத்தையும் படம் பிடித்துக் கொள்ளலாம்.

ஹபூரில், ஹபூர் கல்லூரியில் புவியியல் இலாகாவின் தலைவ ரான பேராசிரியர் எஸ். டி. கௌசிக் வடமேற்கிந்தியாவில் நமது ஆராய்ச்சியை மேற்பார்வையிடுவதற்குப் பெரிதும் உதவி செய் துள்ளார். அவரது அன்பினால் ஏற்பட்ட உழைப்பிற்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொருள்களின் அளவில் இந்திய கலாசாரத்தைப்பற்றிய செய்திகளை அளிப்பதுடன், இளைஞர்களான மானிடஇயல் ஆராய்ச்சி

யாளரைக் கொண்ட ஒரு குழுவைத் தயாரிப்பதும் இவ்வாராய்ச்சியின் நோக்கமாகும். கலாசார விஷயங்களைப்பற்றிச் சரியாகக் கவனித்தல், இயற்கைச் சூழ்நிலை, மொழி, சாதி ஆகியவற்றுடன் அவற்றின் தொடர்புகளை அறிதல், அமைப்பு, நிகழ்ச்சிமுறை ஆகியவற்றிற்கேற்ப அவ் விஷயங்களைப் பிரித்தல் ஆகியவற்றில் அவ் விளம் மானிட இயல் ஆராய்ச்சியாளர் தேர்ச்சி பெறவேண்டும். இத் திட்டம் குறைந்த கால அளவில் பல இடர்களுக்கிடையே செயலாக்கப்பட்டுள்ளது; இருப்பினும் கலாசார விஷயங்களைப்பற்றியாகிலும் இந்தியாவைப்பற்றி அறிதல், குழுவில் ஒற்றுமையுடன் பணிபுரியும் நல்ல மனப்பான்மையை ஏற்படுத்துதல் ஆகிய இரு நோக்கங்களும் ஓரளவு வெற்றியடைந்துள்ளனவென்று கூறலாம்.

திட்டக் குழுவில் பணியாற்றிய அங்கத்தினர்களின் ஆர்வமும், உறுதி ஆகியவை எனக்குப் புத்துணர்ச்சி அளிப்பவையாக இருந்தனவென்பதைத் திட்டப் பொது மேற்பார்வையாளனாகிய நான் குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஆகஸ்டு 10, 1961. சுராஜித் சந்திரசின்ஹா

# உள்ளுறை

அத்தியாயம் | பக்க எண்


| அத்தியாயம் | | | | பக்க எண் |
|---|---|---|---|---|
| நூன்முகம் | | | | iv |
| முன்னுரை | | | | v |
| திட்டத்தின் அமைப்பு | | | | ix |
| 1. | கிராமங்களின் அமைப்பு | ... | ... | 1 |
| 2. | குடில்களின் வகைகள் | ... | ... | 20 |
| 3. | முக்கிய உணவு | ... | ... | 42 |
| 4. | எண்ணெய்களும் எண்ணெய்ச் செக்குகளும் | | | 46 |
| 5. | கலப்பைகளும் உமி நீக்கும் கருவிகளும் | | ... | 58 |
| 6. | ஆண்களின் உடை | ... | ... | 78 |
| 7. | பெண்களின் உடை | ... | ... | 92 |
| 8. | காலணி | ... | ... | 113 |
| 9. | மாட்டு வண்டிகள் | ... | ... | 123 |
| | அனுபந்தம் 1 | ... | ... | 131 |
| | அனுபந்தம் 2 | ... | ... | 136 |
| | அனுபந்தம் 3 | ... | ... | 141 |

# இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை

# 1. கிராமங்களின் அமைப்பு

(சாந்திபூஷன் நந்தி, D. S. தியாகி)

இந்தியாவில் ஐந்தரை லட்சம் கிராமங்களுக்குமேல் உள்ளன. ஜனத்தொகையில் ஒரு பெரும் பகுதியினர் கிராமங்களில் வசிக்கின்றனர். சில கிராமங்கள் சிறியவை; சிலவற்றில் மக்கள் வசிப்பதேயில்லை; பெரிய கிராமங்கள் பலவுள்ளன. சில பெரிய கிராமங்களில் மக்கள் தொகை சுமார் பத்தாயிரம்வரை காணப்படுகிறது.

கிராம மக்கள் குடியானவர்களாகவோ, வியாபாரிகளாகவோ, குடிசைத் தொழில் செய்பவராகவோ, அறிஞர்களாகவோ, மத குருக்களாகவோ பணிபுரிகின்றனர். பெருவாரியான மக்களின் தொழிலைக் கொண்டு கிராமங்களைப் பலவாருகப் பிரிக்கலாம். மேலும், கிராம மக்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பர் ; சாதி அல்லது மதத்தைப் பின்பற்றுவதில் வேறுபட்டும் நிற்பர் ; இவற்றையொட்டி கிராமங்களைப் பிரிக்கவும் செய்யலாம். இவ்வாறன்றிக் கிராமங்களின் அமைப்பை யொட்டிப் பிரிப்பது சிறந்ததாகவுள்ளது. இவை இனத்துக்கினம் மாறுபடுகின்றனவாதலால் வெவ்வேறு வகையான அமைப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகையும் குறிப்பிட்ட ஒரு தலைப்பின்கீழ் வகைப்படுத்த முடியாதபடி பல பொதுப்படையான இயல்புகளைப் பெற்றிருத்தலைக் காணலாம். கிராம அமைப்புகளைக் கீழ்க்கண்ட வகையில் குறிப்பிடலாம் :

1. உருவமற்ற கிராமங்கள். இவற்றில் தெருக்கள் முதலியவை திட்டப்படி போடப்பட்டவையல்ல ; இவை ஒரே இடத்தில் குவிந்து கிடக்கின்றன. பெரிய அளவில் உள்ளவை என்றும், சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து காணப்படுபவை (சிறிய அளவினையுடைய பல குடிசைகள் சிதறி இருப்பதால் கிராமம் என்று பெயர்பெற்றவை) என்றும் இவற்றை இரு பிரிவுகட்குட்படுத்தலாம்.

மேலே கூறப்பட்டுள்ள கிராமங்களில் சாலைகள் பெரும்பாலும் வளைந்து வளைந்து செல்கின்றன. இவை இன்று திட்டமிட்டு செய

லாக்கப்பட்டவையல்ல ; தேவைக்கேற்ப அவ்வப்போது அமைக்கப் பெற்றவையேயாம்.


2. நீண்ட வடிவில் ஒழுங்காகச் செல்லும் நீண்ட தெருவுடன் அமைக்கப்பட்ட கிராமங்கள். இவற்றில் தெருவின் இருபுறங்களிலும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

3. சதுர வடிவமாகவோ, நீண்ட சதுர வடிவமாகவோ அமைக்கப்பட்டுள்ள கிராமங்கள். இவற்றில் சாலைகள் ஒன்றுக்கொன்று இணையாகவோ, அல்லது செங்கோண வடிவிலோ அமைந்துள்ளன.


4. சில கிராமங்களில் வீடுகள் ஆங்காங்கே தனித்தனியாகச் சிதறுண்டு காணப்படுகின்றன. வரி வசூல் செய்வதற்கேற்றபடி இவை அமைந்துள்ளனவென்று ஊகிக்கலாம்.

கிராம அமைப்பின் மூலத்திலும் சிறப்பியல்பிலும் பல்வேறு விஷயங்கள் உள்ளடங்கியுள. வகைப்படுத்தும்பொழுது, எங்கெங்கே இயலுமோ அங்கங்கே இவை கவனிக்கப்படுகின்றன. உதாரணமாக, கூட்டங்கூட்டமாகக் காணப்படும் சில கிராமங்கள் பாதுகாப்பிற்காகக் கருங்கற் சுவர்களாலும், அல்லது மர வேலிகளாலும் சூழப்பெற்றுள்ளன. மலைநாட்டில் உள்ள கிராமங்கள் நீளமான வடிவில் அமைந்துள்ளன. இவ் வகைக் கிராமங்களை மற்றவைகளோடு ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது அவை முதற்பிரிவின்பாற்படுகின்றன. வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டத்தில் மேட்டு நிலத்தில் கிராமங்கள் கட்டப்படின், அவையும் முதற்பிரிவின்கண்ணே வைக்கப்படவேண்டியனவாம். மக்கள் தொகை பெருகப்பெருக இவ்வகைக் கிராமங்கள் அமைப்பில் மாறுபடுகின்றன. தெருக்கள் ஒன்றுக்கொன்று இணையாகவோ, அல்லது செங்கோண ரீதியாகவோ ஏற்பட்டுக் கிராமங்கள் சதுர வடிவில் காட்சியளிப்பதும் உண்டு. கிராம அமைப்பில் திறந்த நீண்ட தெருக்களைக் கொண்ட இரண்டாவது வகையைச் சேர்ந்தவற்றை இம் முதற்பிரிவிலிருந்து பிரித்துத் தெரிந்துகொள்வது கடினமன்று. மேலே கூறப்பட்டுள்ள முதல் வகையைச் சேர்ந்த கிராமங்கள் சந்தர்ப்பவசத்தால் சதுர வடிவை ஒத்திருக்கின்றனவேயன்றி வேறல்ல.

பூகோளரீதியான காரணங்களாலும், இதர பல காரணங்களாலும் இவ்வாறு கிராமங்கள் ஒரே போக்காகக் காணப்படுவது உண்டு. இவ்விதம் வீடுகளும் வயல்களும் உயர்ந்த குன்றுகளிலோ, பாலை நிலங்களிலோ அல்லது காடுகளின் நடுவிலோ தனியே காணப்படுகின்றன.




படம் 1. இமயமலையை யடுத்துள்ள பஞ்சாப் பகுதியில் குடிசைகளின் சிறிய கூட்டங்கள்.



படம் 2. மேற்கு உத்தரப் பிரதேசத்தில் உருவமற்ற கூட்டங்களாக இருக்கும் குடிசைகள். இவை மட்டநிலையான கூரைகளைப் பெற்றுள்ளன.


உயரமிக்க இமயமலைத்தொடர்களில் காணப்படும் கிராமங்களில் கால்நடைகள் ஏராளமாகவுள்ளன. சமீபகாலம் வரையிலும் இந்தியாவுக்கும் திபெத்துக்குமிடையே இவை போக்குவரத்துக்குப் பயன்பட்டன. இவ்வகைக் கிராமங்களில் குளிர்காலத்தில் வசிப்பதற்கெனத் தனி முகாம்களும், வேனிற்காலத்திற்கெனத் தனி முகாம்




படம் 3. மேற்கு வங்காளத்தில், பிர்பும் மாவட்டத்தில், மத்தியில் முற்றங்களைப் பெற்றுள்ள தனித்தனிப் பண்ணையோடு கூடிய வீடுகள்.

களும் உள்ளன. வருடத்தில் சில மாதங்களில் இவை திறக்கப்படாமலே இருக்கின்றன. வட இந்தியச் சமவெளியில் மக்கள் உருளைக்கிழங்கைப் பயிர் செய்கின்றனர். வயல்களுக்கு நடுவே இவர்களது வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வயலில் பணிபுரியவும், பயிர்களைக் கவனித்துக்கொள்ளவும் இவை இவ்வாறு கட்டப்பட்டுள்ளன.

இந்தியாவின் பல பகுதிகளில் இவ்வாறு வயல்களுக்கு நடுவே உருவமற்ற குடியேற்றங்கள் காணப்படுகின்றன. மாளவப் பீடபூமியில் சிதறுண்ட கூட்டங்களாகவுள்ள கிராமங்கள், சதாராவிலிருந்து கேரள இராச்சியத்தின் மலைகள்வரை நீண்டு, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்களை அடுத்துக் காணப்படும் கிராமங்கள், இமயமலைப் பிரதேசத்தின் உயரமான பகுதிகளான காஷ்மீரம், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றில் காணப்படும் கிராமங்கள் ஆகியவை, மேலே கூறப்பட்டுள்ளவற்றிற்குச் சில உதாரணங்களாகும். உத்தரப் பிரதேசத்தின் கிழக்கிலும் பீஹாரிலும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் ஜில்லாக்களில், நதிகளுக்கிடையே காணப்படும் வீடுகளில் மக்கள் சில மாதங்களில் வசிப்பதேயில்லை. தனித்தனியாகக் காணப்படும் இவ் வீடுகள் எந்த அமைப்பின்படியும் கட்டப்



படம் 4. ஆந்திரப் பிரதேசத்தில், கடப்பை மாவட்டத்தில், கூம்புபோன்ற கூரைகளைப் பெற்றுள்ள தனியான குடிசைகள்.



படம் 5. மேற்கு வங்காளத்தில், 24-பர்காணைக்களின் மாவட்டத்தில், மத்தியில் முற்றங்களுடன் தனித்து நிற்கும் வீடும் பண்ணையும்.


பட்டவையல்ல. இடத்தின் அவ்வப்போதைய தேவைகளுக்கேற்ப இவை ஏற்பட்டுள்ளன.

உருவமற்ற கூட்டமாகத் திகழும் கிராமங்களும், நீண்ட சாலைகள் அல்லது சதுரவடிவச் சாலைகள்கொண்ட கிராமங்களும் குறிப்பிடத்தக்க நிலப்பகுதிகளிலேயே காணப்படுகின்றன. இவை பூகோள அமைப்பினுல்மட்டும் ஏற்பட்டவையல்ல. வெவ்வேறு வகையான தட்பவெப்பநிலை, மண், விவசாய முறை ஆகியவை களை இவை பெற்றிருப்பதனுல், இவை பழக்கவழக்கங்களால் ஏற்பட்ட அமைப்புகளே தவிர, பூகோள அமைப்பினுலோ விவசாயத் திணுலோ ஏற்பட்டவையல்ல என்றறியலாம்.

இந்தியக் கிராம அமைப்பைக் குறிக்கும் தேசப்படத்தை நோக்கினுல் கங்கைச் சமவெளி, இராஜஸ்தானம், மாளவ பீடபூமி, மகாராஷ்டிரத்தின் சில பகுதிகள் ஆகியவற்றில் ஒழுங்கற்ற கூட்டங்களாகக் கிராமங்களே காணப்படுகின்றன. சிதறுண்டு கிடக்கும் வகைகள், மேற்கு இராஜஸ்தானத்தைச் சேர்ந்த ஜெய்சால்மர், பார்மர் ஜில்லாக்களில் உள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தானுவிலிருந்து கோல்ஹபூர், கேரளாவின் சில பகுதிகள் ஆகியவற்றில் ஆங்காங்கே தனித்தனிக் கூட்டமாகச் சிதறுண்டிருக்கும் கிராமங்களைக் காணலாம். மேற்குறிப்பிடப்பட்ட இரு வகைகள் கிழக்கு உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகள், பீஹாரின் வடக்கில் காணப்படும் இமயமலையைச் சேர்ந்த ஜில்லாக்கள், ஏறக்குறைய பிரம்மபுத்திரா நதியின் பள்ளத்தாக்கு ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. மணிபுரி, மீசோ மாவட்டம் (Mizo District) ஆகியவையும் கூட்டமாக இருக்கும் அமைப்புக்கு உதாரணங்களாகும்.

நீளமான அமைப்புக்குச் சிறந்த உதாரணங்களை ஒரிஸ்ஸா, ஆந்திர இராச்சியங்களின் கடற்கரையை அடுத்துள்ள மாவட்டங்களில் காணலாம். முன்னர் முடியாட்சிக்குட்பட்டிருந்த ஐதராபாத் இராச்சியத்தில் மேற்குப் பகுதியில் தெலுங்கு மொழி பேசும் இடங்களிலும் இவ்வமைப்புக் காணப்படுகிறது. குஜராத்தில் இவ்வகை அமைப்பைக் காணலாம். இங்கு அகலமான நீண்ட சாலைகளைக் கொண்டுள்ள பெரிய கிராமங்கள் உள்ளன. இராஜஸ்தானம் முதல் தெற்கில் சூரத் வரையிலும் உள்ள ஜில்லாக்கள், கட்சு, சௌராஷ்டிரம் ஆகியவையும் இவ்வகையைச் சேர்ந்தவையே.

நீண்ட தெருக்கள் தேவைக்கேற்பச் சதுர வடிவமுடையனவாகின்றன என்றறிந்தோம். சென்னை இராச்சியத்தின் பெரும்பகுதி, வரட்சி மிக்க இராயலுசீமை மாவட்டங்கள், செழிப்பு மிக்க பயிர்த்




படம் 6. உத்திரப் பிரதேசத்தில், வாரணாசி மாவட்டத்தில், ஓட்டுக் கூரைகளையுடைய குடிசைகள். இவை உருவமற்ற கூட்டங்களாகவுள்ளன.

தொழில் நடைபெறும் கடற்கரையை அடுத்துள்ள மாவட்டங்கள் ஆகியவற்றில் இவ்வகை அமைப்புக் காணப்படுகிறது.




படம் 7. ஆந்திரப் பிரதேசத்தில், கர்நூல் மாவட்டத்தில், மட்டநிலையான கூரைகளையுடைய குடிசைகள். இவை நீண்ட வடிவில் கூட்டமாகவுள்ளன.

ஆந்திராவின் வடக்குக் கடற்கரையிலும், ஒரிஸ்ஸா கடற்கரையிலும் குறிப்பிடத்தக்க சுவையான அம்சமொன்றுள்ளது. இங்குள்ள வீடுகள் நீண்ட தெருவின் இரண்டு ஓரங்களிலும் நெருக்கமாகக் காணப்படுகின்றன. இரண்டு வீடுகளுக்குப் பொதுவாக ஒரே




படம் 8. ஒரிஸ்ஸாவில், பூரி மாவட்டத்தில், மத்தியில் முற்றங்களுடைய வீடுகள்—நீண்ட வடிவக் கூட்டம்

சுவர் இருப்பது இங்கு சாதாரணம். ஆயின், சென்னை இராச்சியத்திலும் இவ்வகை அமைப்புத் தொடர்ந்து காணப்படினும், அங்கு வீடுகளுக்குப் பொதுச் சுவர்கள் கட்டப்படாதது குறிப்பிடத்



படம் 9. ஆந்திரப் பிரதேசத்தில், நெல்லூர் மாவட்டத்தில், நீண்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ள கூட்டம்.




படம் 10. குஜராத்தில், ஜாம்நகர் மாவட்டத்தில், நீண்ட வடிவக் கூட்டம்.

தக்கது. கூரை வேயும் முறையிலும், புறக்கடையின் அமைப்பிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அடுத்து வரும் இயலில்

(chapter) மக்கள் வசிக்கும் வீடுகளைப்பற்றிப் பார்க்கும்போது இவற்றைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ளலாம்.


இந் நிலையில் நாம் கவனிக்கவேண்டியதொன்றுளது. நீண்ட சதுர அமைப்புகளைக் கொண்டுள்ள அமைப்புகளின் பரப்புகள்




உத்தரப் பிரதேசத்தில் உருவமற்ற கூட்டம்


வெவ்வேறு எல்லைகளின் குறுக்கே செல்வது குறிப்பிடத்தக்கது. தெற்கில் தெலுங்கு, தமிழ், கன்னட மொழிகள் பேசப்படும் இராச்சியங்களும், வடக்கில் இந்தோ-ஆரிய மொழி பேசப்படும் ஒரிஸ்ஸாவும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளும், இந்தோ - ஆரிய மொழி

பேசப்படும் கூர்ஜரம் ஆகியவற்றில் சில பகுதிகளும், பீஹாரில் பழங்குடி மக்கள் வசித்துவரும் சாந்தலர் பர்காணுவும் இப் பிரிவினுள் அடங்குபவையாகும். சாந்தலர் பர்காணுவில் பேசப்படும் மொழி,





மத்தியப் பிரதேசத்தில் தனித்தனி வீடும் பண்ணையும்


இதர மொழிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். சாந்தலர் முன்னொரு காலத்தில் ஒரிஸ்ஸாவிலிருந்து வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் குடியேறினவர்கள் என்று கருதப்படுகிறது. இவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் நீண்ட வடிவமுடைய கிராமங்களை அமைத்துக்கொண்டனரென்பது தவருன கருத்தாகாது.





நீண்ட வடிவக் கட்டம், ஒரிஸ்ஸா





ஒரு சதுரத்தில் நீள வடிவமாக அமைக்கப்பட்ட வீடுகளோடு கூடிய நீள்சதுர அமைப்புடைய கிராமம். தெளிச்சாத்தநல்லூர் கிராமம், இராமநாதபுரம் ஜில்லா, சென்னை இராச்சியம்.




சிதறுண்டு கிடக்கும் கூட்டங்கள், உத்திரப் பிரதேசம்.



படம் 11. குஜராத்தில் சபர்காந்தா மாவட்டத்தில் நீண்ட வடிவக் கூட்டம்.




Regd. No. 2979 E'61-2300.

© GOVERNMENT OF INDIA COPYRIGHT 1961

Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

கிராமங்களின் அமைப்பு

அகலமான வீதிகள், பல தெருக்கள் முதலியவற்றைக் கொண்ட கிராம அமைப்புக்கும், மொழிவாரி அமைப்புக்கோ அல்லது இந்திய இராச்சியங்களின் எல்லைகளுக்கோ எந்தவிதமான தொடர்பும் காணப்படவில்லை. மொழிவாரியான இராச்சியங்கள் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்டவையேயாம்.

# 2. குடில்களின் வகைகள்

## (Types of Cottages)

(சுகாஸ் கெ. பிஸ்வாஸ், என். கெ. பெஹரா)

தரையமைப்பு, கூரை ஆகியவற்றின் இயற்கையை யொட்டி கிராமீய இந்தியாவில் மக்கள் வசிக்கும் வீடுகளைப் பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முற்றத்தின் இட அமைப்பு, குழிநாட்டும் கல் இருப்பது அல்லது இல்லாமல் இருப்பது, அஸ்திவாரம் அல்லது குழிநாட்டும் கல்லின் உயரத்தில் காணப்படும் தாரதம்மியம் ஆகியவற்றைக் கொண்டும் வேறு வகையாகக் குடில்களைப் பிரிக்கவியலும்; கட்டடங்களில் மூன்று வகைகள் பின்வருமாறு :

(1) நீண்ட சதுரத் தரை அமைப்பும் மட்டமான கூரையும் உள்ளவை.

(2) நீண்ட சதுரத் தரை அமைப்பும் சாய்வான கூரையும் உள்ளவை.

(3) வட்டமான தரை அமைப்பும் கூம்புவடிவக் கூரையும் உள்ளவை.

### மட்டமான கூரையையுடைய நீண்ட சதுரத் தரையமைப்பு

ஏறக்குறைய 25 அங்குல மழையளவைப் பெறும் பிரதேசங்களில்மட்டுமே மட்டமான கூரைகளையுடைய குடில்கள் காணப்படுகின்றன. இவை தென்மேற்குக் காஷ்மீரம், காங்கிராவைத் தவிர பஞ்சாபின் இதர பகுதி, உத்தரப் பிரதேசத்தில் 30 அங்குலத்திற்குக் குறைந்த மழையளவைப் பெறும் இருபத்துநான்கு பர்காணுக்கள், இராஜஸ்தானத்தில் கிழக்கு ஜில்லாக்களைத் தவிர இதர பகுதி, மத்தியப் பிரதேசத்தில் ரட்லம் (Ratlam), தார் (Dhar) ஆகிய பகுதிகள், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த கிழக்கு, மேற்குக் காந்தேஷ், புல்தானு, அவுரங்கபாத், பார்பானி, பிர், நாந்தத், அகமத் நகர், உஸ்மானுபாத் ஆகிய இடங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. தெற்கில் இவ்வகைக் குடில்கள் மைசூர், ஆந்திரப் பிரதேசம் ஆகிய

வற்றின் சில பகுதிகளில் மட்டுமேயுள்ளன. கேரளா அல்லது சென்னையில் இவ்வகைக் குடில்களுக்கு மழையளவு ஏற்றதாக இல்லை. மைசூரில் தார்வார், மாண்டியா, கோலார், ரெய்ச்சூர், பிஜப்பூர் முதலிய பன்னிரண்டு மாவட்டங்களிலும், ஆந்திராவில் கர்நூல், அனந்தப்பூர், கடப்பா, மேடக் முதலிய ஒன்பது மாவட்டங்களிலும், மட்டமான கூரைகளையுடைய குடில்கள் அநேக இடங்களில் காணப்படுகின்றன.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள விதங்களில் பொதுவான வேறுபாடுள்ளது. ஆயின், குடில்களின் வரிசைக்கிரமமான அமைப்பிலிருந்தும் இவ் வேறுபாடு தோன்றுவதும் இயற்கையே. ஏனெனில், வடக்கில் கிராமங்கள் உருவமற்ற கூட்டங்களாகவும், தெற்கில் நீண்ட தெருக்களையுடையனவாகவும் காட்சியளிக்கின்றன. இதைத் தவிர, தெற்கில் காணப்படும் உதாரணங்கள் பொதுவாகத் திறந்த வெளியோடுகூடிய நடுமுற்றத்தைப் பெற்றுள்ளவையல்ல. மைசூர், சென்னை ஆகிய இடங்களில் வீட்டின் பின்பக்கத்தில் புறக்கடையமைக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் இது வீட்டின் முன் பக்கம் காணப்படுகின்றது. வடக்கில் பர்தா முறை அனுஷ்டிக்கப்படுவது, வீட்டில் பெண்கள் பணிபுரியும் மத்திய பாகத்தில் திறந்த முற்றங்கள் கட்டப்பட்டிருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். வடக்கில் இருக்கும் அளவுக்கு பர்தா முறை தெற்கில் காணப்படவில்லை. ஒருவேளை, வடக்கு, தெற்கு ஆகியவற்றில் முற்றத்தின் இட அமைப்பில் உள்ள வேறுபாட்டிற்கு இது காரணமாக இருக்கலாம். மகாராஷ்டிராவில் மத்தியில் முற்றம் இருக்கிறது; ஆனால், அங்கு பர்தா முறை பின்பற்றப்படவில்லை. எனவே, வீட்டின் மத்தியில் முற்றம் கட்டப்படுவதற்குப் பர்தா முறை காரணமாக இருக்கலாம்; அல்லது காரணமல்லாமலும் இருக்கலாம் எனத் தெரிகிறது.

மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசத்தை அடுத்துள்ள மாவட்டங்கள் ஆகியவற்றில் வீடுகளைச் சுற்றி மதிற்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. உட்புறச்சுவரில் தொடர்ச்சியாக அறைகள் காணப்படுகின்றன. ஆனால், வடக்கிலுள்ள மாவட்டங்களில் மத்தியில் முற்றங்களைக் கொண்டுள்ள தனித்தனிக் குடில்கள் உள்ளன. ஏழைகளின் குடில்களில் முற்றத்தின் ஒரு பக்கத்தில்மட்டும் அறைகள் உள்ளன. இதையடுத்துப் புற்களால் கூரை வேயப்பெற்ற வராந்தாவும் உள்ளது. அதிக இடவசதி வேண்டியபோது, முற்றத்தைச் சுற்றி மேலும் அறைகளைக் கட்டிக்கொள்வர்.

குறைந்த வருவாயைப் பெறும் மக்களின் குடில்களில் குழி நாட்டுக்கல் குறிப்பிடத்தக்க முறையில் அமைந்திருக்காது.

செல்வர்கள் சுமார் இரண்டு அடி உயரமுள்ள குழிநாட்டுக்கல்லை நாட்டுவர். பொதுவாகக் குடில்கள் கட்டுவதற்கு மண் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், கர்நூல், பீஜப்பூர்போன்ற தெற்குப் பகுதிகளில், கருங்கற் பலகைகள் மண்ணில் பதிக்கப்படுகின்றன. சூரியவெப்பத்தால் செய்யப்பட்ட செங்கற்களும், சூளையிலிடப்பட்டுச் சுட்ட செங்கற்களும், வீடு கட்டப் பயன்படுகின்றன. ஆயின், இவையனைத்தும் வீட்டுக்காரரின் பொருளாதார வசதியைப் பொறுத்தேயிருக்கும்.

மட்டமான கூரை மரப்பலகைகள், கோரைப்புல், மூங்கில் பாய்கள் ஆகியவற்றால் கட்டப்படுகின்றது. இராஜஸ்தானம், பஞ்சாப் போன்ற இடங்களில் கற்பலகைகளினாலும் (stone slabs) கூரை கட்டப்படுகிறது. இதன்மேல் மண்ணிட்டு நன்றாகப் படியச் செய்கிறார்கள். இதற்குமேல் சிலர் கூரையைச் சாணியால் நன்றாக மெழுகுகின்றனர். ஏழை வீட்டுக்காரர்கள் கோரைப்புல், மூங்கில் முதலியவற்றாலான கூரைகளை வேய்கின்றனர். கூரையின்மேல் போடப்பட்டுள்ள மண், மூங்கில் அல்லது புற்களின் இடுக்குகள் வழியாகக் கீழே விழாதபடி உலர்ந்த இலைகள் கூரையின்மேல் அடுக்காகப் போடப்படுவதுமுண்டு.




படம் 12. மைசூரில், தார்வார் மாவட்டத்தில் தட்டையான கூரைகளில், மண்ணாலான புகைபோக்கிகள்.

திறந்த வெளியில் வராந்தாவிலோ, ஆகாயத்தின்கீழ் உள்ள முற்றத்திலோ சமையல் செய்யப்படுமிடங்களில், புகைப் பிரச்சினை கடுமையானதாக இருப்பதில்லை. ஆனால், தென்மேற்கு மைசூரில், அடுப்புகள் வீட்டினுள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, ஏதேனும் ஒருவகை புகைபோக்கி இவ்விடங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, லாக்குண்டி (Lakkundi) என்னும் கிராமத்தில் மண்ணால் செய்யப்பட்ட மூன்று புகைபோக்கிகள் ஒரே வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. குறுகிய ஒரே புகைபோக்கியைவிட.

இவற்றின் வழியாக அதிகப் புகை வெளியேற வழியுண்டு என்று இதனால் கருதப்படுகிறது. நாகபுரிப் பகுதியிலும், பஞ்சாப், காஷ்மீரம் ஆகிய இடங்களிலும் கூரையின்மேல் ஓர் ஓட்டை வைக்கப்பட்டுள்ளது. உடைந்த மண்பாண்டத்துண்டுகளால் இது மூடப்பட்டுள்ளது. மழைநீர் வீட்டினுள் புகுவதைத் தடுக்கவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

சாய்வான கூரையுடைய நீண்ட சதுர தரையமைப்பு

இஃது இந்தியா முழுவதிலும் சாதாரணமாகக் காணப்படும் அமைப்பாகும். ஆனால், தொடக்கத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும். இந்தியாவில் பெரும்பாலான நீள்சதுரமான வீடுகளில் நீண்ட சுவரில் கதவுகள் காணப்படுகின்றன. கதவுகளுக்கப்பால் அகன்ற பெரிய கூடம் அல்லது தனிப்பட்ட அறைகள் உள்ளன. ஆனால், கிழக்கு இமாலயப் பிரதேசத்தில் உட்புகும் வழி, அகலச் சுவரின் ஒரு மூலையில் காணப்படுகிறது. நீண்ட சுவரில் நுழைவுக்கான வழிகள் வைக்கப்பட்டோ அல்லது வைக்கப்படாமலோ இருக்கலாம்.



படம் 13. மேற்கு வங்காளத்தில் டார்ஜீலிங் மாவட்டத்தில் அகன்ற முனையில் கதவுகளுடன் கூடிய நீண்ட குடிசை.

செயல் முறையில் ஒரிஸ்ஸாவில் காண்பதுபோன்ற தனிப்பட்ட வாழ்க்கைக்கேற்ற விடுதிகளையும், தனித்தனி நுழைவாயிலையும் பெற்றுள்ள நீண்ட சதுர வடிவ வீட்டிற்கும், நீண்ட வடிவமுள்ளதும், ஒரே நுழைவாயிலைப்பெற்று, அதன் வழியாக வீடு முழுவதிலும் நுழைவதற்குத் தகுந்தபடி அமைந்துள்ளதுமான வீட்டிற்கும் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. முன்னர்க் கூறப்பட்ட வீட்டைவிட இங்குத் தனிமை (privacy) குறைவு. வடகிழக்கு எல்லைப்புறப் பிரதேசத்தில் வசிக்கும் 'ஆதி'களிடையே இவ்வகை வீடுகளைக் காணலாம்.


வடகிழக்கில் நீண்ட வீட்டில் மற்றுமொரு விஷயம் கவனிக்கத் தக்கதாகும். இங்கு நிலத்திற்குள் புதைக்கப்பட்ட குவியலின்மேல், மட்டநிலையான ஒரு மேடை உள்ளது. இம் மேடைமேல் வீடு கட்டப் பட்டுள்ளது. தரை சமநிலையற்றதாகவோ அல்லது வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடிய இடமாகவோ இருந்தால், இவ்வாறு வீடு கட்டப்படுகிறது. ஆனால், குவியலாலான வீடுகள் இந்தியாவில் வெள்ளப்பெருக்கேற்படும் இடங்களிலெல்லாம் காணப்படுவதில்லை. இவை பெரும்பாலும் பழங்குடிகளிடையேயும், வடகிழக்கு இந்தியா விலுமே உள்ளன. இதில் முக்கியமானது என்னவென்றால், குவியல் மீது மேடையும், மேடையின்மீது கட்டடம் கட்டும் முறையும் பர்மா, சயாம், தென்கிழக்கு ஆசியாவின் அநேக இடங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றனவேயாகும். எனவே, குவியலின்மீது கட்டப்பட்டு, அகலச்சுவரில் நுழைவாயிலைப் பெற்றுள்ள நீண்ட வீடுகள், இந்தியாவின் இதர பகுதிகளில் காணப்படும் குவியல்மீது கட்டப்படாத நீண்ட வீடுகளிலிருந்து வேறுபடுகின்றன என்றறிகிறோம்.

மட்டநிலையான கூரை வேயப்பெற்றுள்ள வீடுகளைப்போன்று, மக்கள் வசிக்கும் இடங்களிலுள்ள குடில்களின் அமைப்பும் உள்ளன. தற்பொழுதுள்ள குடில்கள் தனியாகவோ, கூட்டமாகவோ கட்டப்பட்டிருக்கலாம். இவை நடு முற்றத்தைப் பெற்றுள்ளன வாகவோ, வேலியிடப்பட்ட புறக்கடையை முன்புறம் அல்லது பின்புறம் பெற்றுள்ளனவாகவோ இருக்கலாம்.

வீட்டின் இதர உறுப்புகளை இனி ஒவ்வொன்றாக வருணிக்கப் புகுவோம். மண், கல், மூங்கில், பாய், மரக்கழிகள், பிரம்பு, மட்டிவர்ணப்பூச்சு ஆகியவற்றால் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதில் பிரதேசத்துக்குப் பிரதேசம் அநேகமாக எந்த மாறுபாடும் இல்லை; எளிதாகக் கிடைக்கும் பயனுள்ள எப் பொருளும் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒருவர் செல்வராக இருப்பாரேயானால், சுட்ட செங்கற்கள் அல்லது கல்லினால் சுவர் கட்டப்பட்டிருக்கும். ஏழையாக விருப்பின், அவன் மண், பிரம்பு, மட்டிவர்ணப்பூச்சு அல்லது சாதாரண மிலாறு வேலைப்பாடு எவையேனுமொன்றால் செய்யப்பட்ட சுவரைக்கொண்டு திருப்தியடைகிறான். இவை மரச்சட்டங்களில் பொருத்தப்படுகின்றன.

மண்சுவர் கட்டும் முறைகளில் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. உதாரணமாக, மேற்கு வங்காளத்தில் நல்ல களிமண் கிடைக்கிறது. இங்குக் களிமண்ணை வயல் வெளியில் நன்றாகப் பிசைந்து, அரிவாளால் துண்டு துண்டாக வெட்டி ஒன்றன்மீதொன்றாக அடுக்குகின்றனர்.

இவை சுடப்படாத செங்கற்களை ஒத்திருக்கின்றன. சொரசொரப் பானதும், மணற்பாங்கானதுமான களிமண் கிடைக்கும் இடங்களில், மண்ணை நீண்ட உருளைகளாக்கிச் சுவர் கட்டுகின்றனர். ஒரிஸ்ஸா விலும், மேற்கு வங்காளத்திலும் உருவமற்ற பெரிய களிமண்



படம் 14. குஜராத்தில், கைரா மாவட்டத்தில், மரச் சட்டங்களோடு கூடிய இரண்டடுக்கு வீடுகள்.

உருண்டைகளால் சுவர் கட்டுகின்றனர். இவ்வகை உருண்டைகள் ஒரு வரிசையாக அடுக்கப்பட்டு சிறிது உலரவைக்கப்படுகின்றன. அதன் பின்னர், அடுத்த வரிசை அடுக்கப்படுகிறது. இவை மிருது வாகக் காரையால் பூசப்பட்டாலொழிய, வெறும் அடுக்குகளாகத் தோற்றமளிக்கின்றன. தார்வார் மாவட்டத்தில் (லாக்குண்டி கிராமம்) களிமண்ணை முக்கோண வடிவத்தில் அடுக்குகின்றனர்.

இந்தியாவின் சில பாகங்களில், அல்லது பல வகுப்பினரிடையே, சுவர்களுக்குக் காரைபூசி, சிவப்பு, கறுப்பு முதலிய வண்ணங்களாலும்,

பறவைகள், விலங்குகள் முதலியவற்றின் உருவங்களாலும் அழகு செய்யும் வழக்கம் காணப்படுகிறது.

கூரை அடுத்தபடி முக்கியமானதோர் உறுப்பாகும். கூரை அமைக்கும் விதத்திலும், சாய்மான அளவிலும் இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களில் வேறுபாடுகள் உள்ளன. கூரையில் காணப்படும் சாய்வான பக்கங்களின் எண்ணிக்கையும் இடத்துக்கிடம் வேறுபடுகின்றது. வீட்டுக்காரரின் பொருளாதார நிலைக்கேற்ப ஒரே இடத்தில் இவ்வகையான வேறுபாடு காணப்படுவதுமுண்டு. இப் பிரச்சினையைப்பற்றித் தெரிந்துகொள்ளுமுன் கூரையின் சாய்வான பக்கங்கள், எவ்வாறு வேயப்படுகின்றன என்று தெரிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

கூரை வேயப் பயன்படும் புல்லுக்கு மரம் அல்லது மூங்கிலால் செய்யப்பட்ட சட்டமிடுகின்றனர். நெருக்கமாக அடுக்கப்பட்ட கோரைப் புற்களும் இவ்வாறு பயன்படுகின்றன. இவ்வகை அமைப்பு இந்தியாவில் இடத்துக்கிடம் வேறுபடலாம்; வேறுபடுகிறது. ஆனால், இவ் வேறுபாடு பிரதேசவாரியாக அமையவில்லையென்றறிகிறோம்.

கிழக்கிலும், வடகிழக்கிந்தியாவிலும் வைக்கோல் அல்லது தனிப்பட்ட ஒருவகைப் புல் ஆகியவற்றால் கூரை வேயப்படுகின்றது. அரை-உருளை வடிவமான அல்லது தட்டையான ஓடுகளாலும் கூரை வேயப்படுவதுமுண்டு. கிடைக்கும் களிமண் நல்லதாக இருப்பின், குயவனின் சக்கரத்தின் உதவியாலேயே அரை-உருளை வடிவமான ஓடுகள் செய்யப்படுகின்றன. களிமண் அவ்வாறில்லாவிடில், தடித்த தட்டையான ஓடுகள் முதலில் செய்யப்படுகின்றன. இவை உலர்த்தப்படுமுன் மர உருளைகளினால் வளைக்கப்படுகின்றன.


வேறுவிதமான தட்டை ஓடுகளும் உள்ளன. இவை ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. இவை மங்களூர் அல்லது இராணிகஞ்சு ஓடுகள் என்று வழங்கப்படுகின்றன. இவை கிராமங்களில்கூடத் தற்காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இவை இன்னும் எல்லா இடங்களிலும் பரவவில்லை.

வங்காளத்திலிருந்து வடமேற்காக பிரயாணம் செய்யும் ஒருவர் வைக்கோல் கூரைகளையும், அவற்றுக்குப் பதிலாக பீஹாரில் குயவனது சக்கரத்தில் செய்யப்பட்ட அரை-உருளை வடிவு கொண்ட ஓட்டுக் கூரைகளையும் காணலாம். தொலைதூர மேற்கில், உதாரணமாகக் கிழக்கு உத்தரப் பிரதேசம் முதல் இராஜஸ்தானம் வரையில் கையினால் செய்யப்பட்ட தட்டையான ஓடுகள் அதிகமாகக் காணப்படு

கின்றன. இராஜஸ்தானத்தில் அழுத்தப்பட்ட மண், பலகைகள் ஆகியவற்ருலான மட்டநிலையான கூரைகள் சில இடங்களில் காணப்படுகின்றன. இதர பகுதிகள் அனைத்திலும் சாதாரணத் தட்டையான ஓடுகளே பயன்படுத்தப்படுகின்றன.

வங்காளத்திலிருந்து தெற்காகக் கடற்கரைச் சமவெளி வழியாகப் பிரயாணம் செய்பவர் ஒரிஸ்ஸாவிலுள்ள கூரைகள், வைக்கோலால் வேயப்பட்டவை என்று அறிவார். கஞ்சாமிலும் அப்படியே; மிகச் சில பகுதிகளில்மட்டும் அரை-உருளை வடிவுடைய ஓடுகளைக் காணலாம். ஆனால், இங்கிருந்து தெற்காகத் தீபகற்பத்தின் தென்முனையை அடையும்போது அதிகமான வேறுபாடு காணப்படுகிறது. வடக்கில் ஓடுகள் ஒரே அடுக்காக வேயப்படுகின்றன. ஆனால், தெற்கில் நெருக்கமாக அடுக்கப்பட்ட மூன்று அல்லது நான்கு அடுக்குகளாக ஓடுகளைப் பயன்படுத்துவதையே மக்கள் விரும்புகின்றனரென்றறிகிறோம். இவற்றின் ஓரம் சுண்ணும்பும் மணலும் சேர்ந்த கலவையால் பூசப்பட்டு நிரந்தரமாகவுள்ளன. இதற்கு மாருக, வடக்கில் காகங்கள், குரங்குகள் ஆகியவை கூரைகளில் தமது சுதந்திர உணர்ச்சியைக் காட்டியதனுலோ அல்லது வேறு காரணங்களாலோ மழைநீர் ஒழுகும் காலத்தில் வீட்டுக்காரரே ஓடுகளை முறையாக அடுக்குவதைச் சாதாரணமாகக் காணலாம்.

இனிக் கூரையின் கடைசி அமிசமாகிய சாய்வான தளங்களின் எண்ணிக்கையைப்பற்றி நோக்குவோம். பொதுவாக இவற்றின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லையாயினும், மேற்கு, வடமேற்கிந்தியா ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று சாய்ந்து ஒரு மத்திய பாலத்தின் வாயிலாக இணையும் இரண்டு சாய்தளங்களே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பம்பாயின் வடக்கிலிருந்து வடகிழக்கை நோக்கி ஒரு நேர்கோடு வரைந்தால், கோட்டின் வலப் பக்கத்திலுள்ள பிரதேசத்தில் பெரும்பாலும், நான்கு சாய்தளங்களுடைய கூரைகளையே காண்கிறோம். பீஹாரின் பெரும்பகுதி, மத்தியப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி ஆகியவற்றில் முக்கோண அல்லது நான்கு சாய்தள வடிவக் கூரைகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கு வங்காளத்திலும், தீபகற்ப இந்தியாவின் பெரும்பகுதியிலும் இவ்வகைக் கூரைகள் காணப்படுகின்றன. சிற்சில இடங்களில் இரண்டடுக்குகளைக் கொண்டுள்ள வீடுகளிலும் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டடுக்குகளைப்பற்றிப் பின்னர் காண்போம். நான்கு சாய்தளங்களைக் கொண்டுள்ள கூரையில், நான்கு சாய்தளங்கள் ஒரே முனையில் சேருமாயின், அது ‘ பிரமிடு ’ வகை எனப்படும். இது மிகவும் அபூர்வமாகவே காணப்படுகிறது.




படம் 15. கேரளத்தில், கோட்டயம் மாவட்டத்தில் மேல்நோக்கி வளைந்துள்ள உத்தரமுடைய குடிசைகள்.

ஒரிஸ்ஸா முக்கோண வடிவக் கூரையின் இருப்பிடம் என்பது பொருந்தும். இங்கு வீட்டின் நடுவில் முற்றம் இருப்பதால், முற்றத்தைச் சுற்றிக் கூரையின் பக்கங்கள், சாய்வாகத் தொடர்ந்துள்ளன. அஸ்ஸாமில், ஆராய்ச்சி நடத்தப்பட்ட குன்றுப் பிரதேசங்கள், பிரம்மபுத்ரா நதிப் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் முக்கோண வடிவக் கூரையே காணப்படுகிறது.

கூரையின் பெருக்கத்தை நோக்கின், பிரதேச வேறுபாடுகள் மங்கிவிடுகின்றன. குடில்களின் கட்டட வேலையில் ஏழை, பணக்காரர் என்னும் வேறுபாடுகளே அதிகமாகவுள்ளன. இதனைக் கொண்டு இந்தியாவின் வெவ்வேறு பாகங்களிலுள்ள கூரைகளைப் பிரிப்பது முறையாகாது. இருப்பினும், கூரைகளைப்பற்றிப் பார்க்குமிடத்து, நாம் கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய தலங்களில் மட்டுமே காணப்படும் இரண்டு வகைகளைப்பற்றித் தெரிந்துகொள்வோம். கேரளாவில் நான்கு சாய்தளக் கூரையுடைய வீடுகளின் மேல் உத்தரத்தில் உள்ள கழியின் முனைகள் மேல்நோக்கி வளைந்திருக்கின்றன. சிறிய சாய்தள பாகத்தின் உயர முனைக்கருகே, தட்டையான, முக்கோண வடிவ, துவாரமுள்ள 'காற்றுப்போக்கி' (ventilator) கூரையின் சாய்வுப் பக்கத்திற்கு எதிர்ப்பக்கமாகச் சாய்த்து அமைக்கப்பட்டுள்ளது. காற்றுப்போக்கியின் அமைப்புக்கேற்றவாறு, மேலேயுள்ள உத்தரம் ஒரு சேணம்போலக் காட்சியளிக்கிறது.

இது சீன அல்லது ஜப்பானியக் கூரையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஆயின், இவ்விரண்டுக்குமிடையே வேறுபாடிருப்பது கண்கூடு. சீன அல்லது ஜப்பானில் வீட்டின் இறப்புகள் (eaves) மேல்நோக்கி வளைந்திருக்கின்றன; உத்தரம் அவ்வாறு வளையவில்லை. 'ஷின்டோ' கோயிலில் காணப்படும் 'டோரி' (torii) என்றழைக்கப்படும் நுழைவாயிலில் மட்டநிலையிலுள்ள உறுப்புகள் மேல்நோக்கி வளைந்துள்ளன. ஆனால், இது சீன அல்லது ஜப்பான் நாட்டிலுள்ள குடில்களில் காணமுடியாது.

கேரளாவில் மேனோக்கி வளைந்துள்ள உத்தரத்திற்கு இணையான கட்டட வேலைப்பாட்டிற்கு உதாரணமாக சுமத்ராவைக் குறிப்பிடலாம். இங்கு 'படக்' (Batak) கட்டடக் கலை காணப்படுகிறது. கட்டடங்களின் உத்தரத்தின் முனைகள் இங்கு மேல்நோக்கி வளைந்திருக்கின்றன. வடகிழக்கிந்தியாவிலுள்ள நாக மரபினரின் வீடுகளில் மேல்நோக்கி வளைந்திருக்கும் உத்தரத்தை இஃது ஒத்திருக்கிறது. சுமத்ராவின் மேற்குக் கடற்கரையில் காணப்படும் உள்நாட்டுக் கட்டடக்கலையில் மற்றொரு விஷயம் கேரளாவோடு ஒப்பிடக்




படம் 16. கேரளத்தில் ஒரு வீடு—வராந்தாவில் மரத்திலான சாய்ந்த திரையுடன் கூடியது.

கூடியதாகும். வராந்தா ஒரு சாய்வான மரத்தட்டியால் மறைக்கப் பட்டிருக்கிறது. இத் தட்டி மட்டநிலையாகவும் உயரவாக்கிலும் உள்ள கழிகளால் அழகுறச் செய்யப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் மதம், மதச்சார்புள்ள கட்டடக்கலை ஆகியவற்றின் பல அம்சங்களை, சுமத்ரா இந்தியாவிலிருந்து பெற்றிருந்தது. எனவே, இவ்வகையான ஒற்றுமை உள்நாட்டுக் கட்டடக் கலையிலும் காணப்படுவது இயற்கையே.

மேற்கு வங்காளத்தில் உத்திரக்கழியும், சாய்வுப்பக்கங்களின்மேல் மட்டமும் குவிந்துள்ளன (convex). இதனல் வீட்டின் இறப்பின் முனைகள் தரைக்கு அருகில் தாழ்ந்துள்ளன. வீட்டிறப்புகளின் (eaves) மத்திய பாகம் முனைகளைவிட உயரமானவை. இங்கு நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வளைவோடுகூடிய கூரை ஒரு தனிப்பட்ட அழகைப் பெற்று விளங்குகிறது. மொகலாயர், இராஜபுத்திரர் ஆகியோரது கட்டடக்கலையின் உச்சகட்டத்தில், கட்டடங்களில் செங்கல், கல் ஆகியவற்ருல் இவ்வகைக் கூரை வேயப்பட்டது. இந்தியாவின் வடமேற்கில் குவிந்துள்ள கூரையைக் கொத்தனர்கள் 'வங்காளிச்சத்ரி' அல்லது 'வங்காளிக் கூரை' என்றழைக்கின்றனர்.


கூரையைப்பற்றிக் கூறும்போது கவனிக்கவேண்டிய விஷயம் மற்ருென்றுள்ளது.




படம் 17. சுமத்ராவில் சாய்வான 'திரை'களைப் பெற்றுள்ள வீடுகள்—இவை கேரளத்திலுள்ள சில வீடுகளை ஒத்திருக்கின்றன.



படம் 18. மேற்கு வங்காளத்தில் பிர்பூம் மாவட்டத்தில் குவிந்த கூரையுடைய ஒரு கட்டடம்.




படம் 19. மேற்கு வங்காளத்தில் பிர்பூம் மாவட்டத்தில் குவிந்த கூரைகள்.



படம் 20. டில்லிக் கோட்டையில் 'திவானிகாஸி'ல் உள்ள வங்காளிச் சத்ரி.

கேரளத்தைச் சேர்ந்த ஆலப்புழை, திருவனந்தபுரம், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த நாகபுரி, பந்தாரா, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த 'பாலாகாட்' ஆகிய இடங்களில் அநேக வீடுகளிலுள்ள கூரைகள் பல சாய்வான பக்கங்களாலானவை. இவ் விராச்சியங்களில் காணப்படும் முக்கிய வகையோடு ஒப்பிட்டால் இவ்வகைக் கூரைகளின் விகிதம் குறைந்த அளவேயாம். இருப்பினும் அவை மிகுதியாக உள்ளதுபோல் தோற்றமளிக்கின்றன. கிராம இயற்கைக் காட்சிக்கு அவை சிறப்பாகவுள்ளன.

சில ஓட்டுக் கூரைகள் குறுக்குச் சுவர்களின்மேல் சாய்ந்து, இடைவெளியின்றி வேயப்படுகின்றன. சில வீடுகளில் அறைகளைச் சுற்றியுள்ள வராந்தாவிலிருந்து கூரை ஆரம்பமாகிறது. வராந்தாவுக்கு வேலியிடுகின்றனர்; அல்லது மூங்கிலாலோ, செங்கல் காரை ஆகியவற்றாலோ சுவரமைக்கின்றனர். இரண்டு அல்லது மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ள வீடுகளில், மேலடுக்கு மற்றைய அடுக்குகளைவிடக் குறுகியதாகக் கட்டப்படுகிறது.




படம் 21. மத்தியப் பிரதேசத்தில் பாலாகாட் மாவட்டத்தில் பல கூரைகளையுடைய மூன்றடுக்கு வீடு

மேற்கு வங்காளத்தில்மட்டும் கடினமான செம்மண் பிரதேசமான 'பிர்பூம்' மாவட்டத்தில் மூன்றடுக்குகளோடுகூடிய மண் குடிசைகளைக் காணலாம். 'பர்துவான்' பிரதேசத்தில் இரண்டடுக்குகள் சாதாரணமாகும். மூன்றடுக்கு வீடுகளில் கூரைகள், ஆடம்பரமெதுவுமின்றிக் காணப்படுகின்றன. இவை வழக்கமாகச் சிறிய குடில்களில் காணப்படும் குவிந்தவகைக் கூரைகளைப் பெற்றுள்ளன.

ஒரிஸ்ஸாவில், சிறப்பாகக் கட்டாக், பூரி முதலிய கரையோர மாகவுள்ள மாவட்டங்களில் முக்கோண வடிவம் அல்லது நான்கு சாய்தள வடிவமுடைய கூரைகளில் ஒரு புதுமையான கட்டட வேலை யைக் காணலாம். இங்கு வைக்கோல் கூரைகள் வேயப்பட்டு, அடுத்தடுத்துக் கட்டப்பட்டுள்ள குடிசைகளைக் கொண்டுள்ள நீண்ட கிராமங்கள் உள்ளன. நெருப்பினுல் விபத்து இங்கு எளிதாக ஏற்படுகிறது; எனவே, இனி நாம் வருணிக்கப்போகும் கண்டு பிடிப்பு, நெருப்பு விபத்திலிருந்து வீடுகளைப் பாதுகாப்பதற் காகவே ஏற்பட்டிருக்க வேண்டும்.

காற்றுப் புகுவதற்கான சிறிதளவு இடைவெளியோடு கூடிய இரண்டு கூரைகளுடைய கட்டடங்கள் இங்குக் கட்டப்பட்டுள்ளன. இரண்டாவது அடுக்கின்மேலுள்ள கூரை வழக்கம் போல் வைக்கோலினுல் வேயப்பட்டுள்ளது. அதன் கீழுள்ள கூரை உட்புறமும் மேற்புறமும் நன்ருக மண்ணுல் பூசப்பட்டுள்ளது. மரத்தினுலோ மண்ணுலோ செய்யப்பட்ட தூண்கள் இக் கூரை களைப் பிரிக்கின்றன. இரண்டு கூரைகளையுடைய குடில்கள்



படம் 22. ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த பூரி மாவட்டத்தில் இரட்டைக்கூரை

கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் கதகதப்பாகவும் இருக்குமென்று கருதப்படுகிறது. இக் கூற்று உண்மையான தாகவோ, உண்மையற்றதாகவோ இருக்கலாம். ஆனுல், மேல் கூரை தீப்பிடித்துக்கொண்டால், கீழேயுள்ள கூரையால் வீடு பாதுகாக்கப்படுகிறது. வீட்டுக்காரர் கூரையின்மீதேறி, முக்கிய உத்தரத்தைக் கட்டியுள்ள கயிற்றை அறுத்துக் கூரையை மெது வாகக் கீழே இறக்கிவிடவும் கூடும்.

வீட்டினுள்ளிருந்து கூரைகள் எவ்வாறு தாங்கப்படுகின்றன என்பதை இப்பொழுது தெரிந்துகொள்வோம்.

குறுக்களவு சுமார் 10 அடி அளவுள்ள சிறிய அறைகளில், மரம் உடனுக்குடன் கிடைப்பதாக இருந்தால், மத்தியில் ஒரு பெரிய கம்பமும், அதனையடுத்துச் சிறிய கம்பங்களும் கூரையின் முக்கிய உத்தரத்தைத் தாங்குகின்றன. இது மேல்வரம்பைத் தாங்குகிறது. இவை தவிர, சிறிய கழிகளும் சில வேளைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவை முக்கிய உத்தரத்தையும், துணை உத்தரங்களைத் தாங்கும் கழிகளையும் இணைக்கின்றன. கழிகள் உத்தரங்களின் நடுவில் தாங்குபவையாகவுள்ளன.

நாட்டின் பல பாகங்களில், சிறப்பாக ஒரிஸ்ஸாவில் கூரையின் முகட்டின் அமைப்புச் சிறப்பான வகையில் அமைந்துள்ளது. இங்கு முக்கிய உத்தரத்தின் குறுக்காகச் செல்லும் துணை உத்தரத்தை முக்கியத் தூண் தாங்குகிறது. துணைக்கழிகள் உத்தரங்களைத் தாங்குமிடத்தில் உள்ள முனையிலும், மற்ற முனையிலும் குத்துக்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. கழிகளை நான்கு, ஆறு ஆகிய எண்ணிக்கைகளில், இவ்வகை அமைப்பையும் காணலாம்.

நான்கு சாய்தள அமைப்புடைய கூரையின் அளவு குறைவானதாகையால், மேற்கூறியவை, அவ்வகைக் கூரைக்குத் தேவையில்லை. இங்கு முக்கிய உத்தரங்கள் தடியானவையாகவும், கெட்டியானவையாகவும் உள்ளன; மற்ற உத்தரங்கள் மெல்லியவை.

துரதிருஷ்டவசமாக இந்தியா முழுவதிலுமுள்ள வீடுகளின் வகைகளை நுணுக்கமாக ஆராய்வது இயலாததாகவுள்ளது. இதனால் பிரதேச வேறுபாடு காணப்படும் இடங்களையும், நாம் தவறவிட்டு விடுகிறோம்.


கிராம இந்தியாவில் ஒரு விஷயம் இக்கட்டடக் கலையில் குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. கிராம அமைப்பில் காணப்படும் பிரதேச வேறுபாடு கட்டட அமைப்பில் காணப்படுவதில்லை. ஓர் இராச்சியத்திற்கும், மற்றோர் இராச்சியத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகளைவிட, ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் முதலிய தனித்தனி இராச்சியங்களில் காணப்படும் வேறுபாடே அதிகம். வீட்டுக்காரரின் பொருளாதார நிலை, தலத்தில் கிடைக்கும் பொருள்கள், தட்பவெப்பநிலை ஆகியவற்றைப் பொறுத்தே வீடுகள் கட்டப்படுகின்றன. தட்பவெப்ப நிலைகளிலிருந்து மனிதன் தன்னைக் காத்துக்கொள்ளவும் வீடுகள் உதவுகின்றன. மற்றபடி,

இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில், அநேகமாக ஒரே மாதிரியான அமைப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன.

இருப்பினும், அழகுபடுத்துதல் அல்லது ஒழுங்கு ஆகியவற்றை நோக்குமிடத்து 'இடத்துக்கிடம்' மாறுபடும் அமைப்புகளைக் காணலாம். கலாசாரத்தின் சில அம்சங்கள் உடனடியான தேவைக்கேற்பத் தோன்ருமல், வழக்கினுல் ஏற்பட்டிருப்பனபோல, அழகுசெய்யும் அல்லது ஒழுங்குசெய்யும் முறைக்குத் தனிப்பட்ட பொருளோ, ஆழமோ இல்லை.

கூம்பு வடிவக் கூரையுடைய வட்டத் தரையமைப்பு

இவ்வகைக் குடில்கள் அபூர்வமாகச் சில இனத்தாரிடையே மட்டும், இந்தியாவின் சில பாகங்களில் உள்ளன. பின்தொடரும் படங்களில் வேறுபடும் நான்கு வகைகளைக் காணலாம். ஒரிஸ்ஸா, சோட்டா நாகபுரி பகுதிகளைச் சேர்ந்த 'பிர்ஹோர்' (Birhor) மக்கள், சில மாதங்கள் தங்குமிடங்களிலெல்லாம் குடிசைகளைக் கட்டிக்கொள்கின்றனர். மரத்தின் கிளைகள், குச்சிகள் ஆகியவை இங்குப் பயன்படுகின்றன. இங்குச் சுவர் இல்லை. குடிசையைச் சுற்றிலும், மழைநீரை எடுத்துச்செல்வதற்கான ஆழமில்லாத சாக்கடைகள் வெட்டப்படுகின்றன.



படம் 23. பீஹாரில் ஹஸாரிபாக் மாவட்டத்தில் 'பிர்ஹோர்' மக்களின் வாசஸ்தலம்

ஆந்திரப் பிரதேசத்தில் வால்டேரையடுத்துள்ள பகுதியில், தாழ்ந்த வகுப்பார் என்றழைக்கப்படும் மக்களிடையே வட்டமாகவும், சதுரமாகவும் உள்ள குடிசைகள், கூருருளை வடிவக் கூரைகளுடன்



படம் 24. ஆந்திரப் பிரதேசத்தில் வால்டேருக்கருகில் கூம்பு வடிவக் குடிசைகள்




படம் 25. ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த பூரி மாவட்டத்தில், தெலுங்கு மொழி பேசும் பன்றி வளர்ப்போர் குடிசைகள் கோளார்த்த வடிவில் அமைக்கப்பட்டுள்ளன

கட்டப்பட்டிருக்கின்றன. அதே இராச்சியத்தின் மேற்கில் வசிக்கும் 'செஞ்சுக்களும்' ஏறக்குறைய இதுபோன்ற வீடுகளையே அமைத்துக்கொள்கின்றனர்.

இங்குச் சுவர் மண்ணாலானது; கூரை பனை ஓலைகளால் வேயப்பட்டுள்ளது; வீட்டிறப்புகள், தரையைத் தொடும் வகையில் அமைந்துள்ளன.

ஆந்திராவிலிருந்து ஒரிஸ்ஸாவில் குடியேறியுள்ள சில மக்கள் அரைகோள வடிவமுள்ள அல்லது தேன்கூடு போன்ற குடிசைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கும் சுவர்கள் இல்லை; மூங்கில் குச்சிகள் வளைவுகளாகச் செய்யப்படுகின்றன. அவற்றின் மேல் பனை ஓலைகளால் கூரை வேயப்படுகின்றது.



படம் 26. ஆந்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸாவில் பூரி மாவட்டம் ஆகியவற்றில் பன்றி வளர்ப்போரிடையே யுள்ள கோளார்த்த வடிவக் குடிசை.

மேற்கில் குஜராத்திலும், சிறப்பாக சௌராஷ்டிரம், கட்சு ஆகியவற்றிலும் வசிக்கும் 'மெர்', 'வாகிரி', 'ரப்பாரி' முதலிய மக்களிடையேயும் வட்டமான வீடுகள் காணப்படுகின்றன. இவர்கள் நிலையாக விவசாயத்தை மேற்கொள்வதில்லை. இவர்கள் கால்நடைகளை மேய்க்கின்றனர் அல்லது இதர தொழில்களைச் செய்கின்றனர். இந்த மேற்கத்திய மக்களிடையே சுவர்கள் நல்ல உயரமுள்ளவையாகக் கட்டப்படுகின்றன. கிழக்கிலுள்ள பகுதிகளோடு ஒப்பிட்டால், இங்குள்ள கூரைகள் குட்டையானவை. இவை வட்டமாகவும், கூரான முனையுடனும் அமைக்கப்பட்டிருக்கின்றன.


ஆந்திராவில் சில சாதியினர் தமது பன்றிகளுடன் ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் ஆகிய இடங்களுக்குக் குடிபுகுந்துள்ளனர். வட்ட அமைப்பில் இவர்களிடையே ஒரு சிறந்த முறையைக் காணலாம். தெலுங்கு மொழி பேசும், 'கௌரா' சாதியினரைச் சிலவேளைகளில் ஒரிஸ்ஸாவில் காண்கிறோம். இங்குச் சுவரில்லாத வளைவான 'ஆர்ச்சுகள்' போன்ற தரையமைப்புடைய குடிசைகள் கட்டப்படுகின்றன. இவற்றின் முன்பக்கம் திறந்திருக்கும். பல வகைப் பாய்களால் கூரை வேயப்படுகிறது.[1]



படம் 27. குஜராத்தில் ஜுனகாத் மாவட்டத்தில் 'மெர்' வகுப்பினரின் குடிசைகள்

வட்டமாகவோ, வளைவுகளுடனோ கூடிய தரையமைப்புடன் கட்டப்பட்ட ஆலயங்களைப் பார்க்காத வரையில், இவ்வாறு கட்டுப் படுத்தப்பட்ட வகைகள், விநோதங்களாகத் தோன்றும்; ஒருவேளை இல்லாமலுமிருக்கலாம். வட்டத் தரையமைப்பு பௌத்த ஸ்தூபி களிலும், வளைவான அமைப்பு புத்த விஹாரங்களிலும் காணப் படுகின்றன. புத்த விஹாரங்களில் ஒரு நீண்ட கூடத்தின் முனையில் ஒரு ஸ்தூபி உள்ளது. சென்னையிலுள்ள மகாபலிபுரம், ஆந்திராவிலுள்ள 'தேர்' ஆகிய இடங்களில் காணப்படும் இந்துக் கோயில்களில் வட்ட அமைப்பு, வளைவான அமைப்பு ஆகிய இரண்டும் உள்ளன. இவ் விரண்டு வகைகளும், கேரளா வைச் சேர்ந்த திருச்சூர், வைக்கம் முதலிய இடங்களிலுள்ள ஆலயங்கள், தென் கன்னட மாவட்டத்தில் 'முதா பித்ரி' புத்தூர்

[1] இவ்வகைக் குடிசைகள் மைசூரில் 'ஹலிபீட்' கோயிலையடுத்துள்ள பகுதி களில் வசிக்கும் 'தெலுங்கு மொழி பேசும்' நாடோடி மக்களிடையேயும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.





Rio No 7979E'61 2800

© GOVERNMENT OF INDIA COPYRIGHT 1961

Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

குடில்களின் வகைகள் — தரையமைப்பும் கூரையும்





REG No 2979 E'61. 2500.

© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.

Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

குடில்களின் வகைகள் — முற்றமும் முகப்பறையும்




Reproduced from the original supplied by the Director Anthropological Svy of India and the Survey of India is not responsible for the accuracy of the map


PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

© GOVERNMENT OF INDIA COPYRIGHT 1961

குடில்களின் வகைகள் — முற்றம் அமைக்கப்பட்டுள்ள விதங்கள்

ஆகிய இடங்கள், மைசூர், கேரளா ஆகியவற்றின் மேற்கு மாவட்டங்கள் ஆகிய அனைத்திலும் காணப்படுகின்றன.

ஜபல்பூரிலும் ஒரிஸ்ஸாவிலும் கட்டப்பட்டுள்ள சக்தியின் ஆலயங்களிலும் வட்ட அமைப்புள்ள தூய இடங்கள் உள்ளன. சரித்திர காலத்திற்கு முற்பட்ட மக்களின் நடுகல்லின் வட்டங்களை அவை ஒத்திருக்கின்றன.



படம் 28. ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த பூரி மாவட்டத்தில் தெலுங்கு மொழி பேசும் நாடோடி மக்களின் குடிசைகள்.

பழங்குடி மக்களிடையேயும், சாதியினரிடையேயும் பாதுகாக்கப் பட்டதும், இந்தியாவின் புனிதமான கட்டடக் கலையில் உயர்த்தப் பட்டதுமான வட்டத் தரையமைப்பு, நெடுந்தொலைவில் உள்ள சரித்திரத்திற்கு அப்பாற்பட்ட காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லாதென்று யாருக்குத் தெரியும்?

# 3. முக்கிய உணவு

(ச. இராமசாமி)

உணவு, விவசாயம் ஆகியவற்றின் எல்லாத் துறைகளேயும் ஆராய்வது நமது நோக்கமல்ல. பிரதேசவாரியாக வேறுபடுவதும், கலாசார சரித்திரத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தனவுமான சிலவற்றைப்பற்றித் தெரிந்துகொள்வதே நமது நோக்கமாகும். இயற்கை வசதிகள் நெல் விளேச்சலுக்கு வசதியாக அமைந்துள்ள இடங்களில் மக்கள் அரிசியை உணவாகக் கொள்கின்றனர். மண்ணின் தரம், உழுவதற்குதவும் கால்நடைகளின் வன்மை ஆகியவற்றிற்கேற்பக் கலப்பை அமைந்துள்ளது. நிலேயான விளேச்சலுக்கு ஆழமாக உழுதல் தேவையா அல்லது ஆழம் குறைவாக உழுதல் தேவையா என்பதையும்பொறுத்துக் கலப்பை அமைந்துள்ளது. எனவே, இவ்வியலில் வரும் சில பொருள்கள் ஓரளவுக்கு இயற்கையின் நியதியால் கட்டுப்பட்டவையாகவுள்ளன. கிராமங்களில் காணப்படும் இந்திய உள்நாட்டுச் சிற்பக்கலேயிலும் இவ்வுண்மை பரிமளிக்கிறது. சில இடங்களில் தினே வகைகளே அரைத்து மாவாக்கி, தட்டையான புளிக்க வைக்கப்படாத ரொட்டிகளாக ஏன் செய்கின்றனர் என்பதையோ அல்லது நாட்டின் இதர பாகங்களில் அதே தானியம் அரசியைப்போல் சோருக்கப்பட்டு உணவாகப் பயன்படுவது ஏன் என்பதையோ இயற்கை விளக்குவதில்லே. மற்ரூர் உதாரணமாக நெல் குத்துவதை நோக்கினுல், காலினுல் இயக்கப்படும் எந்திரங்களின் உதவியால் சில இடங்களில் நெல் குத்தப்படுவதையும், கைகளின் உதவியால் உரல், உலக்கை ஆகியவற்ருல் சில இடங்களில் நெல் குத்தப்படுவதையும் காண்கிரோம். இவற்றை விளக்க இயற்கையோடு இயைந்த காரணமெதுவுமில்லே.

அரசி, கோதுமை உணவுகளேயொட்டி இந்தியாவை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சோளம், தினேவகைகள் ஆகியவையும், கிழக்கிலுள்ள சில இராச்சியங்களேத் தவிர இதர இடங்

களில் பேரளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதனோடு இணைக்கப்பட்டுள்ள ஒரு தேசப் படம் தானியப் பங்கீட்டையும் உணவைச் சமைக்கும் முறைகளையும் காட்டுகின்றன. ஆயின், இவற்றிலிருந்து மக்களின் உணவுபற்றிய வழக்கங்களைச் சிறிதளவே தெரிந்துகொள்ள இயலுகிறது. அதனைப்பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு அதிகமான செய்திகள் தேவைப் படுகின்றன.

**உணவு சமைக்கும் முறை**

மொத்தத்தில் மூன்று வகைகளாக உணவு சமைக்கும்முறை சாதாரண வழக்கில் உள்ளது. முதல் முறையின்படி, தானியங்களைத் தண்ணீரில் கொதிக்கவைத்துப் பதப்படுத்திச் சோருக்கி உண்கின்றனர். ஒரிஸ்ஸா போன்ற சில இடங்களில் புழுங்கல் அரிசிச் சோற்றை அதிக அளவு நீரில் முதல்நாளிரவு இட்டு வைப்பர்; அடுத்த நாள் அதனைச் சில வேளைகளில் காலை உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

தானியங்களை அரைத்துத் தண்ணீருடன் கலந்து மாவாகப் பிசைந்து சமைத்தல் இரண்டாவது முறையாகும். இதனுடன் சில வேளைகளில் சிறிதளவு கொழுப்பும் சேர்க்கப்படுகிறது. இது நன்ருகப் பிசையப்பட்டு மெல்லிய அப்பங்களாகச் செய்யப்படு கிறது. உடனேயே இத் தட்டையான ரொட்டி இரும்புச் சட்டியில் இடப்பட்டு இருபுறமும் மாற்றிச் சுடப்படுகிறது. ரொட்டியின் மேற்பாகங்கள் இதனுல் நன்ருக வெந்து, மொரமொரப்பாக இருக்கும். மெல்லியதாக இருப்பினும் உட்புறத்தில் சிறிதளவு நீர் இருக்கும். இந் நிலையில் அந்த ரொட்டி உடனே நேரடியாக நெருப்பில் சுடப்படுகிறது. உள்ளிருக்கும் நீர் ஆவியாகி ரொட்டியைக் கொப்பளிக்கவைக்கிறது. இவ்வகை புளிக்கவைக்கப்படாத ரொட்டிக்குச் சப்பாத்தி அல்லது ரொட்டி என்று பெயர்.

ஏறக்குறைய இதேபோன்று மூன்ருவது வகையில் ரொட்டி செய்யப்படுகிறது. இதில் முந்திய தினம் பிசையப்பட்ட சிறிதளவு மாவு, புதிய மாவுடன் சேர்க்கப்படுகிறது. இந்நிலையில் பல மணி நேரம் மாவு வைக்கப்படுகிறது; சில வேளைகளில் இம் மாவு வெந்நீரில் ஊறவைக்கப்படுவதுமுண்டு. சில மணி நேரத்திற்குப் பின்னர் ' தந்தூர் ' என்றழைக்கப்படும் தனி வகையான அடுப்பில் மாவு சுடப்படுகிறது. நீராவியாலும், முந்திய இரவு மாவுடன் பிசையப்பட்டதால் ஏற்பட்டுள்ள சிறிதளவு புளிப்பினுலும், ரொட்டி கொப்புளிக்கிறது. சில வேளைகளில் திணைமாவு நன்ருகக் கொப் புளிப்பதில்லை; எனவே, அது தட்டையான இரும்புச் சட்டியில் பதமாகும்வரை சுடப்படுகிறது.


தானியங்களை உணவாகச் சமைக்க இவ்விரண்டு முக்கிய முறைகளோடு சில இதர துணை முறைகளும் உள்ளன. நெல் சில வேளையில் நீரில் பாதியளவு கொதிக்கவைக்கப்படுகிறது. பின் இது உரலிலிடப்பட்டு உலக்கையால் தட்டையாக்கப்படுகிறது. இத் தட்டையான அரிசி (அவல்) நீரில் ஊறவைக்கப்பட்டு உணவாகிறது. இதை மணலில் போட்டு வறுப்பதும் உண்டு; கெட்டியான கொழுப்பு அல்லது எண்ணெயிலிட்டுப் பொரிப்பதும் உண்டு. அரிசியும் மாவாக அரைக்கப்படுகிறது. இதனுடன் சிறிது புளிப்புச் சேர்க்கப்படுகிறது. அல்லது பருப்பு வகைகளை அரைத்து இம் மாவுடன் சேர்க்கின்றனர். பின்னர் நீராவியிலோ அல்லது எண்ணெய் அல்லது நெய்யிலோ இது அப்பங்களாகச் செய்யப்படுகிறது.

இவை தவிர, உமியோடிருக்கும் நெல், சோளம், தினைவகைகள் போன்ற தானியங்களைத் தண்ணீரில் ஊறவைத்து, மணலில் இட்டு வறுப்பதுமுண்டு. உள்ளேயிருக்கும் நீர் ஆவியாகி, தானியங்களை உடைத்துக்கொண்டு வெளியேறுகிறது. தானியம் அமெரிக்க 'பாப்-காரனைப்' போலப் பொரியாக மாறுகிறது.

பகிர்வு (Distribution)

முக்கியமான தானியங்கள் இந்தியாவில் சமைக்கப்படும் முறைகளைக் கொண்டு பிரதேசவாரியாக அவற்றைப் பிரிக்கலாம். இப் பிரதேசங்களை ஒவ்வொன்றாக வருணிப்போம். அதனைப்பற்றிய தேசப்படத்தில் இப் பிரதேசங்களை எளிதில் கண்டுபிடிக்கலாம்.

வங்காளம், பீஹார், அஸ்ஸாமில் சில மாவட்டங்கள் ஆகியவற்றில் புழுக்கிய அரிசி நிறையத் தண்ணீரில் வேகவைக்கப்பட்டு சோறாக்கி அப்படியே உணவாக உட்கொள்ளப்படுகிறது. அஸ்ஸாமின் சில பகுதிகளில் பச்சரிசி விரும்பப்படுகிறது. மேற்கூறியவாறே இதுவும் சமைக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், கோதாவரி மாவட்டம் வரையிலுமுள்ள கடற்கரைப் பிரதேசங்கள் அரிசியையே சார்ந்துள்ளன. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பாஸ்தார், துர்க் மாவட்டங்களும் அவ்வாறே சார்ந்துள்ளன. கோதாவரியிலிருந்து தெற்கே செல்லச் செல்ல அரிசியுடன் மிகுதியாகத் தினைவகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. சென்னை இராச்சியத்திலும், ஆந்திராவின் தெற்கிலும் அரிசியும் தினைவகைகளும் பேரளவில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இங்கு தினைவகைகள் மாவாக அரைக்கப்பட்டு, சிறுசிறு உருண்டைகளாக வேகவைக்கப்பட்டோ அல்லது நீராவியால் அவிக்கப்பட்டோ துணை உணவாகப் பயன்படுகின்றன. மைசூரின்




Rte No.2979E'61-2806

© GOVERNMENT OF INDIA COPYRIGHT 1961

Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

முக்கிய உணவு

ஒரு பெரும்பகுதியில் தினைவகைகள் சப்பாத்தியாகத் தயாரிக்கப்படுகிறது. சில தினைவகைகள் கஞ்சியாகக் காய்ச்சப்பட்டு ரொட்டியோடு உண்ணப்படுவதுமுண்டு.

வெவ்வேறு வகையாகத் தயாரிக்கப்பட்ட அரிசியைப் பெரும் அளவில் கேரளம் பயன்படுத்துகிறது. இது சோருக உண்ணப்படுகிறது. துருவப்பட்ட தேங்காய், பருப்புத்தூள் முதலியவற்றுடன் சேர்க்கப்பட்டு, இது அப்பங்களாகச் செய்யப்படுவதுமுண்டு. பல்வேறு விதமாக மரவள்ளிக்கிழங்கும் பயன்படுத்தப்படுகிறது. இது வேகவைக்கப்பட்டோ, வறுக்கப்பட்டோ அல்லது அப்பங்களாகச் செய்யப்பட்டோ பயன்படுத்தப்படுகின்றது.

மகாராஷ்டிரம், குஜராத் ஆகியவை பெரும்பாலும் ரொட்டியை முக்கிய உணவாகக் கொண்டுள்ளன. சில மாவட்டங்களிலுள்ளவர்களும் பணவசதியுள்ளவர்களும் முக்கிய உணவாகிய ரொட்டியையும் அரிசியையும் பயன்படுத்துகின்றனர். மகாராஷ்டிரத்தில் கரையோர மாவட்டங்களில் அரிசி விளைகின்றது. அங்குள்ளோருக்கு அதுவே முக்கிய உணவாகவுள்ளது. இராஜஸ்தானம், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்தின் ஒரு பெரும்பகுதி ஆகிய இடங்களில் கோதுமையே முக்கிய உணவாகவுள்ளது. வடகோடியிலும், மேற்கிலும் சிறிது புளிக்கவைக்கப்பட்டு, 'தந்தூர்' அடுப்பில் சுடப்பட்ட ரொட்டி வெகுவாக விரும்பப்படுகிறது. ஆனல், சப்பாத்தி பேரளவில் உண்ணப்படுகிறது. நாடு முழுவதிலும் பணவசதி மிக்க மேல் வகுப்பாரிடையே அரிசி இன்ப வாழ்க்கைப் பொருளாகக் கருதப்படுகிறது. சில சமயங்களில் பாயசமாகவோ, புலவாகவோ இது உட்கொள்ளப்படுகிறது. ஜம்மு-காஷ்மீரின் தென்மேற்கு மாவட்டங்களாகிய இமயமலைப் பிரதேசங்களிலும், உத்தரப் பிரதேசத்தில் சில பள்ளத்தாக்குகளிலும் அரிசி பயிரிடப்படுகிறது. இதில் ஒரு பகுதி உட்கொள்ளப்படுகிறது. இது மிகவும் சிறந்த அரிசியாக இருப்பதால் தெற்கிலுள்ள செழிப்புமிக்க நிலங்களுக்கு இது ஏற்றுமதி செய்யப்படுகிறது.

# 4. எண்ணெய்களும் எண்ணெய்ச் செக்குகளும்

## எண்ணெய்கள்

(எஸ். கெ. முகர்ஜி)

இந்தியா, சீனு, தென்கிழக்கு ஆசியா ஆகியவற்றில் உணவில் இருக்கவேண்டிய கொழுப்புப் பொருளைப் பெரும்பாலும் மிருகங்களிடமிருந்து பெருமல், தாவரங்களிடமிருந்து பெறுகின்றனர். இந்தியாவில் ஏறக்குறைய எல்லாப் பகுதிகளிலும் எண்ணெய் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆயின், இவை இடத்துக்கிடம் வேறுபடுகின்றன. கடுகு, எள் ஆகியவை சில பகுதிகளில் பயிராகின்றன. ஆளிவிதை சில பகுதிகளில் விளைகின்றது. பீஹாரில் குன்றுகளில் வசிக்கும் மக்கள் மரங்களிலிருந்து கிடைக்கும் பயிர்களை நம்பியிருக்கின்றனர். மாஹுவா, குஸும், ஆமணக்கு ஆகியவை இப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சில எண்ணெய் வித்துகளும் எண்ணெய்களும் மதச் சடங்குகளோடு தொடர்புடையவை. உதாரணமாக, எண்ணெய் வித்துகளிலொன்ருன எள், கிழக்கிந்தியாவில் வேதியச் சடங்குகளுக்கும் பயன்படுகின்றது. வெண்ணெய், நெய் ஆகியவை பிராமணரின் ஹோமங்களுக்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. ஆனுல், வங்காளத்தின் திருமணச் சடங்குகளுக்குக் கடுகு எண்ணெய்மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல், பேய் ஓட்டுதல் ஆகியவைபற்றிய மாயாஜாலங்களுக்கும் கடுகு எண்ணெய் இன்றியமையாததென்று கருதப்படுகிறது.

ஆரியர்களின் செல்வாக்கு இந்தியாவின் பல பாகங்களில் பரவுவதற்குமுன், எண்ணெய் வித்துகளின் உபயோகம் பரவியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. பிரதேசவாரியாகச் சடங்குகளுக்கு உபயோகப்படும் எண்ணெய் வித்துகள் அல்லது எண்ணெய்

எடுக்கும் முறை ஆகியவற்றிலிருந்து ஆரியர்களுக்கு முன்னிருந்த மக்களின் கலாசாரத் தொடர்புகளைப்பற்றி நாம் அறிந்துகொள்ள லாம்.

மாஹுவா, குஸும், கரஞ்ச், ஆமணக்குப் போன்ற மரத்தி லிருந்து கிடைக்கும் எண்ணெய்களைப் பயன்படுத்தும் குன்றுவாழ் மக்களைத் தவிர அஸ்ஸாம், மேற்கு வங்காளம், பீஹார், வடக்கு ஒரிஸ்ஸா ஆகிய பிரதேசங்களில் கடுகு எண்ணெயே பயன்படுத்தப் படுகிறது. குன்றுவாழ் மக்கள் பயன்படுத்தும் சில எண்ணெய்கள் உண்பதற்கேற்றவையல்ல.

ஆந்திரப் பிரதேசம், சென்னை, மகாராஷ்டிரம், குஜராத், மைசூர் ஆகிய இடங்களில் எள் பயன்படுத்தப்பட்டது; இப்பொழுதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சக்தியால் இயக்கப்படும் எந்திரங் களினுதவியால் தற்காலத்தில் எண்ணெய் எடுக்கப்படுவதால், முன்னைவிட அதிக அளவில் நிலக்கடலை பயிரிடப்படுகின்றது. நிலக்கடலை எண்ணெயும், வாசனை நீக்கப்பெற்ற கடலை எண்ணெயும், எள் எண்ணெய், நெய் ஆகியவற்றுக்குப் பதிலாக நாட்டின் பெரும் பாலான பகுதிகளில் பயன்பட்டுவருகின்றன. பல மாவட்டங்களில் உள்நாட்டு எண்ணெய்ச் செக்குகள் காணப்படவில்லை என்று அறி கிறோம். எள், கடுகு ஆகியவையும் விலை உயர்ந்தும், அபூர்வமாகவும் உள்ளனவாதலால், விலை உயர்வைப்பற்றிக் கவலைப்படவியலாத மருந்து வகைகள், சடங்குகள் ஆகியவற்றுக்குமட்டுமே பயன்பட்டு, இதர விஷயங்களுக்குப் பயன்படாமல் மறைந்துவிடும் நிலைமையில் உள்ளன.

கேரளத்தில் கொப்பரை, தேங்காய்நார் ஆகியவற்றுக்காகத் தேங்காய் ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. இதனுடைய எண்ணெய் பேரளவில் ஓர் உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தி யாவிலுள்ள சில பகுதிகள் அல்லது மாவட்டங்களில்மட்டுமே ஆளிவிதை பயன்படுத்தப்படுகிறது. சமையலுக்கு இது மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுகிறது.

நிலக்கடலை எண்ணெய்

நமது ஆராய்ச்சியின் பயனாகச் சென்னை, ஆந்திரப் பிரதேசம், மைசூர், மகாராஷ்டிரம், குஜராத், மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகள், ஒரிஸ்ஸாவின் மேற்கில் தொடர்ச்சியாகக் காணப்படும் ஐந்து மாவட்டங்கள், இராஜஸ்தானத்தில் தெற்கில் மூன்று மாவட்டங்கள் ஆகிய இடங்களில் இது பேரளவில் பயன்படுத்தப் படுகிறது என அறிகிறோம்.

சில மாவட்டங்களில் எள் எண்ணெய் கிடைப்பதோடு, பயன் படுத்தவும் படுகிறது. இவை குஜராத்திலுள்ள 'டாங்ஸ்', மகாராஷ்

டிரத்தில் 'நாசிக்', ஆந்திராவில் கரீம்நகர், கிருஷ்ணா, மைசூர் இராச்சியத்தில் மைசூர், பங்களூர், சென்னையில் தஞ்சாவூர், திருநெல்வேலி, ஒரிஸ்ஸாவில் தொரபட், சுந்தர்கர், மத்தியப் பிரதேசத்தில் இராய்கர், பெடூல் ஆகிய இடங்களாகும்.

இப் பிரதேசத்தின் வடமேற்கில் கூர்ச்சரத்தைச் சேர்ந்த பனஸ்கந்தாவும் இராஜஸ்தானைச் சேர்ந்த பான்ஸ்வாரா ஆகிய மாவட்டங்களும் உள்ளன. இவ்விடங்களில் கடுகு எண்ணெய் உபயோகத்திலிருக்கிறது.

ஆந்திராவின் நான்கு தென்மேற்கு மாவட்டங்கள், மைசூரின் வடக்கிலுள்ள ஆறு மாவட்டங்கள், மகாராஷ்டிரத்தின் மேற்கிலுள்ள பதின்மூன்று மாவட்டங்கள் ஆகிய இடங்களில் அபூர்வமாகக் 'குசும்' எண்ணெயும், விலை மலிவான கடலை எண்ணெயும் பயன் படுத்தப்படுகின்றன.

கடுகு எண்ணெய்

இது அஸ்ஸாமில் பிரமபுத்திராப் பள்ளத்தாக்கில் அடங்கும் மாவட்டங்கள், கச்சார், திரிபுரா, மேற்கு வங்காளம் முழுவதும், ஒரிஸ்ஸாவில் கிழக்கிலுள்ள ஏழு மாவட்டங்கள், பீஹார், உத்தரப் பிரதேசம் முழுவதும், மத்தியப் பிரதேசத்தின் மேற்கில் பத்து மாவட்டங்கள் சிதி, சுர்குஜா ஆகியவற்றைத் தவிர இதர பகுதிகள் முதலிய அனைத்திலும் செய்யப்படுகின்றது. பரவலாக காஷ்மீரத் தின் வடக்கு, மேற்குப் பகுதிகள், பஞ்சாபில் 'ஃபெரோஸ்பூர்' (Ferozepur), இராஜஸ்தானத்தில் பரத்பூர், பன்சாரா, குஜராத்தில் பனஸ்கந்தா ஆகிய இடங்களில் இது பயன்படுத்தப்படுகிறது.

இப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பழங்குடி மக்கள், பீஹாரில் உள்ளவர்களைப்போன்று மரவிதைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெயைப் பயன்படுத்துகின்றனர். தமக்கே உரிய விநோதமான முறைகளைக்கொண்டு இவர்கள் எண்ணெய் எடுக்கின் றனர். எண்ணெய் எடுக்கும் முறைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளும் போது இதுபற்றியும் காண்போம்.

எல்லைகளுக்கருகில் உள்ள மாவட்டங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணெய்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த 'சிதி'யில் கடுகு, எள் ஆகிய இரண்டும் உபயோகத்திலுள்ளன. இமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த 'சிர்பூரில்' கடுகு எண்ணெயும் நெய்யும் பயன்படுத்தப் படுகின்றன. பீஹாரில் உள்ள சில மாவட்டங்களில் கடுகும் ஆளிவிதையும் உபயோகத்திலுள்ளன. 'சுர்குஜா' விதைகள், கடுகுடன் எண்ணெய் பிழியப்படுவதற்குமுன் கலக்கப்பட்டு உபயோகிக்கப்படுகிறது.

## எள் எண்ணெய்

இன்று, எள் எண்ணெய் சில இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மத்தியப் பிரதேசத்திலுள்ள பதினறு மாவட்டங்களில் இது சாதாரணமாக இப்பொழுதும் உபயோகத்திலிருக்கிறது. பரவலாக இது சிலவிடங்களில் காணப்படுகின்றது. இவற்றில் சில மாவட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

இராஜஸ்தானத்தில் ஆஜ்மீர், பண்டி, பரத்பூர்; காஷ்மீரத்தில் ஜம்மு, கத்துவா; மத்தியப் பிரதேசத்தில் ராய்கர்; ஆந்திரப் பிரதேசத்தில் கிருஷ்ணு, கரீம்நகர்; சென்னையில் தஞ்சாவூர், திருநெல்வேலி; மைசூர் இராச்சியத்தில் மைசூர், பங்களூர்; மகாராஷ்டிரத்தில் நாசிக், அகோலா; கூர்ஜரத்தில் 'டாங்ஸ்'; ஒரிஸ்ஸாவில் கொரபட், சுந்தர்கர்.

நாகபுரி, பந்தாரா, சுந்தா, வார்தா மாவட்டங்களில் ஆளிவிதை, எள் ஆகிய இரண்டும் உபயோகத்திலிருக்கின்றன.

## ஆளிவிதை எண்ணெய்

மகாராஷ்டிராவில் 'புல்தாணு' மாவட்டத்தைத் தவிர்த்து விதர்பாவின் முழுப்பாகம், மத்தியப் பிரதேசத்தில் 'பாலாகாட்' மாவட்டம் ஆகியவற்றில் ஆளிவிதை உற்பத்தி செய்யப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் சத்ணு, ரீவா, பிலாஸ்பூர்; உத்தரப் பிரதேசத்தில் மிர்ஜாட்பூரின் தென் அரைப்பகுதி; பீஹாரில் சஸாராம்; இராஜஸ்தானத்தில் கோடா, பண்டி ஆகிய இடங்களில் இதன் எண்ணெய் உபயோகத்திலிருக்கிறது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஆளிவிதை எண்ணெய் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

## தேங்காயெண்ணெய்

கேரளத்தில் தேங்காயெண்ணெய் அதிகமாகப் பயன்படுகிறது. மைசூரில் கரையோரமாகத் தொடர்ச்சியாக நான்கு மாவட்டங்களிலும் அஃது உபயோகிக்கப்படுகிறது. ஷிமோகா போன்ற சில மாவட்டங்களில், குறைந்த வருவாயுள்ளவர்கள் தேங்காயெண்ணெயை விரும்புகின்றனர்; மற்றவர்கள் கடலையெண்ணெயை விரும்புகின்றனர். தொலைவிலுள்ள தெற்கில் ஆலப்புழை, திருச்சூர் ஆகியவற்றில் இதற்கு நேர்மாருகவுள்ளது.

## மஹுவா எண்ணெய்

மஹுவா மத்தியப் பிரதேசத்தில் பஸ்தார், ஷாஹ்தோல், சிதி; பீஹாரில் பலாமாவ், சிங்பும்; ஒரிஸ்ஸாவில் கொராபட்,

காலஹந்தி, போலங்கீர், புல்பானி, கஞ்சாம்; இராஜஸ்தானத்தில் உதயபுரி ஆகிய இடங்களில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

குன்றுப் பிரதேசங்களிலிருந்து சமவெளியில் குடியேறியுள்ள மக்களைவிடக் குன்றுவாழ் மக்களே இந்த எண்ணெயை அதிகமாக விரும்புகின்றனர்.

## நெய்

தாவர எண்ணெய்களோடு ஒப்பிட்டால் நெய் அதிக விலையுள்ளதாகும். பிராமணரின் சடங்குகள், கடவுளுக்குப் படைத்தல் ஆகியவற்றுக்கு இது தேவைப்படுகிறது; நாடு முழுவதிலும் மேல் வகுப்பாரிடையேயும், மிகுந்த வருவாயுள்ள மக்களிடையேயும், இஃது ஓர் உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏறக்குறையப் பரவலாக இது பயன்படும் ஒரு பூகோளப் பிரதேசமும் இருக்கிறது. இங்கு மேய்ச்சல் நிலங்கள் இயற்கையாக அமைந்துள்ளன. பல நூற்றாண்டுகளாகப் பாலுக்காகவே மாடுகள் இங்கு வளர்க்கப்படுகின்றன.

பஞ்சாபின் முழுப்பாகம், இமாசலப் பிரதேசத்தில் நான்கு மாவட்டங்கள், இராஜஸ்தானத்தில் ஆறு தென்கிழக்கு மாவட்டங்களைத் தவிரப் பெரும்பான்மையான பகுதி, உத்தரப் பிரதேசத்தில் மேற்கில் பத்து மாவட்டங்கள், மத்தியப் பிரதேசத்தில் அடுத்தடுத்துள்ள குணு, ராஜ்கர், பில்சா மாவட்டங்கள் ஆகியவற்றில் இவ்வகை மாடுகள் மிகுதி. காஷ்மீரத்தில் பஞ்சு, இராஜஸ்தானத்தில் துங்கர்பூர், மத்தியப் பிரதேசத்தில் குவாலியர், தாதியா, பன்னு ஆகியவையும் அவ்வாறே; ஆயின், மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் தொடர்ச்சியாக இருப்பது போலன்றி, இவ்விடங்களில் மாடுகள் பரவலாகவும் சிதறுண்டும் காணப்படுகின்றன.

## பன்றிக் கொழுப்பு

அஸ்ஸாமில் மலை ஜில்லாக்களில் வசிக்கும் பழங்குடியினர் அபூர்வமான சந்தர்ப்பங்களில் பன்றிக் கொழுப்புடன் சோற்றை உண்ணுகின்றனர். சாதாரணமாக இது சமையலுக்குப் பயன்படுத்தப் படுவதில்லை. இறைச்சியிலிருந்து நேரடியாகவே இக் கொழுப்புக் கிடைக்கிறது.

மணிபுரியில் சமவெளிகளில் வசிப்பவர்கள் கொழுப்பையோ, எண்ணெயையோ சமையலுக்குப் பயன்படுத்துவதில்லை. அஸ்ஸாமின் அருகிலுள்ள குன்றுவாழ் மக்கள் தம்முடன் தொடர்புடைய பழங்குடியினரிடமிருந்து அதிகமாக வேறுபட்டவர்களல்லர்.

## எண்ணெய் எடுக்கும் முறை

(எஸ். கெ. கங்குலி, பி. ஆர். ஜி. மாதூர்)

இந்தியாவில் அநேக வகையான செக்குகளினுல் எண்ணெய் பிழிந்தெடுக்கப்படுகிறது. இவை நாடு முழுவதிலும் குறிப்பிடத்தக்க முறையில் பரவியுள்ளன. பலவகையான கருவிகள், எண்ணெய் எடுக்கும் முறைகள் ஆகியவை பிரதேசவாரியாக வேறுபடுவதைத் தெரிந்துகொள்வதே நமது நோக்கமாகும். இப் பழங்கலைகளும், வேலைப்பாடுகளும் அப் பிரதேசங்களுடன் தொடர்புள்ளவை. புதிய முறைகளினுல் இவை அறவே அழிக்கப்படாமலிருக்கும் இடங்களி லிருந்து அவற்றை நாம் வெளி உலகத்திற்குக் கொண்டுவரலாம்.

வகுப்புவாரியாக மிகவும் எளிய முறைகளைக்கொண்டு நாம் தொடங்குவோம்.

தேன்கனலில் ஜுவாங் மக்கள் தானியம் குத்தும் நெம்பு கோலால் விதைகளை நசுக்கி, அவற்றைக் கொதிக்கவைக்கின்றனர். எண்ணெய் மேற்பாகத்தில் மிதக்கும்; மெல்லிய பறவை இறகால் அஃது ஒருபுறமாக ஒதுக்கப்படுகிறது. பின்னர் ஒரு பாத்திரத் திற்குள் எண்ணெயை ஊற்றுகின்றனர்.


மாயூர்பஞ்ச் கிராமவாசிகள் 'மார்கிங்-நட்' என்னும் கொட்டையி லிருந்து காய்ச்சி வடிகட்டும் முறையினுல் எண்ணெய் எடுக் கின்றனர். ஒரு மட்பாண்டத்தில் எண்ணெய் வித்துகள் போடப் படுகின்றன. பாண்டத்தின் வாய் நன்ருக மூடப்படுகிறது; கீழே ஒரு துளை விடப்பட்டிருக்கும். ஒரு குழியின்மீது வைக்கப்பட்டுள்ள மற்ருெரு மட்பாண்டத்தின்மேல் இது வைக்கப்படுகிறது. தேவை யான அளவுக்கு வரட்டி (cowdung cake), வைக்கோல் ஆகிய வற்ருல் இதைச் சுற்றி நெருப்பிடுகின்றனர். நெருப்பு அணைந்த பின்னர், அடியிலுள்ள பாத்திரத்திலிருந்து எண்ணெயை எடுத்துக் கொள்கின்றனர்.

இம் முறைகள் விதி விலக்கானவையேயன்றி வேறல்ல. நாம் குறித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகவே இவை குறிக்கப் பட்டன.

### தட்டையான எண்ணெய்ச் செக்குகள்

இரண்டு கனமான கட்டைகளை அல்லது உத்திரங்களை இந்தி யாவின் கிழக்கிலுள்ள பெரும்பாலான பழங்குடி மக்கள் எண்ணெய்

எடுக்கப் பயன்படுத்துவது சாதாரண முறையாகவுள்ளது. விதைகள் நன்ருக நசுக்கப்படுகின்றன. நீர் ஒரு பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருக்கும். அதன்மேல் வைக்கப்பட்டுள்ள ஒரு கூடையின்




படம் 29. பீஹாரில் சிங்பும் மாவட்டத்தில் செங்குத்தாகவுள்ள மரப்பலகையாலான செக்கு.

மூலம் நீராவி இவ் விதைகளின்மேல் செலுத்தப்படுகின்றது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட நசுங்கிய விதைகள் எளிதில் மடங்கக்கூடிய கூடைகளில் போடப்படுகின்றன. இரண்டு கனமான மரக்கட்டைகளினிடையே கூடைகள் வைக்கப்படுகின்றன. கட்டைகளின் ஒரு முனை அசையாதவாறு பொருத்தப்பட்டிருக்கும். மற்ரெருரு முனையில் ஒரு கயிறு கட்டப்பட்டிருக்கும். ஒரு மர நெம்புகோலின் உதவியால், இக் கயிறு இறுக்கப்படுகிறது; செக்கை இயக்குவோர் நெம்புகோலின் மீது அமர்ந்துகொள்வதனுல், அதன்மீது எடை அழுத்தப்படுகிறது. கீழே சொட்டிக்கொண்டிருக்கும் எண்ணெயைப் பாத்திரங்களில் சேமித்துக்கொள்கின்றனர்.


மரச்செக்கு என்பது இதிலிருந்து சிறிது வேறுபட்டுள்ளது. இதில் ஒரு மரக்கட்டைதான் பயன்படுத்தப்படுகிறது. மரத்தினடியில் போடப்பட்டுள்ள மற்ரெருரு மரக்கட்டையின்மேல் எண்ணெய்ப் பாத்திரங்கள் வைக்கப்படுகின்றன. மரத்தில் ஓர் ஓட்டை செய்யப்பட்டு, அழுத்தும் கட்டையின் ஒரு முனை அதனுள் செருகப்படுகிறது. மற்ரெருரு முனை அழுத்த உதவுகிறது.

மரக்கட்டைச் செக்கு, மரச்செக்கு ஆகியவற்றின் இருப்பிடங்களைத் தேசப்படத்தில் நோக்கினுல், பூகோள அமைப்புக்கேற்றபடி

அவை சில பிரதேசங்களிலேயே காணப்படுகின்றன என்றறிகிறோம். கிழக்கிந்தியாவில் உள்ள சில பழங்குடி மக்களிடையே இவை காணப்படுகின்றனவென்று ஏற்கெனவே கூறினோம். நேபாளத்



படம் 30. ஒரிஸ்ஸாவில், மயூர்பஞ்ச் மாவட்டத்தில் மட்டநிலையாகவுள்ள மரப்பலகையினாலான செக்கு.




படம் 31. பீஹாரில், சிங்பும் மாவட்டத்தில் உள்ள மரச்செக்கு.

திலும் உலகின் மற்றப் பாகங்களிலும் இதே மாதிரி எண்ணெய்ச் செக்குப் பயன்படுகிறது. சீன நாட்டில் தட்டையான எண்ணெய்ச் செக்குக் காணப்படுகிறது. ஆனால், எண்ணெய் எடுக்கும் விதம் இந்தியாவில் எண்ணெய் எடுக்கும் விதத்திற்கு மாறுபட்டுள்ளது.


சுழலும் எண்ணெய்ச் செக்குகள்

சுழலும் செக்குகள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதிலும் பயன்படுத்தப்பட்டன. தற்பொழுது மின்சக்தியால் இயங்கும் எந்திரங்களினுதவியால் எண்ணெய் பிழியப்படுவதால், இவ்வகைச் செக்குகள் வழக்கிலிருந்து விரைவாக மறைந்து வருகின்றன. தேசப் படத்தில் நோக்கினுல் அநேக மாவட்டங்களைப்பற்றிய செய்திகளை




படம் 32. பீஹாரில், சிங்பும் மாவட்டத்தில் ஒரே மரத்துண்டால் செய்யப்பட்ட எண்ணெய் வழியும் கால்வாயுடன் கூடிய செக்கு. கண்கள் கட்டப்பட்ட ஒரே எருது இதில் பயன்படுத்தப்படுகிறது.

அங்குக் காணவியலாது. இக் கிராமங்கள் அல்லது இவற்றையடுத்துள்ள பகுதிகளில் மட்டுமே எங்களது ஆராய்ச்சி நடைபெற்றது. எண்ணெய்ச் செக்குகள் உள்ள இடங்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவு கங்கைச் சமவெளி தொடங்கி, விந்தியமலை வரையில் காணப்படுகிறது. இந்த ஆலையில் வித்துகள் நசுக்கப்படும்போது, எண்ணெய் பாய்ந்து வருவதற்கேற்ற ஒரு கால்வாய் அல்லது ஊற்று அமைந்திருக்கிறது. மற்ரெருவிதம், தீபகற்ப இந்தியா, பஞ்சாப் வரையிலுமுள்ள மேற்கு மாவட்டங்கள் ஆகிய இடங்களில் காணப்படுகிறது. இதில் எண்ணெய் சொட்டுவதற்கான கால்வாய் இல்லை. ஒரு முறை இடப்பட்ட வித்துகள் நன்ருகப் பிழியப்பட்டபின், செக்கிலிருந்து உலக்கையை எடுத்துவிடுகின்றனர். மத்தியில் உள்ள எண்ணெய்க் கரண்டிகளால் வெளியேற்றப்படுகிறது; அல்லது குச்சிகளின் நுனியில் சுற்றப்பட்டுள்ள துணியால் எண்ணெய் பாத்திரத்திற்குள் பிழியப்படுகிறது.



படம் 33. மேற்கு வங்காளத்தில், மிதுனபூர் மாவட்டத்தில் இரண்டு மரத்துண்டுகளாலான எண்ணெய்ச் செக்கு. எண்ணெய் கால்வாயுள்ளது. கண்கள் கட்டப் பட்ட ஒரே எருது இதில் பயன்படுத்தப்படுகிறது.



படம் 34. பீஹாரில், சிங்பும் மாவட்டத்தில் எண்ணெய் வழியும் கால்வாயில்லாத எண்ணெய்ச் செக்கு. கண்கள் கட்டப்படாத இரண்டு எருதுகள் இதில் பயன்படுத்தப்படுகின்றன.


ஒவ்வொரு வகையான எண்ணெய்ச் செக்கு உள்ள இடங்களி லெல்லாம் சில நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுவதையொட்டி அவற்றை உபபிரிவுகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக, ஒரு மரக் கட்டையாலோ அல்லது இரண்டு மரக்கட்டைகளினாலோ செக்குகள் அமைக்கப்படலாம். செக்கு, உரல் ஆகியவற்றை இணைக்கும் நுகத் தடியில் எருதுகள் பூட்டப்பட்டு அமைக்கப்படுவதுமுண்டு; ஒன்று அல்லது இரண்டு எருதுகள் பூட்டப்படலாம்; இவற்றின் கண்கள் கட்டப்பட்டோ அல்லது கட்டப்படாமலோ இருக்கும். செக்கு சம்பந்த மான பழக்கத்தின் ஒவ்வொரு வகையும் தலைமுறை தலைமுறை யாக மாறுதல் எதுவுமின்றிப் பாதுகாக்கப்படுகின்றது.

பல இடங்களின் சந்திப்பாக வடக்கு ஒரிஸ்ஸா போன்ற இடங்கள் விளங்குகின்றன. இங்கு ஒரே மாவட்டத்தில் பல வகை யான செக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகைச் செக்கு அல்லது எண்ணெய் பிழிந்தெடுக்கும் முறையை அறிந்துள்ள சாதியினர், தமக்குள்ளேயே திருமணம் முதலியவற்றைச் செய்துகொள்ளு கின்றனர். இந் நிலையில், பரம்பரையாகத் தொழிற்குழுக்களால் ஏற்பட்ட ஒரு சாதியினர் மற்றொரு சாதியினரோடு கலந்து கொள்ள மறுக்கின்றனர். சில வேளைகளில், சமூகப் பழக்கங்களிலும் இவ்வகைச் சாதியினர் வேறுபட்டு நிற்கின்றனர்.[1]

1934ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தைத் துவக்கினார். அவ்வாண்டிலிருந்து உள்நாட்டு முறையில் எண்ணெய் பிழிந்தெடுப்பதற்கான முறைகளைப் புதுப்பிக்க இந்தியா முழுவதும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. இவ் வாறான உள்நாட்டுச் செக்குகள் இந்தியா முழுவதிலும் காணப் படுகின்றன. முன்னேற்றமடைந்துள்ள செக்குகள் 'வார்தா கனி' என்று அழைக்கப்படுகின்றன. எண்ணெய் விழுவதற்கான ஒரு கால்வாய் இவ்வகைச் செக்கில் இருக்கிறது. இச் செக்குகளின் பயன் இந்தியாவின் மேற்கிலும் தெற்கிலும் உள்ள மாவட்டங்களிலுள்ள எண்ணெய்ச் செக்குகளைப் பெரிதும் பாதித்துள்ளது.


கூர்ஜரத்தைச் சேர்ந்த கட்ச், சௌராஷ்டிரம், மகாராஷ்டிரத்தில் சில பகுதிகள் ஆகிய இடங்களில் எண்ணெய் வெளியேறுவதற்காகச் செக்குகளில் துவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சுவையான ஒரு விஷயம் உள்ளது. எண்ணெய் பிழியுமுன் இந்த துவாரத்தைத் துணிச்சுருளால் அடைத்துவிடுகின்றனர். எல்லா எண்ணெய் வித்துகளும் நசுக்கப்பட்டு எண்ணெய் சேர்ந்த பின்னரே இத் துவாரம் திறக்கப்பட்டு, எண்ணெய் இதன் வழியாக வெளியேற்றப் படுகின்றது. இவ்வாறு எண்ணெய்ச் செக்குகளின் அமைப்பில்

[1] *நிர்மல்குமார் போஸ்: இந்து சமாஜர் கரன், 1356* B.S., *பக்கங்கள் 52-61.*




© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.
Reproduced from the original supplied by the Director Anthropological Svy of India and the Survey of India is not responsible for the accuracy of the map
PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

கொழுப்புகளும் எண்ணெய்களும்




Rea No. 2979 E '61 2800

© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.


Reproduced from the original supplied by the Director Anthropological Svy of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

எண்ணெய்ச் செக்குகள்

மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், செயலளவில் மாறுதல்கள் குறைவாகவே ஏற்பட்டுள்ளன.

கேரளா, மைசூர் ஆகிய இடங்களிலுள்ள மாவட்டங்களில் செக்கின் உட்பகுதியில் ஒரு குறுகலான கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. வடக்கில் இருப்பதுபோல், இதன் வழியாக எண்ணெய் வெளியே சொட்டுகிறது. புதிய முறைச் செக்கில் குறுகலான ஓர் இரும்புக்குழாய் இணைக்கப்பட்டுள்ளது. இது முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருப்பினும், தோற்றத்தில் பொருத்தமற்றதாக உள்ளது. கேரளாவின் மாவட்டங்களில் இத் தொழிலில் காணப்பட்ட சர்வாதீனம் (monopoly) ஓரளவு முறிக்கப்பட்டுள்ளதைக்



படம் 35. எண்ணெய் கால்வாயுள்ள செக்கு; ஒரே மரத்துண்டினாலானது. எருதுகளுக்குப் பதிலாக ஆண்களும் பெண்களும் இதை இழுக்கின்றனர். சாதி போய் விடும் என்னும் அச்சத்தினாலேயே இவ்வாறு செய்கின்றனர். எருதுகளைப் பயன்படுத்தினால், மற்ற எண்ணெய் ஆட்டுவிப்போரைப் போலத் தாழ்த்தப்பட்டுவிடுவோமோ என்று இவர்கள் அச்சமுறுகின்றனர். (பீஹாரில், ராஞ்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜமார் பர்காணுக்கள்).

காணலாம். அங்குப் பரம்பரையாக எண்ணெய்த் தொழிலில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான வாணியர்கள் அத் தொழிலை விட்டு விட்டனர். இரும்புக்குழாய் பொருத்தப்பட்ட செக்குகளை ஈழவர்கள் இயக்கிக்கொண்டிருந்தார்கள். ஈழவர்கள் தென்னை, பனை ஆகிய மரங்களிலிருந்து சாற்றை எடுத்தலைத் தமது பரம்பரைத் தொழிலாகக் கொண்டவராவர்.

# 5. கலப்பைகளும் உமி நீக்கும் கருவிகளும்

## கலப்பைகள்

(ஜயதத்த குப்தா; பி. என். சரசுவதி)


அமைப்பினாலும் எடையினாலும் கலப்பைகள் வேறுபடுகின்றன. நாட்டின் சில பாகங்களில் எடையும் அளவும் குறிப்பிடத்தக்க



படம் 36. ('ஏ' விதக் கலப்பை) தலையும், உடற்பாகமும் தொடர்ச்சியாகவுள்ள மட்ட நிலையான கலப்பை (ஜம்மு - காஷ்மீரத்தில் , பாரமுல்லா மாவட்டத்தைச் சேர்ந்தது).

வகையில் அமைந்துள்ளன. உதாரணமாக, வங்காளத்தில் கலப்பையின் எடை 50 சேர் ஆகவும், பண்டேல்கண்டில் மூன்றரை மணங்காகவும் இருக்கிறது.[1] மண், உழவு மிருகங்களின் வலிமை, இயற்கை, உழப்படவேண்டிய நிலத்தின் ஆழம் ஆகியவை கலப்பையின் அமைப்பைப் பொறுத்திருக்கின்றன. எனவே, ஒரே இராச்சியத்தில் பலவகையான கலப்பைகளை வெவ்வேறு பயன்களுக்காக மக்கள் உபயோகிக்கின்றனரென்பதை நாம் முக்கியமாக அறியவேண்டும். மொத்தமாகப் பார்த்தால், ஒவ்வொரு பிரதேசத்திலும் தனிப்பட்ட ரகக் கலப்பைகள் வழக்கில் இருப்பது கண்கூடு. இவ்வியலில் அவற்றின் குணங்களையும், தேசப்படத்தில் அவை காணப்படும் இடங்களையும்பற்றி விவரிப்பதே நமது நோக்கமாகும்.

வகைப்படுத்த முற்படுங்கால், ஒரு கலப்பையின் பாகங்களைத் (கொழுவைத் தவிர) தலை, உடல், கைப்பிடி, உத்திரம் எனப் பிரிக்கலாம். கொழு பொருத்தப்பட்டுள்ள பாகம் கலப்பையின் 'தலை' யாகும். இது நுனியை நோக்கிக் குறுகலாகப் போவதால், உடலிலிருந்து அதிகமாக வேறுபட்டில்லை.



படம் 37. 'ஏ' விதக் கலப்பை; மைசூரில் மைசூர் மாவட்டத்தில் உள்ளது.

[1] என். ஜி. முக்கர்ஜி : 'ஹாண்ட்புக் ஆஃப் இன்டியன் அக்ரிகல்ச்சர், கல்கத்தா, 1915, பக்கங்கள் 93, 99.


**'ஏ' இனக் கலப்பை**

இதில் உடலும் தலையும் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுக் கிடைமட்டமாக உள்ளன. கைப்பிடி, உத்திரம் ஆகியவை கலப்பையின் உடலோடு தனியாக இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஜம்மு-காஷ்மீர் இராச்சியத்திலும், இமாசலப் பிரதேசம் முழுவதிலும் இவ்வகைக் கலப்பை அல்லது சிறிது வேறுபாடுடைய கலப்பை காணப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் 'சமோலீ', பஞ்சாபில் 'காங்க்ரா', 'ஹோஷியார்பூர்,' 'பெரோஸ்பூர்' ஆகிய இடங்களில் இக் கலப்பையின் உதாரணங்களைக் காணலாம். இதில் சற்று மாறுபாடுடைய கலப்பை உத்தரப் பிரதேசத்தில் லட்சுமணபுரி, ஹர்தாய், உன்னல், பரூகாபாத், சுல்தான்பூர் மாவட்டங்கள், பீஹார் மாவட்டங்களான 'பாலமாவ்', 'ஹஸாருபாக்' ஆகியவற்றில் காணப்படுகின்றன. ஒரிஸ்ஸாவில் கஞ்சாம், கொரபட், மைசூர் இராச்சியத்தில் மைசூர், குடகு, பங்களூர் மாவட்டங்கள் ஆகியவற்றில் காணப்படும் கலப்பைகளையும் இவ்வகையில் சேர்க்கலாம்.

**'பி' இனக் கலப்பை**


இவ்வகையில் உடலும் கைப்பிடியும் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுள்ளன. தலைப்பாகம் சில வேளைகளில் பெரிதாக இருப்பதும் உண்டு. இஃது உடற் பாகத்தோடு செங்கோணம் அல்லது விரிகோணத்தில் இணைக்கப்பட்டுள்ளது.



படம் 38. 'பி' விதக் கலப்பை. உடலும் கைப்பிடியும் தொடர்ச்சியாகவுள்ளன (இராஜஸ்தானத்தில் ஜெயபுரி மாவட்டம்).

இவ்வகைக் கலப்பையைக்கொண்ட நிலப்பகுதி இராஜஸ்தானத்தின் முழுப்பாகம், இமாசலப் பிரதேசத்தைத் தவிரப் பஞ்சாபின் இதர பகுதிகள், மேற்கு உத்தரப் பிரதேசம், மேற்கு மத்தியப்


பிரதேசத்தின் பெரும் பகுதி, கூர்ச்சரத்தில் சௌராஷ்டிரம், கட்ச்; மஹாராஷ்டிரத்தில் புல்தாஞ, அகோலா, யோத்மால் முதலிய மாவட்டங்கள் ஆகும்.



படம் 39. 'பி' விதக் கலப்பை. விதை போடுவதற்கான புனலோடு கூடியது (உத்தரப் பிரதேசம்).

'ஸி' இனக் கலப்பை


ஒரே மரத்துண்டிலிருந்து செய்யப்பட்ட உடலும் தலையும் இதில் உள்ளன. தலை, உடலோடு சாய்வாகப் பொருத்தப்




படம் 40. 'சி' விதக் கலப்பை. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளது. உடலும், தலையும் ஒரே மரத்துண்டினலானவை. கைப்பிடி பின்பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

பட்டுள்ளது. உடலுக்கு முன்னல் அல்லது பின்னல் கைப்பிடி அமைக்கப்பட்டுள்ளது. உடலில் பொருத்தப்படும் உத்திரம், கைப்பிடியின் வழியாகச் செல்லலாம்; அல்லது செல்லாமலுமிருக்கலாம்.


இவ்வகைக் கலப்பை இந்தியாவில் மிகவும் அதிகமான பகுதிகளில் காணப்படுகிறது; தீபகற்ப இந்தியாவின் முழுப்பகுதி, வடமேற்கில் குஜராத்தைச் சேர்ந்துள்ள சூரத், மேற்கு காண்டேஷ்,




படம் 41. 'சி' விதக் கலப்பை. உடலின் பின்பக்கத்தில் கைப்பிடியுள்ளது. உத்திரமானது, உடற்பாகத்தில் கைப்பிடியின் கீழாகச் செல்லுகிறது (கன்னியாகுமரி மாவட்டம், சென்னை).



படம் 42. 'சி' விதக் கலப்பை. ஒரிஸ்ஸாவில் கட்டாக் மாவட்டத்தில் உள்ளது. உடலின் உச்சியில் முன்பாகத்தில் கைப்பிடியுடன் கூடியது.



படம் 43. 'சி' விதக் கலப்பை. உடலும், கைப்பிடியும் ஒரே மரத்துண்டினுலானது. கைப்பிடி உடற்பாகத்தின் முன்னுல் பொருத்தப்பட்டுள்ளது. கேரளத்தில் கோட்டயம் மாவட்டத்தில் உள்ளது.




படம் 44. 'சி' விதக் கலப்பை. உடலின் மேலே, பின்பக்கத்தில் கைப்பிடியுடன் கூடியது. (பீஹாரில், கயா மாவட்டம்).


கிழக்கு நீமார் மாவட்டங்கள் ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது. கிழக்கில் ஒரிஸ்ஸாவிலிருந்து பீஹாரின் முழுப்பாகத்திலும், இந்தியாவின் வடக்கிலுள்ள மலைவிளிம்புவரையிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

'டி' இனக் கலப்பை

'சி' வகையைப் போலவே இதிலும் தலை, உடலோடு சாய்வாகப் பொருத்தப்பட்டுள்ளது. கைப்பிடி உடலோடு தொடர்ச்சி




படம் 45. 'டி' விதக் கலப்பை. அஸ்ஸாமில் கோல்பாரா மாவட்டத்தில், ஒரே துண்டு மரத்தில் செய்யப்பட்ட கலப்பை.




படம் 46. 'டி' விதக் கலப்பை. அஸ்ஸாமில் தாரங் மாவட்டத்தில், ஒரே துண்டு மரத்தில் செய்யப்பட்ட கலப்பை.

யாக இணைக்கப்பட்டிருப்பதே இதில் காணப்படும் வேறுபாடாகும். அநேகமாக உத்திரத்தைத் தவிர கலப்பையின் இதர பகுதிகள்



படம் 47. 'டி' விதக் கலப்பை. பின்பக்கமாக வெளியே ஒட்டிக் கொண்டிருக்கும் மூங்கில் கொழுவுள்ள கலப்பை. (அஸ்ஸாமில், லாகிம்பூர் மாவட்டம்).



படம் 48. நாற்கோண வரை வடிவமுள்ள கலப்பை (அஸ்ஸாமில், லாகிம்பூர் மாவட்டம்).

யாவும் ஒரே மரத்துண்டினுல் செதுக்கி உருவாக்கப்பட்டுள. அவ்வாறில்லாவிடினும், கலப்பையின் பாகங்கள் பிரியாதவாறு பொருத்தப்படுகின்றன.

மேற்கு வங்காளம், அஸ்ஸாம், பீஹாரில் மணிபுரி, திரிபுரா, சிங்பும், ஒரிஸ்ஸாவில் கியோஞ்சஹார், சம்பல்பூர், பூல்பானி, மத்தியப் பிரதேசத்தில் சாடிஸ்கார் பகுதி, பாலாகாட், துர்க், பஸ்தார் ஆகிய இடங்களில் இவ்வகைக் கலப்பை காணப்படுகிறது.

கேரளாவில் கொல்லத்தைச் சேர்ந்த ‘ கல்லுவத்தக்கல் ’ என்னுமிடத்தில் அபூர்வமான விதங்கள் காணப்படுகின்றன. கலப்பையின் கொழு பிளக்கப்பட்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்டுள்ள ஒரு வகை, அஸ்ஸாமில் லாகிம்பூர் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது. கொழு நீளமாக உள்ளது. உடற்பகுதியிலுள்ள குழியின் வழியாக இது பின்புறமாக வெளியே நீண்டுகொண்டிருக்கிறது. அதிகமாக உபயோகப்படுத்தப்பட்ட முனை மழுங்கியபின், இது முன்னுக்குத் தள்ளப்பட்டு ஓர் ஆப்பினுல் பொருத்தப்படுகிறது.


ஒரே இராச்சியத்தில் பலவகைக் கலப்பைகள் இருக்கின்றனவென்றும், அவை வெவ்வேறு விதங்களில் பயன்படுகின்றனவென்றும் ஏற்கெனவே கூறியுள்ளோம். பி. எச். பேடன் பவல், பஞ்சாபில் ‘ஏ’, ‘பி’, பிரிவுகளைச் சேர்ந்த ‘ஹால்’, ‘முன்ஞ’ வகைக் கலப்பைகளுக்குள்ள தன்மைகளை ஒப்பிட்டு உணர்த்தியுள்ளார். ‘ முன்ஞ ’ கலப்பையில் சிறந்த வகையாகக் கருதப்படுகிறது என்று இவர் எழுதியுள்ளார். இது ‘ ஹால் ’ வகையைக் காட்டிலும் நிலத்தில் அதிக ஆழமாக ஊடுருவிச் செல்கிறது. தரையின் மேலுள்ள மண் மேலும்மேலும் மிருதுவாகும்போது, இக் கலப்பை இன்னும் அதிக ஆழமாக நிலத்தை உழுகிறது. இதனை இழுக்க வலிமையுள்ள எருதுகள் தேவை. இது கெட்டியான புன்செய் நிலங்களில் பயன்படுத்தப்படுகிறது. நதியின் அருகிலுள்ள ‘ பெட் ’ நிலத்தில் ‘ ஹால் ’ கலப்பை பயன்படுகிறது. இது முன்ஞவைவிடக் கீழ்த்தரப்பட்டதாகும். இது நிலத்தின் மேல் பாகத்தை மட்டும் கீறுகிறது. பெட்[1] நிலத்தில் குறைந்த வலிவுடைய கால்நடைகள்மட்டுமே காணப்படுகின்றன. இங்கு அதிக கனமுள்ள கலப்பையால் யாதொரு பயனுமில்லை.

இவ்வாறு பஞ்சாபில் அடுத்தடுத்துள்ள இரண்டு வகைகளைக் காணலாம். பொதுவாக இராஜஸ்தானத்தில் ‘ பி ’ வகைக்

[1] பி. எச். பேடன்பவல், ‘ ஹாண்ட்புக் ஆஃப் தி மானுபாக்சர்ஸ் அண்டு ஆர்ட்ஸ் ஆஃப் தி பஞ்சாப் ’. இது ‘ ஹாண்ட் புக் ஆஃப் தி எகனமிக் பிராடக்ட்ஸ் ஆஃப் தி பஞ்சாப்’ என்பதன் இரண்டாம் பகுதி, 1872, லாகூர், பக்கம் 314.

கலப்பையே காணப்படினும், ஜோதிபுரி, நாகார் (Nagaur) ஆகிய இடங்களில் 'சி' வகைக்கும் பஞ்சமில்லை. உத்தரப் பிரதேசத்தில் பெரும்பாலும் 'பி' வகை பயன்பட்டபோதிலும், 'ஏ', 'சி', 'டி' வகைகளும் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன.

அஸ்ஸாமில் சிப்சாகர், லாகிம்பூர் மாவட்டங்கள், மீஸே குன்றுகள் ஆகியவற்றில் நாற்கோணக் கலப்பைகளைக் காணலாம்.



படம் 49. நாற்கோண வரை வடிவமுள்ள கலப்பை.
(அஸ்ஸாமில், லாகிம்பூர் மாவட்டம்)

இவ்வகைக் கலப்பை ஜெர்மனி, ஸ்காண்டிநேவியா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸின் வடக்கில் உள்ள பிரிட்டனி, நார்மண்டி, பிரீ, ஆர்டென்னஸ், ஜுரோவரையிலுமுள்ள கிழக்கு பிரான்ஸ், ஆல்ப்ஸ் பகுதியிலுள்ள நாடுகள், பொஹீமியா, இத்தாலி, தென் மேற்கு ஐரோப்பா, போலந்து, தெற்கு ருஷியா, காகஸஸ், ஆர்மீனியா, அஸர்பைஜான், கிழக்கு ஆசியாவில் பாரசீகத்தி லிருந்து ஷாங்ஹாய், ஷான்துங், கொரியா, ஜப்பான், பிலிப்

பைன்ஸ், இந்தியாவிற்கு வெளியே ஜாவா[1]வரையிலுள்ள இடங்கள் ஆகியவற்றில் காணப்படுகிறது. இவ்வகைக் கலப்பைகள் இந்திய சமஸ்தானத்திலும் காணப்படுகின்றனவென்று அறிகிறோம்.

இங்கு ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கதாகும். நாற்கோணக் கலப்பை ஒரு தனி ரகமாக இருப்பினும், மேலே குறிப்பிட்டுள்ள 'சி' வகைக் கலப்பையை அஃது ஒத்திருக்கக் காணலாம். உடல், கைப்பிடி ஆகியவற்றின் வழியாகச் செல்லும் உத்திரம் இவ்விரண்டிலும் இருக்கிறது.

இவை ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருப்பின், இந்தியாவிலுள்ள கலப்பைகள் கிழக்கு, தென்மேற்கு ஆசியாவிலுள்ள கலப்பைகளோடு வரலாற்றுத் தொடர்புடையவையாக இருக்கவேண்டுமென்று அறியலாம். மொழித் தத்துவம்பற்றிய ஆராய்ச்சிக்கு இங்கு ஒரு பயனுள்ள செய்தி கிடைத்துள்ளது. 'லாங்கல்' அல்லது அச் சொல்லின் வேற்றுருவங்கள் இந்தியாவின் சில பகுதிகளில் வழக்கிலுள்ளன. அதேபோல் 'ஹால்' அல்லது அச் சொல்லின் வேற்றுருவங்கள் இதர பகுதிகளில் வழக்கிலுள்ளன. பிரிழிலுஸ்கி[2] என்பவர் 'லாங்கல்' என்னும் சொல் இந்தியாவுக்கு வெளியே வழங்குகிறதா என்பதற்கான சான்றுகளைத் தேடினர். இதேபோல இங்குப் பயன்படுத்தப்படும் கருவிகளின் அமைப்பு, பயன்படுத்தும் முறை ஆகியவற்றிலும் தொடர்புகளைக் காண முயலலாம். விவசாய முறையோடு தொடர்புடைய பல சொற்களும், பொருள்களும் வரலாற்றில் பல புதிய செய்திகளை நமக்குக் காட்டக் கூடும்.

நுண்காட்சி

அஸ்ஸாம் இந்தியாவின் எல்லையில் உள்ளது. இங்குக் காணப்படும் ஒன்றிரண்டு தன்மைகளை இந்தியாவுக்கு வெளியிலுள்ள நாடுகளிலும் காண்கிறோம். கிழக்கு ஆசியா முழுவதிலும், ஜப்பானிலிருந்து பிலிப்பைன்ஸ்வரையிலுமுள்ள இடங்களில் கலப்பையில் ஒரே எருமையைப் பூட்டும் வழக்கமிருக்கிறது. இரண்டு எருதுகளைப் பூட்டும் வகையில் அமைந்துள்ள இந்திய நாட்டு நுகத்தடியிலிருந்து இது வேறுபட்டிருக்கிறது. கிழக்கெல்லையைச் சேர்ந்த திரிபுராவில் வங்காளத்திலிருப்பதுபோன்ற கலப்பை இருக்கிறது. ஆனால், தூரக்கிழக்கில் காண்பதுபோன்று, ஓர் எருது

[1] பாஷ்மகாவ், எம். அலெக்ஸாந்தர் 'தி எவலூஷன் ஆஃப் தி பிளவ், இன் தி ஜர்னல் ஆஃப் தி டிபார்ட்மெண்ட் ஆஃப் லெட்டர்ஸ், கல்கத்தா பல்கலைக் கழகம், 1934.


[2] லெவி, சில்வியன், ஆன் பிரிழிலுஸ்கி, ஜூல்ஸ் பிளாக் : பிரி-ஆர்யன் அண்டு பிரி-டிரவிடியன் இன் இண்டியா'—பிரபோத் சந்திர பகேஷியால் மொழிபெயர்க்கப்பட்டது; கல்கத்தா பல்கலைக்கழகம், கல்கத்தா, 1929, பக்கங்கள் 8-15.

பூட்டக்கூடிய நுகத்தடியும் காணப்படுகிறது. இராஜஸ்தானத்தின் சில பகுதிகளிலும் பஞ்சாபிலும் கலப்பையில் ஒரே ஓர் ஒட்டகத்தைப் பூட்டுகின்றனர்.

## உமியை நீக்குவதற்கான கருவிகள்

(பிகாஷ் ராய்சவுத்ரி)

இந்தியக் கிராமங்களில் உரல், உலக்கை ஆகியவற்றால் தானியங்களைக் குத்துகின்றனர்; அல்லது உலக்கையின் ஒரு முனையில்



படம் 50. மேற்கு வங்காளத்தில், 24 பர்காணைக்கள் மாவட்டத்தில் காணப்படும் தேங்கி.

மரத்தினால் செய்யப்பட்டுள்ள ஒரு கனமான நெம்புகோலைப் பொருத்துகின்றனர். ஒருவர் அல்லது இருவர் இந் நெம்புகோலை

மிதித்து விடுகின்றனர். இதனுல் தானியங்களிலிருந்து உமி நீக்கப் படுகிறது. பின்னுல் கூறப்பட்ட வகை சில இடங்களில்மட்டுமே காணப்படுகிறது. வங்காளியில் இதற்கு 'தேங்கி' என்ற சொல் வழங்குகிறது.

கையால் குத்துவதற்கான உலக்கையும் உரலும் பெரும்பாலான இடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. உரலின் தன்மையைக் கொண்டு பல பிரிவுகளைக் காணலாம். மரம், கல், அபூர்வமாகக் கெட்டியான கனமுள்ள மட்பாண்டம் ஆகியவற்ருல் உரல்கள் செய்யப்படுகின்றன. உலக்கைகள் பலவிதங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விதங்களைக்கொண்டு ஒரு பிரதேசத்தைப் பல துணைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம்.

தேசப்படத்தில் தேங்கி, உரல், உலக்கை ஆகியவை காட்டப் பட்டுள்ளன.

பல்வேறு வகையான உரல்கள் காணப்படும் இடங்களைப்பற்றிக் கீழே காணலாம்.

1. நிலத்தோடு பொருத்தப்பட்ட உரல்


ஒரு மரத்துண்டிலோ அல்லது கல்லிலோ குழி செதுக்கி, அதை வீட்டின் நிலத்தில் பதித்துவிடுவர். சில வேளைகளில் பல உரல்கள் அடுத்தடுத்துப் போடப்படுகின்றன. ஒரே நேரத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்வதற்காக இவ்வாறு அமைக்கப் பட்டுள்ளது. திறந்தவெளியில் பெண்கள் வேலைசெய்யும் நாடு களில் கெட்டியான, அகலமான கற்பாறைகள் உள்ளன. அவற்றின் மத்தியில் செய்யப்பட்ட குழி, உரல்களாகப் பயன்படுகின்றன.

இவ்வகை, இந்தியாவின் பல பகுதிகளில் காணப்படுகிறது. கேரளம், மைசூர், மகாராஷ்டிரம், குஜராத், சிகார், ஜுஞ்சுனு, சுரு மாவட்டங்களைத் தவிர்த்து, இராஜஸ்தானம், மத்தியப் பிரதேசம், விதர்ப்பம், கோண்டா, இமாசலப் பிரதேசம் ஆகியவற்றைத் தவிர்த்து உத்தரப் பிரதேசம், காஷ்மீரத்தில் உதம்பூர், ஜம்மு, கத்துவா ஆகிய மூன்று மாவட்டங்கள்; வங்காளத்தில் புருலியா; பீஹாரில் சிங்பும், ராஞ்சி, சாந்தல பர்காணுக்கள்; ஒரிஸ்ஸாவில் சுந்தர்கர், காலஹந்தி, கஞ்சாம், புல்பானி, கொரபெட், கியோஞ்சஹார், மாயூர்பஞ்ச் ஆகிய இடங்கள் இதில் அடங்கும். ஆந்திரப் பிரதேசத்தில் இஃது அபூர்வ மாகக் குண்டூர், நெல்லூர் ஆகிய இடங்களில் காணப்படுகிறது.

2. எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய உரல்


(அ) பல குழிகளைக்கொண்டுள்ள நீண்ட உரல்: இது மட்ட நிலையான ஒரு மரக்கட்டையில் தடிப்பான இடங்களில்

ஒன்றுக்கு மேற்பட்ட குழிகளைக் கொண்டுள்ளதாகும்.* இவ்வகை அஸ்ஸாமில் மீசோக் குன்றுகள், யுனைடெட் மிகிர், வடக்குக் கச்சார் குன்றுகள், தார்ராங் மாவட்டங்களிலும், மணிபுரியிலும், காணப்படுகின்றன. இவ்வகையைச் சேர்ந்த உரல் வடக்கு பர்மாவிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. சுமத்ராவில் 'படகப்



படம் 51. பல உரல்களோடு கூடிய நீண்ட மரத்துண்டு (மணிபுரி இராச்சியம்).

பெண்கள்' இவ் வகை உரல்களை நெற்குத்தப் பயன்படுத்துகின்றனர் என்ற செய்தி கிடைத்துள்ளது.*



படம் 52. கனசதுர வடிவமுள்ள கல்லுரல் (ஆந்திரப் பிரதேசத்தில் வாரங்கல் மாவட்டம்).


(ஆ) கனசதுரக் கட்டை: ஆந்திரப் பிரதேசத்தின் வடக்கில் தொடர்ச்சியாகச் சில பகுதிகளில் கல் அல்லது மரக்கட்டைகளாலான கனசதுர வடிவ உரல்கள் காணப்படுகின்றன. இதில் அடங்கும்

* 'இந்தோனேசியா; அன் இன்விட்டேஷன்': டபிள்யூ. வான் ஹூவ் லிமிடெட் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. இக் கம்பெனி பாண்டுங், அண்டு தி ஹேக் ஆகிய இடங்களைச் சேர்ந்தது, (தேதி குறிப்பிடப்படவில்லை), பக்கம் 81.

மாவட்டங்கள் மதுப்நகர், வாரங்கல், நல்கொண்டா, ஐதராபாத், கரீம்நகர், அடிலாபாத், நிஜாமாபாத், மேடக் முதலியவையாகும்.

இராஜஸ்தானத்து சிகார் மாவட்டத்திலும் இவ்வகை உதாரணங்கள் காணப்படுகின்றன.


(இ) நீள் உருளை வடிவம் : ஆந்திராவில் தொடர்ச்சியாகக் கடப்பா, அனந்தப்பூர், கர்நூல், சித்தூர் ஆகிய மாவட்டங்களில் எளிய உருளை வடிவமான உரல்கள் காணப்படுகின்றன. கேரளத்தைச் சேர்ந்த பாலக்காட்டிலும்; பஞ்சாபில் கர்னல், அம்பாலா, பாட்டியாலா, சாங்குரூர், லூதியானா மாவட்டங்களிலும்; ஜம்மு-காஷ்மீரத்தில் பாரமுல்லா, அனந்தநாக், ஸ்ரீநகர் ஆகிய இடங்களிலும் இதே வகை காணப்படுகிறது.




படம் 53. நீள் உருளை வடிவ உரல் (பஞ்சாபில் கர்னல் மாவட்டம்).

(ஈ) மணல் நாழிகைவட்டில் வகை : உரலின் மத்தியில் குறுகிய வளைவு காணப்படுவதுமுண்டு. அமைப்பைக்கொண்டு பல உபபிரிவுகளைக் காணலாம். பொதுவாக எடுத்துக்கொண்டால், இவை ஒரே வகை என்பது புலனாகும். மணல் நாழிகைவட்டில் வகை கிழக்கு உத்தரப் பிரதேசம், சிங்பும், ராஞ்சி, சாந்தல பர்காணுக்கள், வங்காளத்தில் உரல்கள் வழக்கிலுள்ள பகுதிகள், ஒரிஸ்ஸாவில் கொரபட் ஆகிய இடங்களில் சாதாரணமாகக் காணப்படுகிறது. ஆந்திராவில் கனசதுர வடிவ உரல்கள் உள்ள வடமேற்கு மாவட்டங்களைத் தவிர இதர பகுதிகளில் இது முக்கிய வகையாக உள்ளது.

சென்னையிலும், கேரளத்தில் தெற்கு மாவட்டங்களான ஆலப்புழை, எர்ணுகுளம், கொல்லம் ஆகியவற்றிலும் இது சாதாரணமாகக் காணப்படுகிறது. மைசூரில் குடகில்மட்டுமே இது காணப்படுகிறது.



படம் 54. நடுவில் ஒடுக்கத்துடன் கூடிய உரல் (ஆந்திரப் பிரதேசத்தில் கிழக்குக் கோதாவரி மாவட்டம்).




படம் 55. மத்திய பாகத்துக்குக்கீழ் ஒடுக்கத்துடன் கூடிய உரல் (அஸ்ஸாமில் காசி, ஜயிந்தியாக் குன்றுகள் மாவட்டங்கள்).

உரலின் கீழ்ப்பாகத்தில் குறுகிய வளைவைப் பெற்றுள்ள இதன் துணைவகை திரிபுராவின் வடகிழக்கிலும், அஸ்ஸாமில் யுனைடெட் மிகிர், வடக்கு கச்சார் குன்றுகள், காரோக் குன்றுகள், காசி, ஜயிந்தியா குன்றுகள், சோல்பாரா ஆகியவற்றிலும் சாதாரணமாகக் காணப்படுகின்றது. சென்னையில் இது திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்ஆர்க்காடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. இராஜஸ்தானத்தில் இவ்வகை சிகார், ஜுஞ்சுனு, சுரு ஆகிய இடங்களில் காணப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் பாஹ்ராய்ச், பஸ்தி, கோரக்பூர், தியோரியா, பாலியா ஆகியவற்றிலும், பஞ்சாபில் மோஹிந்தர்கார், காங்கிரா, மந்தி[1] ஆகியவற்றிலும் இவ்வகை காணப்படுகிறது.


[1] பாலியிலும் இவ்வகை உரல் குறிப்பிடப்படுகிறது.

விட்டுவிட்டுப் பரவலாகக் காணப்படும் இத் துணைவகை, எவ்வித உற்பத்தித் தொடர்பையும் குறிப்பிடுவதன்று; அமைப்பை யொட்டி, அவை ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றனவேயன்றி வேறன்று.

(உ) கோப்பை வடிவ உரல்: அகலமான கோப்பை வடிவ முள்ள உரல், கேரளத்தில் கோழிக்கோட்டைத் தவிர இதர பகுதி களில் காணப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் டேராடூனிலும்,




படம் 56. அகலமாகத் திறந்துள்ள மர உரல் (உத்தரப் பிரதேசத்தில், டேராடூன் மாவட்டம்).



படம் 57. சுட்ட மண்ணாலான கனமான உரல் (டில்லி).

இமாசலப் பிரதேசத்தில் மாண்டியிலும் இவ்வகை காணப்படுகிறது. கனமான மட்பாண்ட வகையைச் சேர்ந்த இவ்வகை உரல் டில்லியில் காணப்படுகிறது.


கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்கள் தானியங்களின் மேல் தோலைப் போக்குவதற்காக இந்தியா முழுவதிலும் பயன்படும் உலக்கைகளின் வகைகளைக் குறிக்கின்றன.




படம் 1. நீண்ட உருளை வடிவ உலக்கை: இஃது அஸ்ஸாமில் காசி, ஜயிந்தியா குன்றுகளின் மாவட்டங்களில் வழக்கில் உள்ளது. தெற்கு, கிழக்கு இந்தியாவில் பரவலாக உள்ளது.



படம் 2. குறுகலான கைப்பிடியுடைய உலக்கை: இது மத்தியப் பிரதேசத்தில் துர்க் மாவட்டம். மத்தியப் பிரதேசத்தில் ஒரிஸ்ஸா, பஸ்தார், துர்க், சுர்கூஜா மாவட்டங்களில் பரவலாக உள்ளது.



படம் 3. கதைபோன்ற தலைப்பக்கமும், குறுகிய கைப்பிடியமைப்பும் உடைய உலக்கை: மத்தியப் பிரதேசத்தில் கிழக்கு நீமார் மாவட்டம். உத்தரப் பிரதேசத்தில் இமாசலப் பிரதேசம், தேரிகார்வால், டேராடூன் மாவட்டங்களை விடுத்துக் கையினால் குத்தப்படும் உலக்கை-உரல் ஆகியவை பயன்படும் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகவுள்ளது.





Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map.

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.

கலப்பையின் வகைகள்





Rs. No 2979 E'61-2300.

Reproduced from the original supplied by the Director Anthropological Survey of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.

உமி நீக்கும் கருவிகள்



படம் 4. கதைபோன்ற தலைப்பக்கமுள்ள உலக்கை: இராஜஸ்தானத்தில் பான்ஸ்வாரா மாவட்டம்; இது மேற்குக் கூர்ஜரத்திலும், இராஜஸ்தானத்திலும் பரவலாக உள்ளது.



படம் 5. மத்தியில் கைப்பிடியோடுகூடிய உலக்கை: உத்தரப் பிரதேசத்தில் டேராடூன் மாவட்டம்; இஃது உத்தரப் பிரதேசத்தில் இமாசலப் பிரதேசம், தேரிகார்வால், டேராடூன் மாவட்டங்களில் காணப்படுகிறது.

# 6. ஆண்களின் உடை

(பிரஜப் குமார் தாஸ் குப்தா)

## 1. இடுப்பின்கீழ் அணியப்படும் உடை

இந்தியாவில் ஆண்கள் இடுப்பின்கீழ் அணியும் ஆடையைத் தைக்கப்பட்டது, தைக்கப்படாதது என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இடுப்பில் அணியப்படும் தைக்கப்படாத ஆடை, 'தோத்தி' என்று அழைக்கப்படுகின்றது. இஃது ஏழுமுதல் பத்து முழம்வரை நீளமுள்ளது. தைக்கப்பட்ட ஆடைக்கு 'பைஜாமா' என்று பெயர். இது தளர்ந்துள்ள ஒரு ஜோடிக் காலுறைகளாகும்; ஒரு கயிற்றினல் இஃது இடுப்பில் கட்டப்படுகிறது. பயிர்த்தொழில் செய்யும் மக்கள், உயரம் குறைந்ததும், வெவ்வெறு இடங்களில் வெவ்வேறு பெயர்களை உடையதுமான 'தோத்தி' அணிகின்றனர்.

பைஜாமாக்கள் மூன்று வகைப்படும்: (1) தளர்த்தியான வகை; (2) சுரிடார் அல்லது இறுகிய கீழ்ப்பகுதியை உடைய காலுறைகள்; (3) சால்வார், கீழ்பார்டரில் மடிப்புகளை உடைய பைபோன்ற காலுறைகள்.

### தோத்தி அல்லது தைக்கப்படாத துணி

ஏறக்குறைய பழங்காலந்தொட்டே இந்திய மக்கள் பெரிதும் விரும்புவதும், இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் காணப்படுவது மான ஆடை 'தோத்தி'யாகும். இடுப்பில் அணியப்பட்ட துணி அல்லது தோத்தி சாஞ்சி, பார்ஹுத், காந்தாரா ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்களிலும், அஜந்தா ஓவியங்களிலும், வழக்கில் இருந்தனவென்று காண்கிறோம். இவை கிறிஸ்து பிறப்பதற்கு முன் முதல் நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றன.

பலவகையாக 'தோத்தி' யை உடுத்திக்கொள்ளும் முறை இந்தியாவில் வழக்கிலுள்ளது. இவற்றைப் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) கச்சையுடன் கூடியது[1] (ஒரு முனை, தொடைகளின் வழியாகக் கொண்டுசெல்லப்பட்டு, பின்பக்கத்தில் செருகப் படுகிறது).



படம் 58. யெழார் (சால்வார்) போஸ், போர்வை, சடார் பெட் ஆகியவற்றுடன் காணப்படும் காஷ்மீர் முஸ்லிம்.



படம் 59. கால்சராய், பசபந்தி கெடியு ஆகியவற்றை அணிந்துள்ள சௌராஷ்டிரக் கிழவன்.

(2) கச்சையில்லாதது (இடுப்பிலிருந்து முழங்காலின் கீழ்வரை இருக்குமாறு சுற்றப்படும் துணி). இதை 'வேஷ்டி' அல்லது 'வேட்டி'[2] என்று அழைப்பர்; இது சென்னையிலும், கேரளத்திலும் அதிகமாகக் காணப்படுகிறது.

[1] வடமொழியில் உள்ள 'கக்ஷ' என்ற சொல்லிலிருந்து இச் சொல் தோன்றியிருக்க வேண்டும். இதிலிருந்து இந்தோ-ஆரிய மொழிகளில் உள்ள 'கச்சா', 'காசா' என்னும் சொற்கள் பெறப்பட்டன. கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று திராவிட மொழிகளிலும் 'கச்சை' என்ற சொல் வழககிலிருக்கிறது. (ஜி. எஸ். கூர்யே, 'இண்டியன் காஸ்டியூம்' ; பம்பாய், 1951, பக்கம் 203).

[2] 'லுங்கி' என்னும் தமிழ்ச் சொல் 'லௌங்கி' என்னும் உடையோடு தொடர்பு கொண்டதாகும்; வடக்கில் 'லேஹங்கி' அல்லது பெண்கள் அணியும் பாவாடைக்கும் இதற்கும் ஏதேனும் தொடர்பிருக்குமோ? 'லுங்கி' என்னும் சொல் பஞ்சாபிலும் வழக்கிலுள்ளது.

கேரளத்தில் இத் துணி 'முண்டு' என்று வழங்கப்படுகிறது. வங்காளத்தில் இது 'லுங்கி' என்று வழங்கப்படுகிறது.

## கச்சையுடன் கூடிய தோத்தி

கச்சையுடன் கூடிய தோத்தி, இந்தியாவின் பல பாகங்களில் பரவலாகவுள்ளது. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, ஆந்திரா,[1] மைசூர், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத்தின் கிழக்கு-வடக்குப் பகுதிகள், இராஜஸ்தானம் (கங்கா நகர்



படம் 60.
வங்காளி தோத்தி.



படம் 61.
மைசூரில் உள்ள தோத்தி.



படம் 62.
ஒரிஸ்ஸாவில் உள்ள தோத்தி.

[1] ஆந்திரப் பிரதேசத்தில் இவ்வுடையை அணியும் முறை பின்வருமாறு: இடுப்பில் இதைச் சுற்றி, ஓரிடத்தில் செருகி இறுகச் செய்கின்றனர். முன்பக்கமோ பின்பக்கமோ இதில் மடிப்புகள் வைக்கப்படுவதில்லை. இவ்வாறு அணியப்படும் போது மடிப்புகளில்லாத பாவாடையைப்போன்று இவ்வுடை இருக்கிறது. இது லுங்கியைப்போல் உள்ளது. தோத்தியை 'கொடக்கட்டு' முறையில் அணிவது என்று இது வழங்கப்படுகிறது. ஆனால், இங்குள்ள மக்கள் இதனைப் பெரிதும் விரும்புவதில்லை. தமிழ நாட்டில் உயர்ந்த வகுப்பாரிடையே இஃது அதிகமாகக் காணப்படுகிறது. (கூர்யே, 1951, பக்கம் 204).

மாவட்டத்தின் வடக்குப் பகுதியில்மட்டும் 'வேஷ்டி' வழக்கிலிருக்கிறது. இதைத் தவிர இதர பகுதிகள், பஞ்சாபின் தெற்குப் பகுதி, உத்தரப் பிரதேசத்தில் இமயமலைப் பகுதி, சஹாரான்பூர், பிஜ்நூர், மொரதாபாத் ஆகிய அடுத்தடுத்துள்ள மூன்று மாவட்டங்களைத் தவிர இதர பகுதிகள், பீஹார் ஆகிய இடங்களில் இவ்வகை உடை அணியப்படுகிறது. இவ்விராச்சியங்களில் பழங்குடியினர் பகுதிகளில் உடையில் சில வேறுபாடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லீம்கள் பொதுவாக தோத்தியை அணிவதுடன், பைஜாமா, லுங்கி ஆகியவற்றையும் அணிகின்றனர்.

வேஷ்டி

சென்னை,[1] கேரளம்[2] ஆகிய இடங்களில் தைக்கப்படாத இடுப்புத் துணியை 'வேஷ்டி' முறையில் அணிவதைக் காண்கிறோம். இஃது



படம் 63. கேரளத்தில் முண்டு அணிந்துகொண்டிருக்கும் நம்பூதிரிப் பிராமணன்.


[1] சென்னையில் இடுப்புத் துணியை அணியும் முறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் கவனிக்கப்பட வேண்டியதாகும். இங்குத் தமிழ் பிராமணர்கள் திருமணம் முடிந்தபின்னர் கச்சையுடன் கூடிய தோத்தியையே பெரும்பாலும் அணிகின்றனர். தமிழ் பிராமணர் எத்தனை வயது மூத்தவராக இருப்பினும், திருமணமாகாவிடில் அவர் கச்சையுடன் அவ்வுடையை அணியமுடியாது.

[2] வேஷ்டியைப்போல் நம்பூதிரிப் பிராமணர்கள் மடிப்புகள் இல்லாமல் 'முண்டு' அணிகின்றனர். விசேஷச் சடங்குகள் நடைபெறும்போது பிராமணீய

ஒரு சிறிய துண்டுத் துணியாகும். இது கேரளத்தில் 'முண்டு' என்றும், சென்னையில் 'வேஷ்டி' அல்லது 'வேட்டி' என்றும் வழங்கப்படுகிறது. பஞ்சாபில் தெற்கிலுள்ள மூன்று மாவட்டங்களையும், காங்கிராவையும் தவிர இதர பகுதிகளிலும், இராஜஸ்தானத்தில் கங்காநகர் மாவட்டத்தின் வடக்குப் பகுதிகளிலும் வேஷ்டி வழக்கிலிருக்கிறது. ஆனால், பஞ்சாபியில் 'தம்பா' என்று அழைக்கப்படும் இத் துணி, இரண்டு குறுகலான துண்டுகளை இணைத்துத் தைக்கப்பட்டுள்ளது. அஸ்ஸாமில் 'மீஸோ' குன்றுகளிலும், வேஷ்டி கட்டும் முறை காணப்படுகிறது.

லங்கோட்டி

தைக்கப்படாத மற்றொரு துணிவகை உள்ளது. இஃது உயரம் குறைவானது; 'லங்கோட்டி' என்று வழங்கப்படுகிறது. இச் சிறிய துணி மருமத் தானத்தை (perineal part) மட்டிலும் மறைக்கிறது.



படம் 64. சோடா நாகபுரியைச் சேர்ந்த லங்கோட்டி அணிந்துள்ள ஓரான்.

துணியின் ஒரு முனை தொடைகளின் வழியாகச் செலுத்தப்பட்டு, அரைஞாணில் செருகப்படுகிறது. மற்றொரு முனை இடுப்பில் சுற்றப்படுகிறது. இதனால் கால்களின் பின்புறமும் பக்கங்களும் மறைக்கப்படாமலிருக்கின்றன. சில சமயங்களில் லங்கோட்டி என்பது குறுகிய துணியாலானது; இதன் இரு முனைகளும்

முறையில் இருபக்க மடிப்புகளுடன் வேஷ்டியைச் செருகிக்கொள்ளத் தவறுவதில்லை. முதல் முறைக்குத் 'தட்டு' என்று பெயர்; இரண்டாவது முறை 'தட்டுடுக்கல்' என்று வழங்கப்படுகிறது.

முன்னும் பின்னும் அரைஞாணில் செருகப்படுகின்றன. லங்கோட்டி அணியும் முறை சில பழங்குடிகள், நாட்டில் ஏழை வகுப்பினர் ஆகியோரிடையே அதிகமாகக் காணப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் 'கோண்டு'கள் அதிகமாகக் காணப்படும் பஸ்தார், 'பில்'கள், 'பில்லாளர்கள்' அதிகமாகக் காணப்படும் 'ஜபுவா' ஆகிய மாவட்டங்களிலும், மகாராஷ்டிரத்தில் கரையோர மாவட்டங்களான கொலாபா, இரத்தினகிரி, கோல்ஹபூர் ஆகியவற்றிலும், அஸ்ஸாமில் காரோக் குன்றுகளிலும் லங்கோட்டி பொதுவாகக் காணப்படுகிறது.

### தைக்கப்பட்ட காலுறைகள் அல்லது பைஜாமா


வடக்கு, மேற்கு இரு மண்டலங்களில் காலுறைகள் வழக்கத்தில் உள்ளன. இம் மண்டலங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மண்டலத்தில் ஜம்மு-காஷ்மீரம் முதல் வடமேற்கில் இமாசலப் பிரதேசம் உட்பட, உத்தரப் பிரதேசம், பஞ்சாபில் காங்கிரா மாவட்டம் ஆகியவை அடங்கும். உத்தரப் பிரதேசத்தில் அல்மோரா, நைனிடால், பாரி கார்வால், தேரி கார்வால் மாவட்டங்கள், டேராடூனின் வடக்குப் பாகம், சஹரான்பூர், பிஜ்நூர், மொரதாபாத் மாவட்டங்கள் ஆகியவற்றை பைஜாமா மண்டலம் எனலாம். பஞ்சாபில் லூதியானு, பாட்டியாலா, சாங்குரூர் மாவட்டங்களில் பைஜாமாவும், வேஷ்டி அணியும் முறையும் தற்பொழுது காணப்படுகின்றன. இந்த வடக்கு மண்டலத்தில் தளர்ந்த காலுறைகள், சுரிடார் அல்லது ரெப்தார் என்று அழைக்கப்படும் கால்சராய்கள் ஆகியவை அணியப்படுகின்றன. தளர்ந்த சால்வார் ஆடைகள் ஜம்மு - காஷ்மீரத்தைச் சேர்ந்த முஸ்லிம்களிடம் பொதுவாகக் காணப்படுகிறது.

மேற்கு குஜராத்தில் அம்ரேலி, பவநகர், ஜுனுகாத், ஜாம்நகர், இராஜ்காட், கட்ச், சுரேந்திர நகர் ஆகிய மாவட்டங்கள் மேற்கில் பைஜாமா மண்டலமாகும்.[1] இங்கு தளர்த்தியான பைஜாமாக்களும், கால்சராய்களும் காணப்படுகின்றன. மேற்கு வங்காளத்தில் டார்ஜீலிங் மாவட்டத்தில்மட்டுமே நேப்பாளிகள், பூட்டானியர், லெப்சார் மக்களிடையே பைஜாமா மிகவும் விரும்பத்தக்க உடையாக உள்ளது.

[1] சௌராஷ்டிரத்தைச சேர்ந்த மக்களின் ஆடைகள் விநோதமானவையென்றும், கூர்ஜரராஷ்டிரத்தைச் சேர்ந்த மக்களின் ஆடைகளிலிருந்து அவை வேறுபட்டிருக்கின்றனவென்றும் ஹேமசந்திரர் கண்டுபிடித்துள்ளார். அவர்கள் ஓர் அகலமான துணியால் கணுக்கால் மறையும்படி உடை அணிந்திருந்தனர். வெற்றியடைந்த மகாராஜா அல்லது மன்னர்முன் சௌராஷ்டிர ஆண்கள், பெண்களைப்போன்றவர்கள் என்பதைக் காட்ட இவ்வித ஆடை அவர்களிடம் புகுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

## 2. மேலே அணியும் ஆடை

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால். இந்தியாவில் ஆண்களுடைய நாகரிக நடையுடை பாவனையில் நிறைய மாறுபாடு ஏற்பட்டுள்ளது. ஆடைகளிலிருந்து இதை நன்கு உணரலாம். ஆயின், இந்தியாவின் பல பாகங்களில் உள்ள பழங்காலத்திலிருந்து வழக்கிலுள்ள ஆடை முறையைப்பற்றித் தெரிந்துகொள்வது மிகவும் கடினமானதாகும். ஏனெனில், காலுறைகள், ஷர்ட்டு அல்லது கோட்டு முதலிய ஆங்கிலேயரது உடைகள் நகரங்களில்மட்டுமல்லாது கிராமங்களிலும் புகுந்துவிட்டன. ஆங்கிலேய ஷர்ட்டு, இந்தியா முழுவதும் சாதாரணமாகக் காணப்படும் மேலுடையாகும். ஏழைக் குடியானவனுயினும், பணக்கார வியாபாரியாயினும், தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த செருப்புத் தைப்பவனுயினும், உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த பிராமணனுயினும் அனைவரும் இந்த ஆடையை அணிகின்றனர்.




படம் 65. தோத்தி, பனியன் ஆகியவற்றை அணிந்துள்ள மத்தியப் பிரதேசத்துக் குடியானவன்.

இந்தியாவில் சாதாரணக் குடியானவன் பருத்தியாலான ஒரு பனியனையோ (அரைக்கை அல்லது கையில்லாத சிறிய மேல்சட்டை), ஷர்ட்டையோ அணிகிருன். செல்வர்கள் பனியனைச் சில சமயங்களில் உட்சட்டையாக அணிகின்றனர். கேரளத்தில் ஏழை மக்கள் பொதுவாகத் தமது வீடுகளில் இருக்கும்போது மேல்சட்டை எதையும் அணிவதில்லை. வெளியே செல்லும்போது தோர்த்தமுண்டு அல்லது ரண்டான் முண்டு என்று அழைக்கப்பட்ட ஒரு துண்டை இடது தோளில் போட்டுக்கொள்ளுகின்றனர். இங்கு ஈழவர்கள் (ஆண்களும் பெண்களும்) இருபதாம் நூற்றுண்டின் தொடக்கம்வரையிலும் எந்தவிதமான மேல் ஆடையையும் அணியவில்லை. ஆந்திரப் பிரதேசத்தில் தாழ்ந்த வகுப்பினர் ஒரு துண்டை அல்லது கண்டுவாவைத் தோளில் போட்டுக்கொள்கின்றனர். வேறு எங்கேனும் செல்லும்போது அவர்கள் பனியனை அணிகின்றனர். சென்னை முழுவதிலும் ஆங்கிலேய ஷர்ட்டும் பனியனும் சாதாரணமாக மேல்சட்டைகளாகப் பயன்படுத்தப்படு

கின்றன. துண்டு அல்லது அங்கவஸ்திரம் என்று அழைக்கப்படும் துணி தோளோடு எப்பொழுதும் தோழமை பூண்டிருக்கும்.

ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், ஜான்ஸார், பாவார் முதலிய இடங்களில் குளிர்காலத்தில் போஸ், சோலா, பெரான், சோரா முதலிய ஆடைகளை மக்கள் அணிகின்றனர்.



படம் 66. தோத்தி, குர்தா ஆகியவற்றை அணிந்துள்ள உத்தரப் பிரதேசத்துக் கிழவன்.

இந்தியாவின் பனியன், ஷர்ட்டு ஆகியவை பொதுவான மேற்சட்டைகளாக இருப்பினும், சில இடங்களில் ஆசாரமுள்ள குடும்பங்களில் தொன்றுதொட்டு வழக்கிலுள்ள குர்தா, கப்ஜா, மிர்ஜாய் ஆகிய உடைகளை மக்கள் அணிகின்றனர். எனவே, தற்பொழுது காணப்படும் உடைகளிலிருந்து, பழங்காலத்தில் மக்கள் அணிந்திருந்த ஆடைகளைப்பற்றித் தெரிந்துக் கொள்ளவியலாது.


## குர்தா

குர்தா என்பது நீளமானதும் முழுக்கையுடன் தளர்த்தியானதுமான சட்டையாகும். இதற்குக் கழுத்துப்பட்டை இல்லை. பஞ்சாபில் இது மிகவும் விரும்பப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் மேல்வகுப்பினரான பிராமணர், இராஜபுத்திரர் ஆகியோர் குர்தாவை அணிகின்றனர். கிழக்கு இராஜஸ்தானம், மத்தியப் பிரதேசம், குஜராத், பீஹார், மேற்கு வங்காளம், அஸ்ஸாமில் சில பகுதிகள், மணிபுரி, ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் குர்தாவும் அணியப்படுகிறது; ஆனால், பொதுவாகச் செல்வர், உயர்வகுப்பார் ஆகியோரே இதனை அணிகின்றனர். ஆந்திரப் பிரதேசத்தில் ஐதராபாத் மாவட்டத்தில் மட்டும் குர்தா பயன்படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள வருணனைகளிலிருந்து திராவிட இந்தியாவிலும், மகாராஷ்டிரத்திலும் குர்தா பயன்படுத்தப்படவில்லை யென்பது கண்கூடு.

## கப்ஜா

அரைக்கையுடன் முரட்டுத் துணியாலானதும், திறந்த மார்பு பாகம் உள்ளதுமான கப்ஜாவில் ‘V’ கழுத்தும், பட்டன்களும் தைக்கப்பட்டிருக்கும். இது பழங்காலத்தில் இராஜஸ்தானத்தின்

சில பகுதிகள், குஜராத், மகாராஷ்டிரம், மேற்கு மத்தியப் பிரதேசம் ஆகியவற்றில் உபயோகிக்கப்பட்டதென்று தெரியவருகிறது.




படம் 67. தோத்தி, கப்ஜா (உயரம் குறைந்த மேற் சட்டை) ஆகியவற்றை அணிந்துள்ள இராஜஸ்தானத்து வண்ணான்.

மேற்கிந்தியாவில் காணப்பட்ட இவ்வாடை இப்பொழுது அநேகமாக மறைந்துவிட்டது.

**மிர்ஜாய்**

மகாராஷ்டிரம், குஜராத், இராஜஸ்தானம், மத்தியப் பிரதேசத்தின் சில பாகங்கள், உத்தரப் பிரதேசம், பீஹார் ஆகிய இடங்களில் காணப்படும் 'மிர்ஜாய்' சட்டை மற்றொரு பழைய கால உடையாகும். மேற்கு வங்காளம், மைசூர் ஆகியவற்றில் முறையே டார்ஜீலிங், பீடார் மாவட்டங்களில் இவ்வகைச் சட்டை காணப்படுகிறது. மிர்ஜாய் என்பது முழுக்கையுடன் கூடிய இறுக்கமான மேற்சட்டையாகும்; இதற்குக் கழுத்துப் பட்டை இல்லை; இஃது இடுப்புவரையிலும் இருக்கிறது. இடுப்பிலோ மார்பிலோ சட்டையை இணைப்பதற்கான

கயிறுகள் தைக்கப்பட்டுள்ளன. இராஜஸ்தானத்தில் இது கம்ரி அல்லது அங்கார்கி என்று அழைக்கப்படுகிறது. இதைத் தவிர இதர இடங்களில் இஃது அநேகமாக மறைந்துவிட்டது. இராஜஸ்



படம் 68. அரைக்கையுள்ள அங்கார்கியை அணிந்துள்ள இராஜஸ்தானத்து இராஜ புத்திரன்.



படம் 69. கம்ரி, இராஜஸ் தானத்தில் காணப்படும் தனிப்பட்ட மேற்சட்டை.

தானத்தில் பக்தாரி என்று அழைக்கப்படும் இவ்வகையைச் சேர்ந்த உடை 'ரேஜா' என்னும் முரட்டுத் துணியால் தைக்கப்படுகிறது. சாதாரணமாகக் 'கீழ்' வகுப்பினர் இதனை அணிகின்றனர். மகாராஷ்டிரத்தில் மிர்ஜாய் வகை உடைக்கு 'பாராபந்தி' என்று பெயர். தொன்றுதொட்டு இஃது ஆண்களின் உடையாகக் கருதப்படுகிறது. ஆனால், தற்பொழுது சில உயர் வகுப்பினர்மட்டுமே இதனை அணிகின்றனர். 'அங்கிடி' அல்லது 'பசபந்திகெடியூ' என்று வழங்கப்படும் குஜராத்தி வகை விநோதமானது; உடம்பில் மார்புக்குக்கீழ் இறுக்கமாக இருப்பதற்குப் பதிலாக இவ் வுடையில் செங்குத்தான மடிப்புகள் காணப்படுன்றன. உத்தரப் பிரதேசத்தில்

'மிர்ஜாய்' பிராமணர், இராஜபுத்திரர் ஆகியோர் அணியும் உடையென்று கூறப்படுகிறது. பீஹாரில் தற்பொழுது சில வயதான செல்வர்கள்மட்டுமே இதை அணிகின்றனர். மேற்கு வங்காளத்தில் டார்ஜீலிங் மாவட்டத்தில் வயதான நேப்பாள இந்துக்கள் மிர்ஜாயைப்போன்றிருக்கும் 'தௌரா'வை அணிகின்றனர். தௌராவின் மேல் 'பாதுசா' என்னும் இடுப்புப் பட்டை இறுக்கமாகச் சுற்றப்படுகிறது.

மேலே கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை ஆராய்ந்தால், மிர்ஜாய், கப்ஜா, குர்தா ஆகியவை ஏறக்குறைய பழைய காலத்தைச் சேர்ந்தவையென்றும், திராவிடர் வாழ்ந்த தெற்கைத் தவிர இந்தியா முழுதும் அவை பரவியிருந்தனவென்றும் தெரியவருகிறது. இவை பழங்காலத்துக்கு நம்மைக் கொண்டுசெல்கின்றன. தைக்கப்பட்ட உடைகள் தென்னிந்தியாவில் உபயோகப்படுத்தப்படவில்லை யென்பது அவ்விடத்தில் சடங்குகளிலும் உற்சவத்திலும் அணியப்படும் ஆடைகளை ஆராயும்போது தெரியவருகிறது. இவ்விரு சமயங்களிலும் தைக்கப்பட்ட உடைகளை ஒதுக்குவது இங்கு வழக்கமாக இருக்கிறது. திருவனந்தபுரத்தில் பத்மநாபசுவாமி ஆலயம்போன்ற ஓர் ஆலயத்தில் நுழைய விரும்பும் யாத்திரிகர் தைக்கப்பட்ட ஆடைகள், மேற்சட்டைகள் ஆகியவற்றைக் கழற்றியபின்னரே நுழையவேண்டும் என்பதிலிருந்து இவ் வழக்கம் தெளிவாகத் தெரிகிறது. மைசூர் சிருங்கேரியில் சரஸ்வதி கோயில் வைதிகச் சடங்குகளில் பங்கு கொள்ளும்போதும் இவ் வழக்கத்தைக் காணலாம்.

மேற்கு வங்காளத்திலும் திருமணம் அல்லது திவசம் ஆகிய சடங்குகள் நடைபெறும்போது தைக்கப்பட்ட ஆடைகள் அணியப்படாதது இங்குக் குறிப்பிடவேண்டியதாகும். உத்தரப் பிரதேசத்தில் சிறப்பாக மேல்வகுப்பினரிடையே உணவு உட்கொள்ளும்போது தைக்கப்பட்ட ஆடைகளை அணியாமலிருக்கும் வழக்கம் இருக்கிறது. கிழக்கு நேப்பாளத்தைச்[1] சேர்ந்த 'தஹால்' பிராமணர்களிடையேயும் இவ்வகையான வழக்கம் காணப்படுகிறது.

## 3. தலையணி

தலைப்பாகை, குல்லாய் ஆகிய இரண்டு வகையான தலையணிகள் இந்தியாவில் அணியப்பட்டுவருகின்றன. இவற்றில் சிற்சில இடங்களில்மட்டுமே காணப்படும் குல்லாய், சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். சடங்குகள் நடைபெறும்

[1] என்.கெ. போஸ், 'கல்ச்சர் ஜோன்ஸ் ஆஃப் இண்டியா', ஜியாக்ரஃபிகல் ரிவ்யூ ஆஃப் இண்டியா, வால்யூம் 18, நெம்பர் 4, டிசம்பர், 1956, பக்கம் 9.

போது இது பயன்படுத்தப்படுதலில்லை. தலைப்பாகை வெவ்வேறு வகைத் துணியால் செய்யப்படுகிறது. இதன் நீளம், நிறம் ஆகியவை மாறுபடுகின்றன. இவை ஒரு மனிதனின் சாதி அல்லது வகுப்பைப் பொறுத்திருக்கும். தலைப்பாகையைக் கட்டும் முறையும் இடத்துக்கிடம் வேறுபடுகிறது. இராஜஸ்தானம், அல்லது குஜராத்தில் வசிக்கும் ஒருவனை, அவன் அணிந்துள்ள தலைப்பாகையிலிருந்தே அறிந்துகொள்ளலாம். இந்தியாவில் பழங்காலந்தொட்டே தலைப்பாகை இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. கி.மு. இரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த 'பர்ஹூத்' சிற்பங்களில் பெரிய அளவுள்ள தலைப்பாகைகள் பயன்படுத்தப்பட்டிருத்தலைக் காண்கிறோம்.

## மேற்கு, மத்திய இந்தியா: தலைப்பாகையைப் பெரும்பாலும் பயன்படுத்தும் மண்டலங்கள்

மேற்கு இந்தியா, மத்திய இந்தியா ஆகியவை தலைப்பாகையைப் பெரும்பாலும் பயன்படுத்தும் மண்டலங்களாகும். பஞ்சாப், இராஜஸ்தானம், மேற்கு குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரத்தின் கிழக்குப் பகுதியும் தெற்குப் பகுதியும், மைசூர் ஆகிய இடங்களில் மக்கள் தலைப்பாகையைத் தலையணியாகப் பெரிதும் விரும்புகின்றனர். இது சாதாரண காலங்களிலும், சடங்குகளின் போதும் அணியப்படுகிறது. பஞ்சாபில் இதற்கு வெவ்வேறு பெயர்கள் வழங்கப்படுகிறன. அவை முண்டாசு, சாஃபா (safa), பயிந்தா, பாக், கந்துவா, பக்ரி முதலியவையாகும். இராஜஸ்தானத்தில் தலைப்பாகை பலவிதங்களில் கட்டப்படுகிறது; உதாரணமாக, பேரி காபெந்தா, சாதாபெந்தா, பக்கார் முதலியவை. இவை சாதி, வகுப்பு ஆகியவற்றைச் சார்ந்துள்ளன. அங்கு சீக்கியரின் ஆலயத்தில் தலைப்பாகையின்றி எவரும் உட்புகமுடியாது.

## வட இந்தியா: தலைப்பாகையும் குல்லாயும் காணப்படும் மண்டலம்

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இமாசலப் பிரதேசம், காஷ்மீரம் ஆகிய இரண்டு இடங்களிலும் வெவ்வேறு வகையான தலைப்பாகைகளும் குல்லாய்களும் பயன்படுத்தப்படுகின்றன. இங்குச் சடங்குகளின் போது தலைப்பாகை அணியப்படுகிறது. சிறப்பாகத் திருமணத்தின் போது, மணமகன் தலைப்பாகையைக் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். உத்தரப் பிரதேசத்தில் தொன்றுதொட்டுத் தலைப்பாகை தலையணியாக விளங்கிவருகிறது. மணமகன் அணியும் ஆடைகளில் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறத் தலைப்பாகை முக்கிய இடத்தைப் பெறுகிறது. குல்லாய் ஒரு புதிய கண்டுபிடிப்பாகும். காந்திக் குல்லாய் பொதுவாக மக்கள் விரும்புவதாக உள்ளது. இமாசலப்


பிரதேசத்தில் பருத்தியினால் நெய்யப்பட்ட காந்திக் குல்லாயும், கம்பளியினாலான வட்டமான கூம்புபோன்ற முனையுடைய குல்லாயும் காணப்படுகின்றன. கம்பளிக் குல்லாய் 'பந்தர் தொப்பி' என்று வழங்கப்படுகிறது. ஜம்முவிலும், காஷ்மீரிலும் 'சாஃபா' அல்லது 'பக்ரி' என்று அழைக்கப்படும் தலைப்பாகை வெவ்வேறு வகைகளில் கட்டப்படுகிறது. இது பொதுவாகக் காணப்படும் தலையணியாகும். பருத்திக் குல்லாய், துப், வட்டமான கூம்பு முனையுடைய கம்பளிக் குல்லாய்கள், காந்துப் ஆகியவையும் அணியப்படுகின்றன.

### கிழக்கிந்தியா

ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம், பீஹார் ஆகியவற்றைக் கொண்ட கிழக்கிந்தியாவில் தலையணி சாதாரணமாகப் பயன் படுத்தப்படுவதில்லை. இப் பகுதியில் குடியானவர்கள் சாதாரணமாக வயல்களில் வேலைசெய்யும்போது ஒரு துண்டைத் தலையில் தளர்த்திக் கட்டிக்கொள்கின்றனர். ஒரிஸ்ஸாவில் திருமணத்தின்போது, மணமகன் ஒரு தலைப்பாகையை அல்லது பக்ரியை அணிந்து கொள்கிறான். மேற்கு வங்காளத்தில் டார்ஜீலிங்கைத் தவிர இதர பகுதிகளில் எந்தவிதமான தலையணியும் காணப்படுவதில்லை. டார்ஜீலிங்கில் வசிக்கும் நேப்பாளிகள், பூட்டானியர், லெப்சாக்கள் ஆகிய மக்களிடையே பருத்தி, கம்பளிக் குல்லாய்களும் தொப்பிகளும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இராச்சியத்திலுள்ள முஸ்லிம்கள் 'நமாஸ்' அல்லது இறைவணக்கம் செய்யும்பொழுது மட்டும் தாஜ், தொப்பி அல்லது பெஜ் குல்லாய்களை அணி கின்றனர். அஸ்ஸாமில் சாதாரணமாக எந்தத் தலையணியும் அணியப்படுவதில்லை. ஆனால், இங்குச் சில இடங்களில் முற்காலத் தில் தலைப்பாகை அணிவது வழக்கமாக இருந்ததென்றும், இப் பொழுதும் சில பழங்குடியினரிடையே அது வழக்கிலிருக்கிறதென்றும் தெரியவருகிறது. மணிபுரியில் சடங்குகளின்போதும், மத சம்பந்த மான கூட்டங்களின்போதும் வயதான மக்கள் ஒரு வெள்ளைத் தலைப் பாகையை அணிகின்றனர். பீஹாரின் வடமேற்குப் பகுதியிலும், அதனையடுத்து உத்தரப் பிரதேசத்திலுள்ள மாவட்டங்களிலும் தலைப்பாகை அல்லது 'முரேத்தா' சாதாரணமாக அணியப்படுகிறது. பீஹாரின் வடகிழக்கில் மைதிலி பிராமணர்களைத் தவிர இதர வகுப்பாரிடையே தலையணி பொதுவாகக் காணப்படுவதில்லை. இவ் வகுப்பினர் 'பாக்' அல்லது வட்டமான பருத்திக் குல்லாயை அணிகின்றனர்.

### தென்னிந்தியா

தெற்காகக் கேரளம், சென்னை, ஆந்திரப் பிரதேசம் ஆகிய வற்றை அடைந்தால், ஆண்களின் மேல் உடுப்புகளில் ஒரு முக்கிய




Reg No 2979 E 61 2500

© GOVERNMENT OF INDIA COPYRIGHT 1961

Reproduced from the original supplied by the Director Anthropological Survey of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

ஆண்களின் உடை — இடுப்புக்குக் கீழ் அணியப்படும் உடைகள்

வேறுபாட்டைக் காண்கிறோம். இவர்கள் தலைப்பாகையோ அல்லது வேறு எந்தவிதமான தலையணியோ அணிவதில்லை. கேரளத்தில் மாப்பிள்ளை-முஸ்லிம்கள்மட்டும் பட்டினல் பூவேலை செய்யப்பட்ட அழகிய குல்லாயை அணிகின்றனர். பாலக்காட்டு மாவட்டத்தில் காணப்படும் யூதர்கள் தொப்பி அல்லது தலைப்பாகையை அணிகின்றனர். எர்ணுகுளத்தில் முற்காலத்தில் அரச குடும்பத்தினரிடையே மொகலாயரது பாணியில் தலைப்பாகை அணியும் வழக்கம் இருந்தது. சென்னையில் நீலகிரியில்மட்டும், சில வகுப்பினர் வெள்ளைத் தலைப்பாகையை அணிகின்றனர். மதுரை மாவட்டத்தில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'கோட்டுருமா' எனப்பட்ட சிவப்புத் தலைப்பாகை அணியும் வழக்கம் இருந்தது. ஆந்திரப் பிரதேசத்து மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் பிராமணர், கோமதியர்போன்ற உயர்சாதியினரும், 'மாலா' முதலிய தாழ்சாதியினரும் எந்தவிதமான தலையணியையும் அணிவதில்லை; செட்டிபல்கி என்று அழைக்கப்படும் மத்திய வகுப்பார்மட்டுமே 'தலைப்பாகை' அணிகின்றனர். அனந்தபூரிலும், கர்நூலிலும் லிங்காயத்து வகுப்பினர்மட்டும் தலைப்பாகை அணிகின்றனர். அடிலாபாத், நிஜாம்பாத், மேடக் மாவட்டங்களில் பாகா, செல்லா அல்லது பல்கா என்று வழங்கப்படும் தலைப்பாகை அணியப்படுகிறது. தெற்கில் தொழிலாளர்கள் வேலை செய்யும் போது, வெயிலிலிருந்து தமது தலையைக் காத்துக்கொள்வதற்காக ஒரு துண்டுத் துணியை அல்லது துவாலையைத் தலையில் சுற்றிக் கொள்கின்றனர்.

# 7. பெண்களின் உடை

(வி. ஆர். இராஜலட்சுமி)

இந்தியக் கிராமங்களில் பெண்கள் அணியும் உடையைக் கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம் :

- தைக்கப் பட்டவை
  - (அ) பைஜாமா அல்லது சால்வார்
  - (ஆ) காக்ரா அல்லது லாஹெங்கா, காஞ்சிலி அல்லது பிளோஸ், ஆர்ச்ஞ
- தைக்கப் படாதவை
  - (இ) ஒரே துணி (புடவை)
  - (ஈ) ஒரு துண்டுக்கு மேற்பட்டவை
- தைக்கப் பட்டவையும் தைக்கப் படாதவையும்

இவ்வைந்து முக்கியப் பிரிவுகளைத் தவிர சில பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆடை வகைகள் ஒரே சமயத்தில் இருக்கக் காண்கிறோம்.

## தைக்கப்பட்ட ஆடைகள்

### பைஜாமா மண்டலம்

பைஜாமா அல்லது சால்வார், கமீஸ் அல்லது குர்தா, துப்பட்டா ஆகியவை காஷ்மீரம்-ஜம்மு இராச்சியத்திலும், இமாசலப் பிரதேசத்திலும், தெற்கிலுள்ள குறுகிய பிரதேசத்தைத் தவிர்த்து பஞ்சாபின் இதர பகுதிகளிலும் அணியப்படுகின்றன.

(அ) பைஜாமா அல்லது சால்வார் அல்லது சுதான் : இது தைக்கப்பட்ட தளர்ந்த காலுறைகளாலானது. இஃது இடுப்பில் ஒரு

கயிற்றால் கட்டப்படுகிறது; கணுக்கால்வரையில் செல்லுகிறது. கணுக்கால்களை இறுகப் பிடிக்கும் சுதான் என்னும் உடுப்பு



படம் 70. ஃபெரானையும் (இடப்பக்கம்), பைஜாமா, கமீஸ் ஆகியவற்றையும் (வலப்பக்கம்) அணிந்துள்ள காஷ்மீரப் பெண்கள்.

இப்பொழுது வழக்கில் இல்லை. வயதான ஆசாரசீலரான பெண்டிர் மட்டுமே இதை அணிகின்றனர்.

(ஆ) கமீஸ் அல்லது குர்தா: இது முழங்கால்வரையிலும் நீண்டிருக்கும் முழுக்கைச் சட்டையாகும். காஷ்மீரத்தில் நீளமானதும் தளர்ந்ததுமான ஒரு மேல் சட்டையை இந்து பெண்கள் அணிகின்றனர். இஃது உடலின் மேற்பகுதியை மறைப்பதுடன், கணுக்கால்வரையிலும் தொங்குகிறது; இது 'ஃபெரான்' (feran) என்று அழைக்கப்படுகிறது. ஃபெரானை அணிந்திருக்கும்போது சால்வார் அல்லது பைஜாமா அல்லது சுதான் என்னும் உடையைப் பெண்டிர் அணிவதில்லை.

(இ) கால்புஷ்: இது நல்ல சிவப்பு நிறமுடைய குல்லாயாகும்.

ஜாஜ் : பருத்தியாலான இத் துணி கால்புஷின்மேல் அணியப்பட்டுப் பின்னல்களை மறைக்கிறது.

தரங்கா : இது வெள்ளைத் துணியாலானது அல்லது முகத்தை மறைக்க உதவும் துணியாலானது. கால்புஷின் மடிப்புக்குள் இது செருகப்பட்டுத் தலையைச் சுற்றி அணியப்படுகிறது.

பூச் : இது கால்புஷ், ஜாஜ் ஆகியவற்றுக்குமேல் தலையில் அணியப்பட்டுப் பின்புறம் பாதி சுருட்டப்பட்ட இரண்டு வால்களோடு தொங்கு கிறது. மல்மல் துணியால் இது செய்யப் படுகிறது.

துப்பட்டா : துப்பட்டாவால் தலை மறைக்கப்படுகிறது (தைக்கப் படாத முகத்திரை). இது முகத்தின்கீழ்க் கட்டப் பட்டு, மடிப்பில் உள்ள அழகிய தரங்கா வேலைப் பாட்டின் ஒரு பகுதிமட்டும் தெரியும்படி அணியப் படுகிறது. பாதி சுருட்டப்பட்ட 'பூச்'சின் வால்கள் பின்புறம் தொங்குகின்றன.

மேலே கூறப்பட்டுள்ள இவ்வகைத் தலையணி காஷ்மீரத்தில் மட்டுமே அணியப்படுகிறது. இம் மண்டலத்தின் இதர பகுதிகளில் குல்லாய் அல்லது துப்பட்டா பயன்படுத்தப்படுகிறது.

தற்காலத்தில் சில பிராமணப் பெண்களும், இராஜபுத்திரப் பெண்களும் புடவை, மேல்சட்டை ஆகியவற்றை அணிகின்றனர். இவர்கள் துப்பட்டாவை அணிவதில்லை; புடவையின் ஒரு தலைப்பைத் தலையில் போர்த்துக்கொள்கின்றனர். புடவையின் தலைப்பு முகத் திரையாகவோ, 'பல்லாவ்' ஆகவோ பயன்படுகிறது.

### பாவாடை அல்லது காக்ரா அணியப்படும் மண்டலம்

இந்த மண்டலத்தில் இராஜஸ்தானம், கட்ச், குஜராத், மத்தியப் பிரதேசத்தின் வடகிழக்குப் பகுதி, உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகள் ஆகியவை அடங்கும். இங்கு அணியப்படும் ஆடைகள் கீழ்வருமாறு :

(அ) 'காக்ரா' அல்லது 'லாஹெங்கா': இது 6 கஜம் முதல் 20 கஜம்வரை நீளமுள்ள துணியாலான அகலமான பாவாடை யாகும். இஃது இடுப்பில் கட்டப்படுகிறது.

'காக்ரா' இரண்டு வகையில் தைக்கப்படுகிறது.

(1) துணியின் ஒரு பக்கத்தில் (பார்டர் இல்லாத பக்கம்) சுருக்கங்கள் செய்யப்படுகின்றன. செங்குத்தாகத் திறந்திருக்கும் பக்கங்கள் இரண்டும் இணைத்துத் தைக்கப்படுகின்றன. ஆனால், குஜராத்தில் தாழ்ந்த வகுப்புகளைச் சேர்ந்த மணமான பெண்கள்



படம் 71. குஜராத்தில் சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த பெண் காக்ரா, பிளௌஸ், லுக்ரா ஆகியவற்றை அணிந்துள்ளாள்.



படம் 72. 'பில்' பெண் (முன்னால் செருகப்பட்ட) லாஹெங்கா, கப்ஜா, ஊர்னி ஆகியவற்றை அணிந்துள்ளாள்.



படம் 73. பரம்பரை உடை அணிந்துள்ள பஞ்சாரா பெண்.

ஓரங்கள் இணைக்கப்படாத பாவாடையை அணிகின்றனர். இது 'ஜிமி' என்று வழங்கப்படுகிறது.

(2) பூப்போடாத அல்லது 'பிரின்டு' செய்யப்பட்ட துணியால் இது தைக்கப்படுகிறது. முக்கோண வடிவமான துண்டுகள் இணைக்கப்பட்டு இது தைக்கப்படுகிறது. இம் முக்கோண வடிவத்

துணிக்கு 'காலி' என்று பெயர். தைக்கப்பட்ட பாவாடையின் கீழ் ஓரத்தில் குறுகலான அல்லது அகலமான பார்டர் இணைக்கப் படுகிறது. இஃது இராஜஸ்தானத்தில் பெரிதும் விரும்பப்படுகிறது. 'காலி'களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படவில்லை.



படம் 74. காக்ரா, ஊர்னி, காஞ்சிலி ஆகிய வற்றை அணிந்துள்ள இராஜஸ்தானத்துப் பெண்.

சில பகுதிகளில் மேல்வகுப்பு, கீழ்வகுப்புகளைச் சேர்ந்த பெண்கள் தங்கள் பாவாடைகளுக்குத் தனித்தனி நிறங்களைப் பயன் படுத்துகின்றனர்.

(ஆ) காஞ்சிலி : இஃது உள்நாட்டில் காணப்படும் பிரேசியர் போன்ற மேல்சட்டையாகும். மணமான பெண்களே இதை அணி கின்றனர். இச் சட்டைக்குப் பின்பக்கம் இல்லை. இது உடலோடு இணைப்பதற்காகக் கழுத்துக்குப் பின்னும் இடுப்பிலும் இரு ஜோடிக் கயிறுகளால் கட்டப்படுகிறது. இக் கயிறுகள் சட்டையின் முனைக்கு ஒன்றாக, நான்கு முனைகளிலும் கட்டப்படுகின்றன. இச் சட்டை உயரம் மிகவும் குறைந்தது. மார்புக்குக் கீழ் இஃது இருப்பதில்லை.

இதைத் தைக்கும்போது பல வர்ணங்களுள்ள முக்கோண வடிவத் துண்டுத் துணிகள் பயன்படுத்தப்படுகின்றன.[1]

(இ) குர்தி : விசேஷ காலங்களிலும், கிராமத்திலிருந்து வெளியே செல்லும்போதும் 'காஞ்சிலி'யின்மீது ஒரு மேல்சட்டை அணியப்படுகிறது. இதன் கழுத்துத் தாழ்வாக வெட்டப்பட்டிருக்கும்.

(ஈ) கப்ஜா : இது நீளமான கைகளையுடைய சட்டை அல்லது அரைக்கைச் சட்டையாகும். மணமாகாத பெண்கள் இதை அணிகின்றனர்.

(உ) ஆர்ற அல்லது ஓட்க்னா : இது முகத்திரையாகும். இதன் நீளம் $2\frac{1}{2}$ கஜம் முதல் 4 கஜம்வரையில் இருக்கிறது. இதன் ஒரு தலைப்பு முன்பக்கத்தில் காக்ராவில் செருகப்படுகிறது; மற்றொரு தலைப்பு முதுகுப் புறமாகக்கொண்டு தலையின்மீது இழுத்துவிடப்படுகிறது. பின்னர் இது பின்னால் தொங்கும் அல்லது முன்னால் தொங்கும் ; இது முகத்தை மறைப்பதுமுண்டு.

தைக்கப்பட்ட துணி பயன்படும் இடங்களுக்கும், தைக்கப்படாத துணி பயன்படும் இடங்களுக்குமிடையேயுள்ள எல்லைகளுக்கருகில் உள்ள ஒரு குறுகலான பிரதேசத்தில் புடவை, காக்ரா ஆகிய இரண்டு ஆடைகளும் நல்ல விகிதத்தில் பயன்படுத்தப்படுகின்றன. வடக்கு உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இவ்விணைப்பு மண்டலத்தில் இதர மூன்று முக்கிய மண்டலங்களும் ஒன்றையொன்று சந்திக்கின்றன. இங்கு ஒரே பிரதேசத்தில், தேசப் படத்தில் காட்டப்பட்டிருப்பது போல், பலவகை ஆடைகள் அணியப்படுகின்றன.

புடவையும், தைக்கப்பட்ட உடுப்புகளும் ஒருங்கே காணப்படும் எல்லா மாவட்டங்களிலும் பிராமண வகுப்பைச் சேர்ந்த பெண்களும், அதற்கடுத்த ஒன்றிரண்டு வகுப்புகளைச் சேர்ந்த பெண்களும் புடவை அணிவதையும், தாழ்ந்த வகுப்புகளைச் சேர்ந்த பெண்கள் லாஹெங்கா அல்லது காக்ரா முதலியவற்றை அணிவதையும் காணலாம்.

பீஹாரிலிருந்து வந்துள்ள எனது நண்பரொருவர் மைதிலிப் பிராமணப் பெண்கள் வயதுவருமுன் புடவையை அணிகின்றனர் என்று கூறுகின்றார். ஆனால், திருமணத்தின்போது மணப்பெண் எத்தனை வயதுடையவளாயினும் (11 முதல் 20 வயதுவரை) ஒரு காக்ராவையும் அணிகிறாள். குஜராத்தில் காக்ரா மண்டலத்தில்,

[1] தற்காலத்தில் பயன்படுத்தப்படும் 'பிரேசியர்' இதிலிருந்து தோன்றியிருக்கலாம்.

புடவை அணியப்படும் பகுதிகளில் மணப்பெண்ணின் கலியாண உடுப்பில் காக்ரா ஓர் ஆடையாகக் கருதப்படுகிறது.

வடக்கு உத்தரப் பிரதேசத்தில் புதுவான், பிலிபித், ராம்பூர், ஆக்ரா மாவட்டங்களில் இந்துப் பெண்கள் புடவை, பிளவுஸ்,



படம் 75. புடவை அல்லது கமீஸ், துப்பட்டா ஆகியவற்றை அணிந்துள்ள வடமேற்கு உத்தரப் பிரதேசத்துப் பெண்கள்.

காக்ரா முதலியவற்றையும், முஸ்லிம் பெண்கள் பைஜாமா அல்லது கால்வார் முதலியவற்றையும் அணிகின்றனர்.

உத்தரப் பிரதேசத்தின் வடகோடியில் அல்மோரா, டேராடூன், கார்வால் மாவட்டங்களைச் சேர்ந்த காக்ரா அணியும் பெண்கள், காக்ராவுக்குமேல் இடுப்பில் ஒரு நீளமான தைக்கப்படாத துணியை இரண்டு அல்லது மூன்று சுற்றுகளாகச் சுற்றிக்கொள்கின்றனர். இத் துணியின் ஒரு தலைப்பு மார்பகங்களின் குறுக்காக அணியப்பட்டுத் தோளில் தொங்கவிடப்படுகிறது. சில சமயங்களில் இத் தலைப்பு தலைக்குமேல் போடப்பட்டு, முகத்திரையாகப் பயன்படுகிறது. டார்ஜீலிங் மாவட்டத்தைச் சேர்ந்த நேப்பாளிப் பெண்களும் பூட்டானியப் பெண்களும் இவ்வகை இடுப்புப் பட்டையை அணிகின்றனர்.

உத்தரப் பிரதேசத்துப் பல மாவட்டங்களில் குளிர்காலத்தில் தற்கால நாகரிகப் பெண்கள் சால்வையை அணிவதுபோல்

புடவையை அணியும் பெண்கள், ' சடார் ' என்று வழங்கப்படும் மற்றொரு தைக்கப்படாத துணியையும் அணிகின்றனர்.

**தைக்கப்படாத ஆடைகள்**

பிரதேசவாரியாகத் தைக்கப்படாத ஒரே துணியை அணிந்து கொள்ளும் உடை வகை இந்தியாவில் மிகவும் அதிகமான பகுதிகளில் காணப்படுகிறது. இம் மண்டலத்தில் மகாராஷ்டிரம், மைசூர், சென்னை, ஆந்திரா, ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், பீஹார் இராச்சியங்கள்; மத்தியப் பிரதேசத்தின் பெரும்பகுதி, குஜராத், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றின் சில பகுதிகள் முதலிய இடங்கள் அடங்கும்.

இப் பெரிய மண்டலத்தைச் சேர்ந்த பெண்கள் உடலின் மேல் கீழ் பாகங்களை மறைக்கத் தைக்கப்படாத ஒரே துணியைப் பயன்




படம் 76. மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு கிராமப் பெண்.



படம் 77. ஒரிஸ்ஸாப் பெண்.

படுத்தியபோதிலும், அதனை அணியும் விதத்திலும், அதன் நீளத்திலும் பல வேறுபாடுகள் இருக்கக் காண்கிறோம். சாதாரணமாகத் தைக்கப்படாத இத் துணியின் நீளம் ஐந்துமுதல் பத்துக்

கஜம்வரையிலும் இருக்கிறது. அகலம் சுமார் 45 அங்குலங்கள் இருக்கும்.



படம் 78. இறைவணக்கத்திலீடுபட்டிருக்கும் ஒரிஸ்ஸாப் பெண்.



படம் 79. சென்னையிலுள்ள பெண்.

கீழ்க்கண்டவை இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் புடவை அணியும் முறைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

(1) கச்சை அணிதல்

(2) புடவை அல்லது ஊர்ணுவின் தலைப்பு முன்பக்கம் அல்லது பின்பக்கம் தொங்கவிடப்படுதல்; அல்லது பின்பக்கத்தில் வலத்தோள் அல்லது இடத்தோளில் அணியப்படுவது.

(3) ஊர்ணு அல்லது துப்பட்டா முதலியவை தலையின் மேல் போர்த்தப்படுதல்.

### கச்சை அணிந்துகொள்ளும் முறைகள்

இடுப்பில் அணியப்பட்டு, கால்களின் இடுக்கு வழியாகக் கொண்டுசெல்லப்பட்டு, சாதாரணமாகப் பின்பக்கம் நீண்ட துணி

யின் ஒரு பகுதி செருகப்படும். இது கச்சை என்று வழங்கப்படுகிறது. இந்த முறையில் தைக்கப்படாத ஆடை தைக்கப்பட்ட காலுறைகளைப் போலிருக்கிறது; புரண்டுகொண்டிருக்கும் பாவாடை முதலியவற்றைப்போல் இது இல்லை.



படம் 80. ஆந்திரா, மைசூர் எல்லைப் புறத்திலுள்ள பெண்டிர்.



படம் 81. பரம்பரை உடையணிந்துள்ள குடகுப்பெண்.

தேசப்படத்திருந்து ' கச்சை ' தென்னிந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் காணப்படும் ஒரு வகையாகும் என்பது கண்கூடு. புடவையில் கச்சை கட்டிக்கொள்ளும் வழக்கமுடைய இம்மண்டலத்தை நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கலாம்.

(அ) மகாராஷ்டிரமும், மத்தியப் பிரதேசத்தில் சிந்த்வாரா, சியோனி, மாண்ட்லா, ஜபல்பூர், தாமோ, சாகர் மாவட்டங்களும் சேர்ந்து ஒரு பிரதேசமாகும். இங்கு சாதி, வகுப்பு வேறுபாடுகளின்றி எல்லாப் பெண்களும் புடவையில் கச்சை வைத்து அணிந்து கொள்கின்றனர்.

(ஆ) இரண்டாவது துணைப்பிரதேசம் முதல் துணைப்பிரதேசத்தின் வடகிழக்கில் உள்ளது. இதில் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சில மாவட்டங்களும் (துர்க், ராய்பூர், பிலாஸ்பூர், ராய்கர், ஷாஹதோல், சுர்குஜா, சிதி, ரீவா, சாத்னு, பன்னு, சத்தர்பூர், திகம்கர், பீடுல், கிழக்கு நிமார், இந்தோர் ஆகியவை), உத்தரப் பிரதேசத்தில் அலகாபாத், பதேபூர், ஜான்சி மாவட்டங்களின் தெற்குப் பகுதியும் அடங்கும். அலகாபாத், பதேபூர் மாவட்டங்களில் உள்ள செம்படவப் பெண்கள் கச்சை அணிகின்றனர். மேலே கூறப்பட்டுள்ள மத்தியப் பிரதேசத்திலுள்ள மாவட்டங்களில் 'தாழ்ந்த' வகுப்பைச் சேர்ந்த எல்லாப் பெண்களும் கச்சையுடனே புடவை அணிகின்றனர்.




படம் 82. மகாராஷ்டிரக் கச்சையின் முன்புறத் தோற்றமும் பின்புறத் தோற்றமும்.

(இ) மூன்றாவது துணைப்பிரதேசத்தில் தென்னிந்தியாவில் சென்னை, குடகைத் தவிர்த்து மைசூர், அடிலாபாத், கரிம்நகர் மாவட்டங்களைத் தவிர்த்து ஆந்திரப் பிரதேசம் ஆகிய இராச்

சியங்கள் அடங்கும். இப் பிரதேசத்தில் திருமணமான பெண்கள், புடவையை அணிந்துகொள்ளும்போது கச்சை அணிந்துகொள் கின்றனர்.

(ஈ) கடைசித் துணைப்பிரதேசத்தில் கேரள இராச்சியம் அடங்கும். இங்கு உயர்வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கச்சை அணிந்து கொள்கின்றனர்.



படம் 83. ஆந்திரக் கச்சையின் முன்புறத் தோற்றமும் பின்புறத் தோற்றமும்.

முதல் இரண்டு துணைப்பிரதேசங்களிலும் பொதுவாக ஒரே வகையான கச்சை அணியப்படுகிறது. இங்குக் கச்சையானது கால்களின் இடுக்கு வழியாகக் கட்டப்பட்டுப் பின்பக்கத்தில் செருகப் படுகிறது. இது வெளியில் தெரியும்படி கட்டப்படுகிறது ; மேலும், இது நீளமுள்ளதாகக் கட்டப்படுவதால், இறுக்கமாக இருப்ப

தில்லே. பம்பாய்க் கரையில் வசிக்கும் தாகூர் செம்படவப் பெண்கள் வேறுவிதமான கச்சையை அணிகின்றனர். இங்குக் கச்சை இறுக்கமாகக் கட்டப்படுகிறது; அதனுல் புடவையும் சிறிது உயரமாகக் கட்டிக்கொள்ளப்படுகிறது. தமிழ் அல்லது ஆந்திரப் பிராமணரைப்போலல்லாது இங்கும் கச்சை வெளியே தெரியும்படி கட்டப்படுகிறது.

மூன்ருவது பிரதேசத்தில் அடங்கும் மைசூர், சென்னை, ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் திருமணமான பிராமணப் பெண்டிரிடம் மட்டுமே கச்சை கட்டிக்கொள்ளும் வழக்கம் இருக்கிறது.



படம் 84. அய்யங்கார் கச்சையின் முன்புறத் தோற்றமும் பின்புறத் தோற்றமும்.

(1) மைசூர் : மேலே கூறப்பட்டுள்ள வகைக் கச்சையை இப் பிரதேசத்தைச் சேர்ந்த மணமான பிராமணப் பெண்கள் அணிந்து

கொள்கின்றனர்; குடகுப் பெண்கள் கச்சை அணியும் முறையை இன்னும் கடைப்பிடிக்கவில்லை.

(2) ஆந்திரா: திருமணத்திற்குப் பின்னர் ஆந்திரப் பிராமணப் பெண்கள் கச்சையுடன் புடவை கட்டிக்கொள்கின்றனர். இக் கச்சை முன்பக்கமாக நோக்கினுல் தெரிவதில்லை; பின்புறம் இது சிறிதளவு காணப்படுகிறது. கச்சையின்மேல் புடவை மற்ருெரு முறை சுற்றப் பட்ட பின்னரே புடவைத் தலைப்பு மார்பகத்தின்மேல் போட்டுக் கொள்ளப்படுகிறது.

அடிலாபாத், கரிம்நகர் மாவட்டங்களில் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த பெண்கள் மகாராஷ்டிர முறையில் கச்சையை அணிந்து கொள்கின்றனர்.

(3) சென்னை: தமிழ்ப் பிராமணரைப் பொதுவாக ஐயர், ஐயங்கார் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இப் பிரிவு களைச் சேர்ந்த பெண்கள் வெவ்வேறு வகையில் கச்சையை அணிகின்றனர்.

படம் 84 ஐயங்கார் பாணிக் கச்சையைக் காட்டுகிறது. சாதாரண மாக ஒன்பது கஜப் புடவையை இவர்கள் உபயோகிக்கின்றனர். இம் முறையில் புடவை அணியப்படும்போது, முழங்கால்கள், கணுக் கால்களைச் சுற்றியுள்ள (இரண்டு கால்களிலும்) பாகங்கள் ஒழுங் காகத் தைக்கப்பட்ட பைஜாமாவைப்போல் காணப்படுகின்றன. கணுக்காலில் துணி இறுகச் சுற்றப்படுகிறது.

படம் 85 ஐயர் பாணிக் கச்சையைக் குறிக்கிறது. இவ்வகை யில் பைஜாமாபோன்ற அமைப்பு வலக்காலில் காணப்படுகிறது. இடக்காலில், இடுப்பிலிருந்து தொங்கவிடப்பட்ட பல மடிப்புகள் காணப்படுகின்றன. புடவைத் தலைப்பு வலத்தோளில் அணியப் படுகிறது.

ஐயர், ஐயங்கார் ஆகிய இரண்டு வகையினரின் கச்சை களும் ஆந்திரப் பிராமணருடையதுபோல் மறைக்கப்படுவதால் வெளியில் தெரிவதில்லை. கணுக்காலில் பைஜாமா போன்ற அமைப்புமட்டும் வெளியே தெரிகிறது.

தமிழ் நாட்டில் கச்சையுடன் புடவை கட்டிக்கொள்ளும் முறைக்கு 'மடிசாறு' என்று பெயர். கன்னட, தெலுங்கு மொழிகளில் கச்சையென்னும் சொல்லுக்கு வேறு சொல் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆனுல், கன்னடத்தில் ஆசாரமாக உள்ள புடவைக்கு 'மடிசீரே' என்று பெயர். மதச் சடங்குகளின்போது இது அணியப் படுகிறது.

நகர நாகரிகம் மிகுதியாகப் பரவியுள்ளபோதிலும், தென் இந்தியப் பிராமணப் பெண்கள் கச்சையுடன் கூடிய புடவையைப்



படம் 85. அய்யர் கச்சையின் முன்பக்கத் தோற்றமும் பின் பக்கத் தோற்றமும்.

பழைய பாணியில் சில சந்தர்ப்பங்களில் கட்டிக்கொள்ளவேண்டு மென்று எதிர்பார்க்கின்றனர். அவை கீழ்வருமாறு :

ஒருவருடைய திருமணத்தின்போது.

ஒருவருடைய குழந்தைகளின் திருமணத்தின்போது; சில சடங்குகளைச் செய்யும்போது.

ஆண்டில் ஒரு நாள் இறந்த முன்னோர்களுக்குத் திவச நாளில் உணவைச் சமைக்கும்போது.

விரதங்கள், பூசைகள் ஆகியவற்றைச் செய்யும்போது.

தத்தம் மதகுருமார்களிடமிருந்து (ஐயராக இருந்தால் ஸ்ரீ சங்கராச்சாரியார் ; ஐயங்காராக இருந்தால் ஜீயர்) ஆசீர்வாதம் பெறும்போது.

திருமணமானபின் தென்னிந்தியப் பிராமணப் பெண்கள் மாதவிடாயாக இருக்கும் முதல் மூன்று நாட்களில்மட்டும் கச்சை அணியாமலிருக்கச் சந்தர்ப்பம் உண்டு.

கடைசியாக, கேரளத்தில் நம்பூதிரி, மேனன், நாயர் பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் அணியும் கச்சையை நோக்குவோம். இதுவரையிலும் கூறப்பட்டுள்ள கச்சைகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டுள்ளது. இங்கு சுமார் $2\frac{1}{2}$ கஜ நீளமும் ஒரு கஜ அகலமுமுள்ள தைக்கப்படாத துணி இடுப்பைச் சுற்றிக் கட்டப்படுகிறது. இதன் மீதிப் பாகம் கால்களின் இடையில் கொண்டுசெல்லப்பட்டுப் பின்பக்கத்தில் செருகப்படுகிறது. இது இடுப்பிலிருந்து முழங்கால்வரை அல்லது சிறிது உயரமாக இருக்கும்; உள்ளணி அரைக்கால் சட்டைபோல் இருக்கிறது. இதன்மேல் கச்சை முழுவதையும் மறைக்கும்படி இரண்டு அல்லது மூன்று கஜ நீளமுள்ள தைக்கப்படாத துணி இடுப்பைச் சுற்றிக் கட்டப்படுகிறது.

அந்தஸ்து எவ்வாறிருப்பினும், மேலே குறிப்பிடப்பட்ட மூன்று உயர்வகுப்பாரும் இத் துண்டுத் துணியை இவ்வாறே அணிகின்றனர்.

### புடவைத் தலைப்பு அல்லது ஊர்னுத் தலைப்பு அணியும் வகை


புடவைத் தலைப்பு அல்லது ஊர்னுத் தலைப்பு, வலத்தோளில் போடப்பட்டு முன்பக்கம் தொங்கவிடப்படும் முறை காக்ரா மண்டலத்தில் காணும் ஆடை வகையை ஒத்திருக்கிறது.

சில இடங்களில் நாகரிகம் பெற்றுள்ள பெண்கள் புடவைத் தலைப்பைப் பின்பக்கத்திலிருந்து தோள்வழியாக முன்பக்கத்திற்குக் கொண்டுவந்து ஊசியினுல் அதைக் குத்தியோ அல்லது இறுகக் கட்டி மார்பின்மேல் இருக்கும்படி அணிந்துகொள்ளுகின்றனர். தென்னிந்தியாவில் குடகுப் பெண்களும், கேரளத்தில் கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுவன்குடிப் பெண்களும் தைக்கப்படாத ஒரு துணியை இம் முறையில் அணிகின்றனர்.

நாம் வடக்கே சென்ருேமானல், பஸ்தாரைச் சேர்ந்த 'கிஞ்சோலி' கிராமத்தில் இளம்பெண்களிடையே இம் முறையைக் காணலாம். மேலும் வடக்கே சென்ருல், உத்தரப் பிரதேசத்துக் கார்வாலில் சில பெண்களிடையே இதனைக் காணலாம். கோடையில்

ஜம்மு மாவட்டத்தைச் சேர்ந்த சில பெண்களும் இம் முறையைப் பின்பற்றுகின்றனர்.

இவ்வாருகத் தைக்கப்படாத ஒரு துண்டுத் துணியை அணியும் வழக்கம் அங்குமிங்குமாக உள்ள சிற்சில இடங்களில் காணப்படினும், அத் துணியில் போடப்படும் முடிச்சு வலத்தோளிலோ அல்லது அதற்குக் கீழோ கட்டப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.



படம் 86. கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுவன் குடிப்பெண்.

தென்னிந்தியா முழுவதிலும், கிழக்கிந்தியாவிலும் புடவைத் தலைப்பு முன்பக்கத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்டுப் பின்பக்கத்தில் தொங்கவிடப்படுகிறது. ஒருசில குழுவினரைத் தவிர இதர வகுப்பார் இடத்தோளில் புடவைத் தலைப்பைப் போட்டுக்கொள்ளுகின்றனர்.

முகத்திரை

பொதுவாக நோக்குமிடத்து, வட இந்தியா முழுவதிலுமுள்ள பெண்கள் புடவைத் தலைப்பை அல்லது ஊர்ணுத் தலைப்பை அல்லது துப்பட்டாவைத் தலையின்மேல் போட்டுக்கொள்கின்றனரென்றும், தென்னிந்திய இராச்சியங்களான சென்னை, ஆந்திரா, தெற்கு மைசூர் ஆகியவற்றில் முகத்திரை பொதுவாகப் பிராமணரில் விதவைகளோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளதென்றும் தெரியவருகிறது. கேரளத்தில் இந்துப் பெண்கள் சாதாரணமாகத் தலையை மறைத்துக் கொள்வதில்லை.

இப் பெரும் பிரதேசத்தில் பல கிராமங்களில் பெரும்பாலான பெண்கள் இரவிக்கை (blouse) அணிகின்றனர். ஆனல், சில இடங்களில் பெண்கள் வீட்டினுள் இருக்கும்போது சட்டை அணிந்து

கொள்வதில்லை. வட இந்தியாவில் பிராமணப் பெண்கள் புனிதமான தாகக் கருதப்படும் சமையல் வேலையில் ஈடுபடும்போது இரவிக்கை அணியக்கூடாது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பீஹாரில் சில வீடுகளில் இவ் வழக்கத்தை இப்பொழுதும் காணலாம். உத்தரப் பிரதேசத்தில் இவ் வழக்கம் அநேகமாக மறைந்துவிட்டது.

இந்தியாவில் பல பாகங்களில் இரவிக்கையை (தைக்கப்பட்ட ஓர் ஆடை) பிராமணப் பெண்கள் சடங்குகளின்போது அணிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரவிக்கை இங்கு எப்பொழுது புகுந்தது என்பதைத் திட்டவட்டமாகக் கூறவியலாது. ஏனெனில், இது இடத்துக்கிடம், கிராமத்துக்குக் கிராமம், சாதிக்கு சாதி, ஒரே சாதியிலும் குடும்பத்துக்குக் குடும்பம் வித்தியாசப்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட தைக்கப்படாத துணிகளை உடுத்துக் கொள்ளும் வழக்கமுள்ள மண்டலத்தில் கேரளம், மத்திய அஸ்ஸாம்,



படம் 87. தைக்கப் படாத இரண்டு துணி களை அணிந்துள்ள கேரளத்துப் பெண்.

தெற்கு அஸ்ஸாம் ஆகியவை அடங்கும். இவ்விடங்களில் உடம்பின் கீழ்ப்பாகத்தை மறைக்க இடுப்பில் ஒரு துணி சுற்றப்படுகிறது. சில

வேளைகளில் தைக்கப்படாத மற்றொரு துணி மார்பின்மேல் அணிந்துகொள்ளப்படுகிறது. ஆனால், அஸ்ஸாமின் கச்சார் மாவட்டத்தில் பல பெண்கள் புடவை, இரவிக்கை ஆகியவற்றை அணிகின்றனர். இதர பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தைக்கப் படாத துணிகளை ஆடையாக அணிகின்றனர்.

அஸ்ஸாமில் குளிர்காலத்தில் மூன்றாவது ஒரு துண்டு வெப்பத் திற்காகப் போர்த்துக்கொள்ளப்படுகிறது.



படம் 88. தைக்கப்பட்ட மேலாடை, தைக்கப் படாத கீழாடை ஆகிய வற்றை அணிந்துள்ள நேபாளப் பெண்.



படம் 89. மேகலை, சுடார், ரவிக்கை ஆகியவற்றை அணிந்துள்ள அஸ்ஸாமிப் பெண்.

கடைசியானதும், மிகச் சிறியதானதுமான மண்டலத்தில் டார்ஜீலிங் மாவட்டத்தின் வடக்குப் பகுதி, அஸ்ஸாமின் வடக்கில் ஒரு துண்டு ஆகியவை அடங்கும். டார்ஜீலிங்கின் வடபாகத்தில் லெப்சாக்கள், பூடியாக்கள், துக்பாக்கள், நேப்பாளிச் சேத்ரிகள், ராய்கள், தமங்குகள் ஆகியோர் மக்கள்தொகையில் பெரும்பாலராக

உள்ளனர். இவர்களுடைய பெண்டிர் தொன்றுதொட்டுத் தைக்கப் பட்ட துணி, தைக்கப்படாத துணி ஆகிய இரண்டையும் அணிந்து கொள்கின்றனர். அவர்களது உடையின் அம்சங்கள் கீழ்வருமாறு :

ஃபான்ரியோ அல்லது குனியோ : முன்பக்கம் கொசுவத்தோடு இடுப்பிலிருந்து கட்டப்படும் தைக்கப்படாத ஒரு துணி.

முஜித்ரோ : தலையை மறைப்பதற்கு முகத்திரைபோல் பயன் படும் தைக்கப்படாத ஒரு துணி.

சோலோ : தைக்கப்பெற்ற ஒரு முழுக்கை இரவிக்கை.


சுமார் நான்கு கஜ நீளமுள்ள, நிறமுடைய ஒரு துணி இடுப்பின்மீது சுற்றப்படுகிறது. இது 'படுகா' என்று அழைக்கப் படுகிறது.

அஸ்ஸாமின் வடக்கு ஓரத்தில் உள்ள கோல்பாரா, காமரூபம், தர்ரங், நௌகாங், சிம்சாகர், லகிம்பூர் மாவட்டங்களில் அஸ்ஸா மிகள் மக்கள்தொகையில் பெரும்பாலராக உள்ளனர். அவர்களுடைய பெண்டிர் 'மேகலா' என்று வழங்கும் ஒரு தைக்கப்பட்ட பாவாடை யையும், அதன்மேல் ஒன்று அல்லது இரண்டு போர்வைகளையும் (ரிஹாவும், சடாரும்) அணிந்துகொள்கின்றனர். பாவாடையில் கொசுவம் எதுவும் வைத்துத் தைக்கப்படுவதில்லை; அது அதிக அகலமுள்ளதாகவும் இல்லை. ஆனால், இதன் செங்குத்தான இரண்டு ஓரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஆண்கள் தைக்கப்பட்ட லுங்கியை அணிவதுபோல் இவர்கள் இதை அணிகின்றனர். உடம்பின் மேற்பாகத்தில் போர்த்தப்பட்டுள்ள போர்வையும் தைக்கப் படாத துணியாலானதேயாகும். தற்காலத்தில் சில பெண்கள் தைத்து விற்கப்படும் இரவிக்கையை வாங்கி அணிந்துகொள்கின்றனர்.

இந்தியப் பெண்களின் உடைகள் பல வர்ணங்களைப் பெற் றுள்ளவை என்பது நமக்குத் தெரிந்ததே. சில நிறங்கள் வெவ்வேறு பிரதேசங்களில் மணப்பெண்களின் உடைகளுக்கு ஏற்றனவாகக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கிடைத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து கீழ்க்காணும் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.


| இராச்சியம் | சாதி | மணப்பெண்ணின் ஆடைக்கேற்ற நிறம் |
|---|---|---|
| கேரளம் | எல்லாச் சாதியினரிடையேயும் | வெள்ளை |
| சென்னை | சிறப்பாகப் பிராமணர்களிடையே | சிவப்பு, பச்சை நிறங்களும் அவற்றின் சாயல்களும் |

| இராச்சியம் | சாதி | மணப்பெண்ணின் ஆடைக்கேற்ற நிறம் |
|---|---|---|
| ஆந்திரா | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | மஞ்சள் |
| மைசூர் | சிறப்பாகப் பிராமணர்களிடையே | மஞ்சள் (விதவைகள் சிவப்புப் புடவை அணிவதால் சிவப்பு நிறம் விலக்கப்பட்டது) |
| ஒரிஸ்ஸா | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | மஞ்சள் அல்லது சிவப்பு |
| மேற்கு வங்காளம் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | சிவப்பு நிறத்தின் சாயல்கள் |
| பீஹார் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | மஞ்சள் அல்லது ஊதா |
| உத்தரப்பிரதேசம் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | சிவப்பு |
| மத்தியப்பிரதேசம் | கிழக்கு மத்தியப் பிரதேசத்தில் எல்லாச் சாதியினரிடையேயும் | ஊதா |
| இராஜஸ்தானம் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | சிவப்பு |
| குஜராத் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | சிவப்பு |
| மகாராஷ்டிரம் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | சிவப்பு |
| ஜம்மு-காஷ்மீரம் | ஏறக்குறைய எல்லாச் சாதியினரிடையேயும் | சிவப்பு நிறத்தின் சாயல்கள் |




Reg. No. 2979 E 61-2500.
Reproduced from the original supplied by the Director Anthropological Svy of India and the Survey of India is not responsible for the accuracy of the map
PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P L O).
© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.

பெண்களின் உடை — தைக்கப்பட்ட உடுப்புகளும் தைக்கப்படாத உடுப்புகளும்




Reg No. 2979 E'61-2500.
© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.
Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map
PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

பெண்களின் உடை — தைக்கப்படாத துணியும் கச்சையும்

# 8. காலணி

(எஸ். ஜி. மொராப்)

நகரங்களில் காணப்படும் பல்வேறு வகையான செருப்புகளை நாம் தவிர்த்துவிடவேண்டும். இவை கிராம மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளனவென்பது உண்மையே. ஆனால், உள் நாட்டில் செய்யப்பட்டுக் கிராமிய இந்தியாவில் பயன்படுத்தப்படும் காலணிகளைமட்டும் தெரிந்துகொள்வதே நமது நோக்கமாகும். பிரதேச வேறுபாட்டைத் தெரிந்துகொள்ளவும், பூகோள ரீதியாக பல் துணை வகைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் இஃது உதவு கிறது. அநேக இடங்களில் ஆண்கள் எந்தவிதமான செருப்பு களையும் அணிந்துகொள்வது வழக்கமில்லை என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். பெண்களைப் பொறுத்தவரை, இவ்விதச் செருப்பு மேலும் அதிகமாக உள்ளது. இம் மண்டலத்தில் எந்தவிதமான காலணிகளும் காணப்படுவதில்லை. இந்தியாவில் தெற்கு, தென் கிழக்கு, வடகிழக்கு மாவட்டங்கள் இதில் அடங்கும்.

இரண்டு முக்கியக் காலணி வகைகள் காணப்படுகின்றன. இதில் ஒரு வகையைச் சேர்ந்த செருப்பில் (சான்டல்) மரத்தினாலோ தோலினாலோ செய்யப்பட்ட அடிப்பாகமும், அதன்மேல் இணைக்கப் பட்ட வார்களும் உள்ளன. காலில் தோலினாலும், புல்லால் திரிக்கப் பட்ட கயிறுகளினாலும் வார்கள் செய்யப்படுகின்றன. இரண்டாவது வகைச் செருப்பில் 'வார்'கள் இல்லை. • இச் செருப்பு ஒன்று அல்லது இரணடு அபூர்வ சந்தர்ப்பங்களைத் தவிர வேறு எப்பொழுதும் கணுக்காலுக்குமேல் உயருவதில்லை. தற்சமயம் வசதியை முன் னிட்டு மரச்செருப்புகளைத் தனியான ஒரு பகுதிக்கு ஒதுக்கி வைப்போமாக.


'சான்டல்'கள், ஷூக்கள் ஆகிய இரண்டுக்குமிடையே நடை முறையில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. சான்டல்களில் சாதாரணமாகக் குதிகால்களை இறுகப் பிணைக்கும் தோல் வார் இல்லை;

இவற்றை அணிந்துகொண்டு நடக்கும்போது, கால் விரல்களால் 'சான்டல்'களைச் சிறிது அழுத்திக்கொள்ளவேண்டும். அவ்வாறில்லையேல், அவை கால்களிலிருந்து முன்னால் நழுவிவிடக்கூடும். மாறாக ஷூக்களின் வார்கள் காலுடன் அவற்றைப் பிணைத்துவிடுகின்றனவாதலால், கால் விரல்களால் அதனை அழுத்தவேண்டிய அவசியமில்லை.


இந்தியாவில் செருப்புகளில் பல வகைகள் உள்ளன. அவை நாட்டில் பரவியிருக்கும் இடங்களைக் குறிப்பிட்டு, அவற்றை வருணிக்க முயல்வோம்.

செருப்புகள் (Sandals)

(அ) தோல் செருப்புகளில் கட்டைவிரலைப் பிடித்துக்கொள்வதற்காக ஒரு சிறிய கொளுவி இருக்கும்; அல்லது முதல் விரலுக்கும் கட்டைவிரலுக்குமிடையே ஒரு தோலினாலான 'வார்' தைக்கப்பட்




படம் 90. மகாராஷ்டிரத்தில், 'நந்தது' மாவட்டத்தில், ஒரே பட்டையும் பிடியும் உள்ள செருப்பு.




படம் 91. ஆந்திரப் பிரதேசத்தில், குண்டூர் மாவட்டத்தில், இரண்டு பட்டைகளுடனும் பிடியுடனும் கூடிய செருப்பு.

டிருக்கும். இது புறங்கால்வரையிலும் இணைக்கக்கூடிய பட்டையோடு சேர்ந்திருக்கும். இவ்விரு முறைகளும் ஒரே செருப்பில் காணப்


படுவதும் உண்டு. புறங்காலின்மேல் உள்ள பட்டை ஒன்ருகவோ, இரண்டாகவோ அல்லது பலவாகவோ இருக்கலாம். சில சமயங்



படம் 92. பல துண்டுகளாலான அடிப்பாகத்தையுடைய செருப்பு (மகாராஷ்டிரத்தில் கோல்ஹாபூர் மாவட்டம்).



படம் 93. பிடி, அடித்தோல் ஆகியவற்றுடன் தொடர்பில்லாத பட்டையுடன் கூடிய செருப்பு (ஆந்திரப் பிரதேசம்).




படம் 94. பல பட்டைகளுடன் கூடியதும், ஒன்றின்மேலொன்று குறுக்காகச் செல்கின்ற சில பட்டைகளுடன் கூடியதுமான செருப்பு. ஆந்திரப் பிரதேசத்தில் மேற்கு கோதாவரி மாவட்டம்.

களில் குறுக்காகச் செல்லும் பட்டைகள் இவ்விரு பட்டைகளை வலுப்படுத்துவதுமுண்டு.

இந்த வகை ஆந்திரப் பிரதேசம், சென்னை, மைசூர் இராச்சியங்களில் பெரும்பாலான மாவட்டங்களில் காணப்படுகிறது. இவற்றை ஒரு 'மண்டலம்' எனலாம். இம் மண்டலம் மகாராஷ்டிரத்தின் வடக்கு, கிழக்கு மாவட்டங்கள்வரையில் பரவியுள்ளது.

குஜராத், மகாராஷ்டிரம் ஆகியவற்றின் மேற்கு மாவட்டங்களிலும், மைசூரின் வடக்கு மாவட்டங்களிலும் பெண்களும் இவ்வகைச் செருப்புகளை அணியக் காண்கிறோம். சென்னையில் கோயம்புத்தூர், மதுரை, செங்கல்பட்டு மாவட்டங்களும், மத்தியப் பிரதேசத்தில் சில மாவட்டங்களும் இவ்வகைச் செருப்புகள் அணியப்படும் இடங்களுக்குச் சில உதாரணங்களாகும்.


மற்றொரு வகைச் செருப்பில் குதிகாலுடன் இணைப்பதற்கு ஒரு பட்டை இருக்கிறது. செயலளவில் இதை 'ஷூ' குடும்பத்துடன் சேர்த்துவிடலாம். ஆண்களைப் பொறுத்தமட்டில் இது மத்தியப் பிரதேசத்தில் துர்க், ராய்பூர், பீடுல் மாவட்டங்களிலும், பெண்களைப் பொறுத்தமட்டில் மத்தியப் பிரதேசத்தின் தென்மேற்கு, தென்கிழக்கு மாவட்டங்களிலும் காணப்படுகிறது.




படம் 95. மத்தியப் பிரதேசத்தில், துர்க் மாவட்டத்தில் காணப்படும் செருப்பு.

(ஆ) செருப்பில் மற்றொரு வகை 'சிலிப்பர்' ஆகும் (slippers). இது குதிகாலில் திறந்திருக்கிறது. 'ஷூ'வின் மேல்பாகத்தில் பாதிபோன்றிருக்கும் தோல்வார்களுக்குப் பதிலாக அடித்தோலுடன் தைக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் அநேகமாக எல்லாத் தெற்கு மாவட்டங்களிலும், ஆண்கள் இதை உபயோகிக்கின்றனர். வங்காளம், பீஹார், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றிலும், குஜராத்தின் வடக்குப் பகுதி, இராஜஸ்தானத்தின் தென்கிழக்கு மாவட்டங்கள், மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகள், ஜம்மு-காஷ்மீர இராச்சியம் ஆகியவற்றிலும் முஸ்லிம் பெண்கள் இவ்வகை சிலிப்பர்களை அநேகமாக அணியக் காண்கிறோம்.


(இ) இந்திய 'ஷூ'வின் மேல்பாகம் உயரமில்லாததாகும். மத்திய பாகத்தில் இது மிகவும் தாழ்ந்திருக்கும். கட்டை விரற் பகுதி அபூர்வமாக அகலமுள்ளதாகவும் வட்டமானதாகவும் இருக்கும். இஃது அநேகமாகக் கூரானதாக இருக்கும். இப் பாகம் அநேகமாக நீண்டு மேல்நோக்கி வளைந்திருக்கும். அழகுக்காக இது பின்புறமாக வளைந்திருப்பதுமுண்டு.



படம் 96. மத்தியப் பிரதேசத்தில், துர்க் மாவட்டத்தில் காணப்படும் செருப்பு.




படம் 97. மேற்கு வங்காளத்தில், 24-பர்காணுக்கள் மாவட்டத்தில் காணப்படும் செருப்பு.



படம் 98. மேற்கு வங்காளத்தில், ஹூக்ளி மாவட்டத்திலுள்ள வித்யாசாகர் வகை சிலிப்பர்.

'ஷூ'வை முக்கியமாக உபயோகிக்கும் மண்டலத்தில், மகாராஷ்டிரத்தின் தென் மாவட்டங்களிலிருந்து ஜம்மு-காஷ்மீர் இராச்சியத்தின் வடக்கு மாவட்டங்கள்வரையிலுள்ள பகுதிகள்

அடங்கும். ஜம்மு-காஷ்மீரத்தின் முழுப்பாகம், பஞ்சாப், இராஜஸ்தானம், குஜராத், ராய்கார் மாவட்டத்தைத் தவிர்த்து மத்தியப் பிரதேசத்தின் இதர பகுதிகள், உத்தரப் பிரதேசம், பீஹாரின் சில பகுதிகள், மேற்கு வங்காள இராச்சியத்தில் புருளியா மாவட்டம் ஆகியவையும் இம் மண்டலத்தைச் சேர்ந்தவையே.




படம் 99. மத்தியப் பிரதேசத்தில், தாடியா மாவட்டத்தில் இந்துப் பெண்களின் சிலிப்பர்.

இந்திய 'ஷூ'வில் சில விதங்கள் உள்ளன. இவை கீழே வருணிக்கப்பட்டுள்ளன; இவை காணப்படும் இடங்களும் தரப்பட்டுள்ளன.

'ஷூ'


(1) நக்ரா வகை: இவ்வகை 'ஷூ'வின் பின்பக்கம் சிறிது உயர்ந்துள்ளது. கட்டைவிரல்-முனை கூராகவும், சிறிது பின்பக்கமாக



படம் 100. உத்தரப் பிரதேசத்தில், கோரக்பூர் மாவட்டத்தில் காணப்படுவது.

வளைத்துத் தைக்கப்பட்டும் உள்ளது. ஷூவின் பக்கங்கள் தாழ்வாகவுள்ளன; பின்பக்கம் தொட்டு, ஷூவின் மேல்பாகம் வரையிலுள்ள அடித்தோல் அதிக நீளமுள்ளதாக இருக்கிறது. நடக்கும்போது இது காலில் இறுகப் பிடித்துக்கொள்கிறது. இது, ஜம்மு-காஷ்மீரம், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், இராஜஸ்தானம், குஜராத், மத்தியப் பிரதேசம், பீஹார் ஆகியவற்றில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. பஞ்சாபிலும், உத்தரப் பிரதேசத்திலும், குதிகால் சில சமயங்களில் கீழ்நோக்கி அழுத்தப்பட்டிருப்பது


கவனிக்கத்தக்கது. இது ஸ்லிப்பர்போல் அணியப்படுகிறது. இதே வழக்கம், மகாராஷ்டிரத்திலும் இருக்கக் காணலாம்.



படம் 101. மத்தியப் பிரதேசத்தில் சாத்ன மாவட்டத்தில் காணப்படுவது.

இடத்துக்கிடம் சில மாறுபாடுகளும் உள்ளன. ஆனால், அவற்றைப்பற்றி இப்பொழுது கவனிக்கத் தேவையில்லை.


**(2) பண்டல்கண்டு வகை :** இவ்வகை 'ஷூ'வில் மேல் பாகத்தில் முன்பக்கமும், பின்பக்கமும் உயரமாக இருக்கின்றன.



படம் 102. உத்தரப் பிரதேசத்தில், ஜான்சி மாவட்டத்தில் காணப்படுவது.

எனவே, புறக்காலில் பாதியும், கணுக்காலும் இதனால் மறைக்கப்படுகின்றன. கட்டை விரல் பகுதி, இவ்வகை 'ஷூ'வில் சிறிதளவு மேல் நோக்கி வளைந்திருக்கிறது. பண்டல்கண்டைத் தவிர, உத்தரப் பிரதேசத்தில் ஜான்சி, ஹம்ரிபூர் மாவட்டங்களிலும் மத்தியப் பிரதேசத்தில் தாடியா மாவட்டத்திலும் இவ்வகை 'ஷூ' காணப்படுகிறது.


(3) மகாராஷ்டிர வகை : சில செருப்புகள் அமைப்பில் செருப்புகளாக இல்லாவிடினும் பயன்படுவதில் 'ஷூ'க்களாக இருப்பனபோல், சில 'ஷூ'க்களும், செயலளவில் செருப்பு அல்லது ஸ்லிப்பரைப்போல் இருக்கின்றன. மகாராஷ்டிர 'ஷூ' இவ்வாறு இருக்கிறது; இதில் கணுக்காலே மறைக்கும் பகுதி செய்யப்படுகிறது ;



படம் 103. மகாராஷ்டிரத்தில் பூனு மாவட்டத்தில் காணப்படுவது.

ஆனால் அப்பாகம் நன்ருக நசுக்கப்பட்டு, ஸ்லிப்பராக 'ஷூ' பயன்படுத்தப்படுகிறது. மகாராஷ்டிரத்தில், சிறப்பாக மேற்கு மாவட்டங்களில், இவ்வகை காணப்படுகிறது. மேலே கூறப்பட்டது போல, இவ்வகை 'ஷூ' உத்தரப் பிரதேசம், பஞ்சாப் ஆகியவற்றில் சில வேளைகளில் உபயோகப்படுத்தப்படுகிறது.

கயிறு போடப்படாத இந்திய 'ஷூ' பெண்களாலும் அணியப்படுகிறது. இது காணப்படும் பிரதேசங்கள், பஞ்சாப் (முழுவதும்),



படம் 104. குஜராத்தில் இராஜகோட்டை மாவட்டத்தில் உள்ளது.


இராஜஸ்தானம், குஜராத்தில் சௌராஷ்டிரம், கட்ச் ஆகிய தெற்கு மாவட்டங்கள் முதலியனவாகும். மத்தியப் பிரதேசத்தில் சில தெற்கு மாவட்டங்களிலும் இது காணப்படுகிறது.

### பல்வேறு வகைப்பட்ட 'ஷூ'க்கள்


சில இடங்களில் சில விசேஷமான வகைகள் காணப்படுகின்றன. மரத்தினாலான அடிப்பாகமும், தோலால் செய்யப்பட்ட மேல்பாகமும் சிலவற்றில் காணப்படுகின்றன. வெள்ளாட்டு உரோமம், தேங்காய்நார்க் கயிறு ஆகியவற்றாலும் 'ஷூ' முழுவதும் செய்யப்படுவதுமுண்டு. ஆனால், இவை பெரும்பாலும் விநோதப் பொருள்களாகவே கருதப்பட்டு வருகின்றன. உத்தரப் பிரதேசத்தில் இமாலய மாவட்டங்கள், இமாசலப் பிரதேசம் ஆகிய இடங்களில், இவ்வகை 'ஷூ'க்கள் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலராலும் பயன்படுத்தப்படுகின்றன. இவை யாவும் குன்று வகையைச் சேர்ந்தவை யென்று கருதப்படுகின்றன.

### மரச்செருப்பு (மிதியடி)

இது மர ஆணியினுதவியால் காலுடன் இறுகப் பிடித்துக்கொள்கிறது. புல்லாலான கயிற்றினாலான வார்கள் கட்டைவிரலுக்கும் முதல் விரலுக்குமிடையே கட்டப்பட்டு, மரக்கட்டையின் இரண்டு




படம் 105. உத்தரப் பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் உள்ளது.



படம் 106. உத்தரப் பிரதேசத்தில் வாரணாசி மாவட்டத்தில் உள்ளது.

பக்கங்களிலும் கட்டப்படுகின்றன. அடிப்பாகத்தில் வார்கள் எதுவும் இல்லை. ஒரிஸ்ஸா, வங்காளம், பீஹாரில் சில பகுதிகள்,

மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசத்தின் வடக்கு மாவட்டங்கள் ஆகியவற்றில் ஆண்கள் இதைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். ஜம்மு-காஷ்மீர இராச்சியத்தின் வடக்கு மாவட்டங்கள், மைசூர் இராச்சியத்தில் குடகு மாவட்டம், கேரள இராச்சியம் (முழுவதும்) ஆகியவற்றிலும் இது காணப்படுகிறது. வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் பெண்களும் இதைப் பயன்படுத்துகின்றனர்.





Rec No. 2979 E'61-2500.
© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.

Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT ... SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

காலணி — மரச் செருப்பு




செருப்புகளும், மரச்செருப்பைத் தவிர மற்றைக் காலணிகளும்

# 9. மாட்டு வண்டிகள்

(பி. கெ. மிச்ரா)


மாட்டு வண்டிகள் கிராமிய இந்தியாவின் முக்கியப் பொருள்களாக விளங்குகின்றன. சக்கரங்களின் தன்மையைக் கொண்டு இவற்றை இரண்டு அல்லது மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். சக்கரத்தின் அளவும், கடையாணியின் ஓரங்களில் அடிக்கப்பட்டு வண்டிச் சக்கரக் குடத்தின் வழியாக நீட்டிக் கொண்டிருக்கும் சில மரத்துண்டுகள் ஆகியவற்ருல், இவ் விரண்டு வகைகளை மேலும் உபபிரிவுகளாகப் பிரிக்கலாம். சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு ஏற்றிக்கொண்டு செல்லும் மாட்டு வண்டிகளைப் பற்றிமட்டும் தெரிந்துகொள்வது நமது நோக்கமாகும். பிரயாணி வண்டிகள், இதைவிடச் சிறிது விரிவான வகைகளையுடையன. தற்பொழுது அவ்ற்றைக் கவனிப்பது நமது நோக்கமன்று; மூன்று வகையான சக்கரங்கள் கீழ்வருமாறு :

**ஆரைக்கால் இல்லாத சக்கரம்**

இங்கு, மூன்று மரப்பலகைகள் ஒன்ருேடொன்று பொருத்தப் பட்டு, ஒரு மரச்செதுக்குக் கருவியால் வட்டமாக உருவாக்கப்படுகிறது. இவ்வகைச் சக்கரங்கள் பொதுவாகத் தாழ்ந்திருக்கும். இவை கீழ்க்கண்ட மாவட்டங்களில் காணப்படுகின்றன. பீஹாரில் ராஞ்சி, பாலமாவ்; மத்தியப் பிரதேசத்தில் சிதி, ஷாதோல், பிலாஸ்பூர், ராய்பூர் பஸ்தார்; ஆந்திராவில் நிஜாமாபாத்; மகாராஷ்டிரத்தில் உஸ்மானுபாத், நந்தத், அவுரங்காபாத், புல்தானு, பிர், பர்பானி; மைசூரில் தார்வார், ஷிமோகா, மாண்டியா; உத்தரப் பிரதேசத்தில் அலகாபாத், பிரதாப்கர், பதேபூர், ஹர்தோய்.

மொகஞ்சதாரோவில் குழந்தைகளின் வண்டிகளின் மண்ணுலான சக்கரங்கள் கெட்டியானவையாக இருந்தனவென்று மாக்கே.

கூறியிருப்பது, இங்கு கவனிக்கவேண்டியதாகும்; இன்று வழக்கிலுள்ள தாழ்ந்துள்ள 'சிந்தி' வண்டிகளை அவை ஒத்திருக்கின்றன வென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மத்திய இந்தியாவிலுள்ள ஆரைக்கால் இல்லாத சக்கரங்களைப் போன்று சிந்துவிலுள்ள வண்டிச்சக்கரங்கள் மூன்று (அல்லது நான்கு?) மரப்பலகைகளை ஒன்றோடொன்று இணைத்துச் செய்யப்பட்டன என்று ஒரு தகட்டிலிருந்து தெரிகிறது. சிந்துவிலுள்ள வண்டிச் சக்கரங்களில், மேல் பலகையும், கீழ்ப்பலகையும் வட்டப் பகுதிபோல் அமைக்கப் பட்டிருக்கின்றன. மத்தியிலுள்ள பலகையில் மட்டிலும் சிறிது குடைந்தெடுக்கப்பட்டிருக்கும். இதனால் சக்கரத்தில் இரண்டு




படம் 107. ஆரக்காலில்லாத சக்கரம், பீஹாரில் ராஞ்சி மாவட்டம்.

முட்டை வடிவப் பிளவுகள் இருக்கின்றன. இவை மத்திய இந்தியாவில் காணப்படும் கெட்டியான சக்கரங்களைப் போன்றவையல்ல.[1]


## ஆர வடிவ சகடக்கால்கள் (Radial Spokes)

வண்டிச் சக்கரத்தின் குடத்தோடு பொருத்தப்பட்ட ஆர வடிவச் சகடக்கால்கள் உள்ள சக்கரங்கள், கேரள இராச்சியம் (முழுவதும்), சென்னை, மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஏறக்குறைய மத்தியப் பிரதேசம் முழுவதும், இராஜஸ்தானம் ஆகியவற்றில் உள்ளன. ஒரிஸ்ஸாவிலும், வடக்கு குஜராத்திலும், இவ்வகைச் சக்கரங்களும், இணையான சகடக்கால்களுள்ள மூன்றுவது வகையும் காணப்படுகின்றன. பீஹாரில் சசராம், பூர்ணியா மாவட்டங்களிலும், உத்தரப் பிரதேசத்தில் பாலியா, காசிபூர் ஆகிய இடங்

[1] எர்னெஸ்ட், மாக்கே: 'ஏர்லி இண்டஸ் சிவிலிசேஷன்', 1948.




படம் 108. ஆரம் போன்ற சகடக்கால்களுள்ள சக்கரம், சென்னை இராச்சியத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



படம் 109. ஆரம் போன்ற சகடக்கால சக்கரம், கேரளத்தில் பாலக்காடு மாவட்டம்.


களிலும், காஷ்மீரத்திலும், மேற்கு வங்காளத்தில் ஹௌரா, மித்னபூர், 24-பர்காணுக்கள், ஜல்பைகுரி மாவட்டங்கள், பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கிலுள்ள மாவட்டங்கள், மணிபுரி ஆகியவற்றிலும் இது காணப்படுகிறது. ஒரிஸ்ஸாவில், வடக்கு குஜராத்தில் இருப்பதுபோல் இணையான ஆரக்கால்களும் சகடக்கால்களும் காணப்படுகின்றன.



படம் 110. ஆரம் போன்ற சகடக்கால் சக்கரம், அச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் ஜுனகாத் மாவட்டம்.

'இணை'யான சகடக்கால்கள்


இணையான சகடக்கால்களைக் கொண்டுள்ள சக்கரங்கள் கவர்ச்சியுள்ள அமைப்பினைக் கொண்டவையாகும். சில சமயங்களில்




படம் 111. ஆறு இணையான ஆரக்கால்களுடைய சக்கரம்; பீஹாரில் சிங்பும் மாவட்டம்.

ஆரைக்கால்கள், சக்கரத்தின் ஓர் ஓரத்திலிருந்து, எதிர் ஓரத்துக்குக் குடத்தின் வழியாகச் செல்வதுமுண்டு. மூன்று ஜோடி சகடக்கால்களும், வெவ்வேறு அகலமுடையவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிகக் கெட்டியான சகடக்கால் குடத்தின் வழியாக மெல்லிய இணையான சகடக்கால்கள் நுழைக்கப்பட்டுள்ளன; மிகவும் மெல்லிய சகடக்கால்கள், அதைவிடக் கெட்டியான இரண்டு ஜோடிச் சகடக்கால்கள், குடம் ஆகியவற்றின் வழியே நுழைக்கப்பட்டுள்ளன.

இவ்வகை இணையான அமைப்பைப் பெற்றுள்ள சகடக்கால்கள் பஞ்சாபில் அமிர்தசரஸ், பெரோஸ்பூர் ஆகியவற்றிலிருந்து வங்காளத்தில் தினஜ்பூர், மால்டா (Malda), மூர்ஷிதாபாத், பிர்பூம்,



படம் 112. நான்கு இணையான ஆரக்கால்களைப் பெற்றுள்ள சக்கரம், குஜராத்தில் அகமதாபாத் மாவட்டம்.




படம் 113. அச்சுடன் இணைக்கப்பட்டுள்ள சக்கரம், இராஜஸ்தானத்தில் பாரத்பூர் மாவட்டம்.

நாடியா மாவட்டங்கள் வரை, வடக்குச் சமவெளிகள் முழுவதிலும் பரவலாகக் காணப்படுகின்றன. ஹூக்ளியில் ஆர வடிவமும், இணையானவையும் ஒன்றாகக் காணப்படுகின்றன.

மேலே கூறப்பட்டுள்ள இரண்டு வகைச் சக்கரங்களின் துணை வகைகளை இப்பொழுது கவனிப்போம். சகடக்கால் இல்லாத சக்கரத்தின் துணை-வகை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆர வடிவ சகடக்கால்களைக் கொண்டுள்ள சக்கரங்கள் காணப்படும் பிரதேசத்தை நோக்கினல், இராஜஸ்தானத்தில் உதயபுரி, சிரோஹி, டோங்க், சவாய்-மதுபூர், ஆல்வார், பரத்பூர், பண்டி, கோடா, ஜலவார், ஜெய்ப்பூரின் சில பகுதிகள், கங்காநகர் ஆகிய மாவட்டங்கள் தவிர இதர பகுதிகளில், சக்கரத்தில் ஆர வடிவச் சகடக்கால்களில் அகலமான உள்சக்கரம் பொருத்தப்பட்டுள்ளது. இதனல் சகடக் கால்களின் நீளம் மிகக் குறைக்கப்பட்டுள்ளது; அவை பொதுவாக 3 அங்குலம் அல்லது சற்று அதிகமான நீளமுள்ளவையாக இருக்கின்றன.


சக்கரங்கள் அளவில் மிகவும் மாறுபடுகின்றன. இதிலிருந்து ஆர வடிவம், இணைவடிவம் ஆகியவற்றை, உப-பிரதேசவாரியாகப் பிரிக்கலாம். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள தேசப் படத்தில்,



படம் 114. சிறிய சக்கரம், குட்டையான ஆரக்கால்கள், சக்கரத்தின் அகன்ற புறச்சுற்று வட்டம் ஆகியவற்றுடன் கூடிய சக்கரம், இராஜஸ்தானத்தில் ஜெய்சால்மர் மாவட்டம்.

வெவ்வேறு அளவுள்ள சக்கரங்கள் காணப்படுகின்றன. மூன்று அடி விட்டமுள்ள சக்கரங்கள் சிறியவையென்று கருதப்படுகின்றன; 3′ 1″ முதல் 4′ விட்ட அளவுள்ளவை நடுத்தரமாகும்; 4′ 1″ முதல் 5′ விட்ட அளவுள்ளவை மிகவும் உயரமுள்ளவையாகும். தேசப் படத்தை நோக்கினல், சிறிய சக்கரங்கள் மத்திய இந்தியாவில் தொடர்ச்சியான ஒரு பெரும்பகுதியிலும், இராஜஸ்தானம், கட்ச்


ஆகியவற்றின் முழுப் பகுதியிலும், சௌராஷ்டிரத்தில் சில இடங்களிலும் காணப்படுகின்றன வென்பது தெளிவாகப் புலனுகும். நடுத்தர சக்கரங்களும், அதிக உயரமுள்ளவையும் வடக்கில் காணப்படுகின்றன. உயரமான சக்கரங்கள் உத்தரப் பிரதேசத்தில் கிழக்கிலும் தெற்கிலுமுள்ள சில இடங்கள், மேற்கு பீஹார் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இவ் வகையானது, குஜராத்தில் பரோடா, கைரா; மகாராஷ்டிரத்தில் தாஞ; ஒரிஸ்ஸாவின் கடற்கரையோரம், மத்திய பாகம், கொரபட்; அவற்றினருகில் மத்தியப் பிரதேசத்தில் தெற்கு பஸ்தாரைச் சேர்ந்த மாவட்டங்கள் ; ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது. ஆனல் ஆந்திரப் பிரதேசம், மைசூர் ஆகியவற்றில் உள்ள சக்கரங்கள் உயரமானவையாகவோ, அதிக உயரமுள்ளவையாகவோ இருக்கின்றன. மிகவும் உயரமானவை ஆந்திராவில் சில மாவட்டங்களிலும், சென்னையில் தென்கோடி மாவட்டங்களிலும், கேரளம் முழுவதிலும் காணப்படுகின்றன. குண்டூர், கிருஷ்ண மாவட்டங்களிலும், இரு கோதாவரி மாவட்டங்களிலும் 6′ உயரமும் அதற்குமேல் உயரமுள்ள சக்கரங்கள் உள்ளனவென்று அறிகிறோம்.



படம் 115. தடிப்பான ஆரம் போன்ற சகடக்கால்கள், வளைவான மேடை ஆகியவற்றையுடைய வண்டி, இராஜஸ்தானத்தில் சித்தோர்கர் மாவட்டம்.

வடக்கில் காணப்படும் ஆர வடிவச் சகடக்கால்கள், இணையான சகடக்கால்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க மற்றேர் அம்சம் உண்டு. இவற்றில் சக்கரத்தின் அச்சுக்குத் தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. சக்கரத்தின் குடம் வழியாக இவை இரண்டு பக்கங்களிலும் நீட்டிக்கொண்டிருக்கும்; ஒரு நிலமட்டமான துண்டு, அல்லது ஒரு வளைந்த துண்டு, அல்லது V-வடிவத்தில் அமைந்துள்ள இரண்டு துண்டுகள் ஆகியவை தாங்கிகளாக இருக்கக் காணலாம். உதைகாலின் முளைகள், வளைந்த அல்லது நேரான தாங்கி முதலிய யாவும் வண்டியுடன் இணைப்பதற்கு, இதர உதைகால்களுடன் பொருத்தப்படுகின்றன; அல்லது கயிறுகளினல் கட்டப்படுகின்றன.

அச்சுக்கு, இவ்வாறு வெளிப்பக்கத்தில் 'தாங்கி'களை அமைக்கும் வழக்கம், ஏறக்குறைய இந்தியாவின் வடமேற்கு மாவட்டங்களில் மட்டுமே காணப்படுகின்றன. சகடக்கால்கள் ஆர வடிவமுள்ளவை யாயினும். இணைகால்களைப் பெற்றவையாயினும், சக்கரங்கள் சிறியவையாயினும், பெரியவையாயினும், 'தாங்கிகள்' இருப்பதைக் காணலாம்.




படம் 116. பிணைத்தலோடு கூடிய சக்கரம், இராஜஸ்தானத்தில் சித்தோர்கர் மாவட்டம்.

அச்சுத் தாங்கியைப் பொறுத்து, பல உபவகைகளைக் காணலாம். இதனோடு கொடுக்கப்பட்டுள்ள படங்களிலிருந்து, அவற்றின் வகையும், காணப்படும் பிரதேசங்களும் தெரியவருகின்றன.

மேடையின் வடிவம், அதன் இருபக்கமும் உள்ள சுவர்கள் அல்லது வேலி போன்ற அமைப்பு, வண்டிக்கூடு ஆகியவற்றைக் கொண்டும் மாட்டு வண்டிகளை வகைப்படுத்தலாம். ஆனால், இத் தொடக்க அறிக்கையில் நாம் அவைபற்றிக் கூறப்போவதில்லை. அறிக்கைகள் முழுவதும் தயாரிக்கப்பட்டபின்னர், இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் வகைகள், உபவகைகள் ஆகியவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள இது பயன்படுத்தப்படும்.


ஆர வடிவ சகடக்கால்களை உடைய மாட்டு வண்டிகள், பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா முதலிய இடங்களிலும் பயன் படுத்தப்படுகின்றன. ஆனால்,இணைச் சகடக்கால்களைக் கொண்டுள்ள சக்கரங்கள், இந்தியாவில்மட்டுமே காணப்படும் தனிப்பட்ட வகை யாகும். மேலும் ஏறக்குறைய வடக்குச் சமவெளிகளிலேயே, இவ்வகை காணப்படுகிறது.



Reg. No. 2979 E '61-3500.
© GOVERNMENT OF INDIA COPYRIGHT 1961
Reproduced from the original supplied by the Director Anthropological Svy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.).

மாட்டு வண்டிகள் — சக்கரத்தின் வகைகள்




Reg No 2979 E 61-2300.

Reproduced from the original supplied by the Director Anthropological Sy. of India and the Survey of India is not responsible for the accuracy of the map

PRINTED AT THE SURVEY OF INDIA OFFICES (P. L. O.)

© GOVERNMENT OF INDIA COPYRIGHT, 1961.

மாட்டு வண்டிகள் — சக்கரத்தின் அளவுகள்

# அனுபந்தம் 1

இந்திய அரசாங்க மானிடவியல் ஆராய்ச்சிப் பிரிவு

மத்திய இந்திய நிலையம், தரம்பேட் எக்ஸ்டென்ஷன்,
நாகபுரி, அக்டோபர் 4, 1959.

## இந்தியாவில் கிராமியப் பிரதேசங்களில் காணப்படும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்கள்

**நோக்கங்கள் :** வரலாற்றில் வெகுகாலமாக இடம்பெற்றுள்ள பொருள்களின் அம்சங்கள் காணப்படும் மண்டலங்கள், உபமண்டலங்கள் ஆகியவற்றைத் தேசப் படத்தில் வரைதல், இந்தியாவில் பெரிய கலாசாரப் பிரதேசங்களை ஒப்பிட்டு நோக்குவதற்கு இஃது உதவும். எதிர்காலத்தில் கலாசார முறைகளைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு இவை பின்னணியாகவும் உதவும்.

**ஆராய்ச்சியின் அம்சம் :** தொடக்கத்தில் கிராமமே நமது ஆராய்ச்சியின் அளவுகோலாக இருக்கவேண்டும். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தைப்பற்றியாகிலும் ஆராய்வது நமது நோக்கமாகும். ஆனால், எந்த ஒரு குறிப்பிட்ட கிராமத்தை எடுத்துக்கொள்வது? அவ்விதம் எடுத்துக்கொள்வதற்கு அளவில் வேறுபாடு, நகரத்துக்கு அருகிருத்தல், தற்காலப் போக்கு வரத்து வசதிகள், குன்றுகளுக்கும் காடுகளுக்கும் அருகிருத்தல், நதிகளுக்கருகிருத்தல் ஆகிய அம்சங்களில் காணப்படும் வேறுபாடுகள் ஆகியவற்றை மூலகாரணமாகக் கொள்ளலாம். தொடக்க நிலையில் நாம் சராசரி அளவுள்ள ஒரு கிராமத்தை (1951ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்குப்படி, சுமார் 300 முதல் 500 மக்கள் உள்ளது) எடுத்துக்கொள்வோம். பல இனத்தவர்கள் வசிப்பதும், விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டதும், மாவட்ட நிர்வாகத் தலைமைக் காரியாலயங்கள், வியாபாரத் தலங்கள் முதலிய தற்காலப் போக்கு வரத்து வசதிகளிலிருந்து போதுமான அளவு தொலைவிலுள்ளது மான ஒரு கிராமமாக அஃது இருக்கவேண்டும். ஒரே மாவட்டம்

வெவ்வேறு வகையான மக்கள் கூட்டத்தைப் பெற்றிருப்பின் அல்லது கிராமப் பெரும் பகுதியில் தனிப்பட்ட மக்கள் வசிப்பாரே யாயின், ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை ஆராய்வது அவசியமாக இருக்கும். குன்றுகள், காட்டுப் பிரதேசங்கள் (இவற்றில் பழங்குடி மக்கள் வசிக்கலாம்), நதிப் பிரதேசங்கள் முதலிய பூமி அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளையும், இன வேறுபாடுகளையும் தெரிந்து கொள்ள இஃது இன்றியமையாததாகும். ஆராய்ச்சிக்கென ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுக்குமுன், அம் மாவட்டத் தலைமை நிலையத்தில், விஷயம் தெரிந்த பலரிடம் தொடர்புகொள்வது உதவியாக இருக்கும். ஒரு கிராமத்தை ஆராய்வதற்கு ஏழு நாட்களுக்குமேல் எடுத்துக்கொள்ளக்கூடாது.

தொழில் முறைகள், பொருள்களின் தலப் பெயர்கள் கவனமாகக் குறித்துக்கொள்ளுதல்.

## ஆராய்வதற்கான அம்சங்கள்

### அ. பொருள்களின் அம்சங்கள்

கீழ்க்கண்ட அம்சங்களைப்பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு, கிராமத்திலுள்ள உயர்ந்த வகுப்பார், நடுத்தர வகுப்பார், தாழ்ந்த வகுப்பார் ஆகிய ஒவ்வொருவரிடமிருந்து, ஒவ்வொரு விஷயத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். நல்ல விளைச்சல் உள்ள பணக்காரக் குடியானவன், சாதாரணக் குடியானவன், நிலமில்லாத குடும்பத்துடன் இருக்கும் ஏழைக் குடியானவன் ஆகியோரைப்பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

1. குடியிருப்பின் மாதிரி : (அ) செட்டில்மென்டு பிரதேசங்கள், தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, வேளாண்மைக்குரிய நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், கிராமக் காடுகள் (எவையேனுமிருந்தால்) இடுகாடுகள், சுடுகாடுகள் முதலியவற்றைப்பற்றிய ஒரு திட்டத்தை அளந்துகொள்ளல் (ஆராய்ச்சியாளர், மாவட்ட 'லாண்ட் ரிகார்டு' ஆபீஸிலிருந்து கிராமத்தின் படம் ஒன்றைப் பெற முயலலாம்).

2. வீட்டு வகைகள் : (அ) குடும்ப நிலையத்தில், குடிசைகளின் பரவல், சாதி, வகுப்பு ஆகியவற்றால் குறிப்பிடத்தக்க வேறுபாடேதேனுமிருப்பின் அதுவும் குறித்துக் கொள்ளப்படல்.

(ஆ) கட்டட அமைப்பின் அம்சங்கள் — அமைப்பு, அஸ்திவாரம், சுவர், கூரை (கூரையில் உள்ள சாய்மானங்களின் எண்), காற்றுப்

போக்கிகளின் அமைப்பு முதலியன. கட்டடத்திற்குப் பயன்பட்ட சாமான்கள்—அவற்றின் பல பொருள்களும் கிடைக்கும் இடங்களும்—உள்ளூர், அல்லது வெளியூர்.

வீட்டைக் கட்டுவோர் யார்? கட்டட வல்லுநர்களா அல்லது மற்றவர்களா?

3. உணவு: (அ) முக்கிய உணவு—தானியங்கள் அல்லது மற்றவை (சேனைக்கிழங்கு முதலியன).

(ஆ) சாதாரணமாக உட்கொள்ளப்படும் மற்றைய உணவுப் பொருள்கள்—பருப்பு வகைகள், காய்கறிகள், புரதமுள்ள உணவு—இறைச்சி, மாட்டிறைச்சி, கோழிக்குஞ்சு, ஆட்டுக்குட்டி, வெள்ளாடு முதலியவை; பால், பால் சம்பந்தப்பட்ட பொருள்கள், இனிப்புகள், வாசனைப் பொருள்கள், எண்ணெய் (தாவர எண்ணெயும், மிருகக் கொழுப்பும்), உப்பு.

(இ) சாப்பாடு (உணவு பதார்த்தங்கள்: சாதாரண காலங்களிலும், உற்சவ விசேஷ காலங்கள் ஆகியவற்றிலும் காணப்படும் வேறுபாடுகள்), உணவைச் சமைக்கும் முறையும், பரிமாறும் முறையும் குறித்துக்கொள்ளப்படவேண்டும். உணவு உட்கொள்ளப்படு முன்னர் குளித்தல், கைகழுவுதல், தனிப்பட்ட உடையணிதல் கடவுளருக்குப் படைத்தல் முதலிய சடங்குரீதியான தூய்மை முதலியன.

(ஈ) சாதாரண காலங்களிலும், விசேஷ காலங்களிலும் பயன்படுத்தப்படும் கொழுப்பு அல்லது எண்ணெய்.

(உ) சமையலுக்குப் பயன்படும் பாண்டங்கள் (வேகவைத்தல், கொதிக்க வைத்தல், பொரித்தல் முதலியன), அடுப்பும் விறகும்.

4. உடை, அணிவகைகள், காலணி: பெரும் பொருளாதாரப் பிரிவுகள், சாதிகள் ஆகியவற்றைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் ஆகியோரிடையே காணப்படுவது—சாதாரண காலங்கள், உற்சவ காலங்கள், சடங்குகள் நடைபெறும் காலங்களில் உடைகள் கிராமத்திலே உற்பத்தி செய்யப்பட்டனவா அல்லது வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டனவா என்பதைக் குறித்துக் கொள்ளவும்.

5. பொருள்கள், பிரயாணிகள் முதலியோருக்குப் பயன்படும் சாதாரணப் போக்குவரத்து வசதிகள்: மனிதர் இழுப்பது, வண்டியிழுக்கும் மிருகங்கள், வண்டிகள், படகுகள் முதலியவை.

திருமண வீட்டிற்கு மணமகளும் மணமகனும் அழைத்துச் செல்லப்படும் விதம்.

6. கிராமங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் மிருகங்கள், பறவைகள் முதலியன.

7. விளையும் பயிர்கள்: (அ) தானியங்கள்; (ஆ) பருப்புகள்; (இ) காய்கறி வகைகள்; (ஈ) வருடாந்திர உற்பத்திப் பொருள்களான பாக்கு, தேங்காய் முதலியவை; (உ) எண்ணெய் வித்துகள்.

ஒரு நிலத்தில் (ஒரு மனை) ஓர் ஆண்டில் எத்தனை பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

8. பயிர்த் தொழிலுக்கான கருவிகள்: நெல் உற்பத்தி, மற்றத் தானியங்களின் உற்பத்தி, பருப்பு வகைகள், காய்கறி உற்பத்தி ஆகியவற்றுக்குத் தேவையானவை.

தோண்டுதல், சமப்படுத்துதல், விதைத்தல், பெயர்த்து நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல், தானியங்களைப் பிரித்தல், உமியைப் போக்குதல், கருவிகளைச் சேமித்து வைத்தல் முதலிய யாவும் இதில் அடங்கும்.

கருவிகள் கிராமங்களிலேயே செய்யப்பட்டனவா அல்லது வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டனவா?

பயிர் செய்யும்முறை; நன்செய், புன்செய் ஆகியவற்றில் எம்முறை பயன்படுத்தப்படுகிறது.

9. சாதாரண எண்ணெய்ச் செக்கு: எண்ணெய்ச் செக்கின் பாகங்களும், அவைபற்றிய வருணனைகளும்.

இஃது எவ்வாறு இழுக்கப்படுகிறது—மனிதர், எருதுகள்—ஒன்று அல்லது இரண்டு எருதுகள்—கண்ணைக்கட்டி அல்லது திறந்த கண்களோடு செக்கிழுப்பவை.

எண்ணெய் எவ்வாறு எடுக்கப்படுகிறது?

10. சாதாரணக் கூடைகள் முடைதல்: வகைகளும் (அமைப்பு, செய்முறைகள்) அவற்றின் சாதாரணப் பயன்களும்.

கூடை முடைபவர்கள் யாவர்? சாதி.

11. பாண்டத்தொழில் (மண்ணாலானவை): வகைகளும் சாதாரணப் பயன்களும்—வகுப்பு.

12. கிராமத்தின் பிறப்பு, இறப்புபற்றிய கணக்கு: கிராமங்களிலும், சிறிய கிராமங்களிலும் காணப்படும் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் வசிக்கும் வீடுகளின் எண்ணிக்கை.

13. தொழில் : கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டால் விரைவில் தொழில்பற்றி ஆராய்ந்துவிடலாம்.

| (1) | (2) | |
| --- | --- | --- |
| | சமகாலத்திலுள்ளவை | |
| தொன்றுதொட்டு வருபவை | பெருந்தொழில் | உபதொழில் |

கிராம மக்கள் பலருக்கு முன்னிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவேண்டும். 'குடும்பம்' என்பது அடிக்கடி வற்புறுத்திப் பேசப்படும் ஒரு பிரிவு. கவனிக்கப்பட வேண்டியது. ஒரு குறிப்பிட்ட வகுப்பார் பரம்பரைத் தொழிலை விட்டுவிடக் காரணம் யாதென்று வினவி, அதற்குக் கிடைக்கும் விடையை ஆராய்ச்சியாளர் குறித்துக்கொள்ளலாம்.

14. சந்தைகள் : எந்தச் சந்தைகளுக்கு அடிக்கடி மக்கள் செல்கின்றனர்? காரணம் யாது? (மைல்கள்). மற்றச் சந்தைகளுக்கு மக்கள் ஆர்வமாகச் செல்கின்றனர். ஏன் அங்ஙனம் செல்கின்றனர்? அங்கு ஏதேனும் விசேஷமான பொருள் கிடைக்கிறதா? (சென்ற தூரம்—மைலில்)

## ஆ. தேவர்களும் திருவிழாக்களும்

1. கிராம தேவதைகள் : கிராமங்களிலுள்ள கோயில்கள், தேவதைகளின் பெயர்கள், முத்திரைகளின் வருணனைகள். தெய்வங்களை வணங்குவதன் நோக்கம். கோயில் அர்ச்சகர் (சாதி)—கிராமத்தினர் பொதுவாக நிர்வகிக்கின்றனரா அல்லது தனிப்பட்டவர்களின் நிர்வாகமா?—தெய்வங்களுக்குப் படைக்கப்படும் பொருள்கள் யாவை?—மிருகபலி இருப்பின், மிருகங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.

2. கிராமத்தில் நடைபெறும் ஆண்டு விழாக்கள் : மாதவாரியாக உள்ளூரில் மட்டும் அல்லது வெளியூரில்—கிராம மக்கள் விழாவைக் காண வருவதுண்டா (மைல்கள்) ; ஒன்றிரண்டு வரிகளில் உற்சவங்களின் கதைகளைக் குறித்துக்கொள்ளவும்.

## இ. கிராம சுகாதாரமும் சுகாதாரப் பழக்கங்களும்

1. சாதாரண கழிவுப் பொருள்கள் கொட்டப்படும் இடம்.

2. வெளியேற்றப்பட்டுச் சுத்தம் செய்யப்படும் முறை; சுத்தப் படுத்திக் கொள்ளல்.

3. கிராம சுகாதாரத்திற்கான மற்றக் கவனிப்பு.

# அனுபந்தம் 2

## கலாசார மண்டல ஆராய்ச்சி

(அட்டைகளுக்குத் தலைப்புகள்)

1. குடி அமைப்பு மாதிரி
2. வீட்டின் வகை
3. முக்கிய உணவு
4. மற்ற உணவுப் பொருள்கள்
5. சாப்பாடு
6. உணவுக்குப் பயன்படுத்திய கொழுப்பு அல்லது எண்ணெய்
7. சமையல் பாத்திரங்கள்
8. ஆண்களின் உடை
9. பெண்களின் உடை
10. அணிகள்
11. ஆண்கள், பெண்கள் பயன்படுத்தும் காலணி
12. மாட்டு வண்டிகள்
13. மற்றப் போக்குவரத்து வசதிகள்
14. வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களும் பறவைகளும்
15. பயிர்கள் - தானியங்கள்
16. பயிர்கள் - பருப்பு வகைகள்
17. பயிர்கள் - காய்கறி வகைகளும் வியாபாரப் பயிர்களும்
18. ஆண்டுப் பயிர்கள்
19. எண்ணெய் வித்துகள்
20. விவசாயக் கருவிகள் - தோண்டுவதற்கு
21. விவசாயக் கருவிகள் - சமப்படுத்துவதற்கு
22. விவசாயக் கருவிகள் - விதைப்பதற்கு

23. விவசாயக் கருவிகள் - பெயர்த்து நடுவதற்கு
24. விவசாயக் கருவிகள் - களையெடுப்பதற்கு
25. விவசாயக் கருவிகள் - அறுவடைக்கு
26. விவசாயக் கருவிகள் - தானியங்களைப் பிரிக்க
27. விவசாயக் கருவிகள் - உமியைக்குத்த
28. விவசாயக் கருவிகள் - சேமிப்பதற்கு
29. இதர விவசாயக் கருவிகள்
30. பயிர் செய்யும் முறை
31. எண்ணெய்ச் செக்கு
32. கூடை முடைதல்
33. மட்பாண்டம் செய்தல்
34. மக்கள்தொகையும் தொழிலும்
35. சந்தைகள்
36. கோயில்கள்
37. திருவிழாக்கள்
38. கிராமச் சுகாதாரம் - எல்லாவகைக் கழிவுப் பொருள்களையும் எறிதல்
39. கிராமச் சுகாதாரம் - வெளியேற்றியபின் சுத்தப்படுத்துதல்
40. கிராமச் சுகாதாரம் - மற்றக் குறிப்புகள்
41. மொழி

## முக்கியத் தலைப்புகளின்கீழ் உபதலைப்புகள்

1. குடியமைப்பு
   1. வீடுகளின் வரிசைக் கிரம அமைப்பு
   2. தண்ணீர் உண்டாகும் இடம்
   3. சாக்கடை வசதி
   4. பயிர்த் தொழில் நிலங்கள்
   5. இடுகாடும் சுடுகாடும்
   6. மற்றவை

2. வீட்டின் வகை
   1. உள்ளூரில் வீடுகளின் அமைப்பு
   2. குறிப்பிட்ட ஒரு வீட்டின் அமைப்பு
   3. அடிப்பாகம்

4. சுவர்
5. கூரை
6. காற்றுப்போக்கு
7. பயன்படுத்தப்பட்ட பொருள்களும் கிடைக்குமிடங்களும்
8. வீட்டின் பல்வேறு பகுதிகள் பயன்படுத்தப்படும் முறை
9. வேறுபாடுகள்
10. வீடு கட்டுவோர்

5. உணவு

சாப்பாடு : சமையல் செய்யும் முறைகளில் கீழ்க்கண்டவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

1. முக்கிய உணவு தயாரித்தல்
2. பருப்பு அல்லது அவரைக் குழம்பு

8, 9. ஆண், பெண் உடை

தலை, மேல்பாகம், கீழ்ப்பாகங்களுக்குப் பயன்படும் ஆடைகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

குறிப்பு : 9ஆம் பிரிவில் பெண்களின் ஆடைகளைக் குறிப்பிடும்போது, கலியாணத்தில் அணியப்படும் உடைகள், அழகு செய்யும் முறை, அணிகள் முதலியனவும் விதவைகளுக்குரிய அடையாளமும் குறிக்கப்படவேண்டும்.

10. அணிகள்

1. காது; 2. மூக்கு; 3. கழுத்து; 4. மணிக்கட்டு; 5. கைகள்; 6. கால்கள்; 7. மற்ற அணிகள்.

12. மாட்டு வண்டிகள்

சக்கரத்தின் தன்மை, வண்டியின் உடலோடு சக்கரம் இணைக்கப்பட்டுள்ள முறை, உடற்பாகம், வண்டிக்கூடு, நுகத்தடி ஆகியவற்றைப்பற்றிப் போதிய செய்திகள் கொடுக்கப்படவேண்டும்.

36. கோயில்கள்

கீழ்க்கண்ட தலைப்புகளில் புள்ளி விவரங்கள் கொடுக்கப்படலாம் :

1. கோயில்கள்; 2. தெய்வம்; 3. அர்ச்சகர் (சாதி); 4. படைக்கப்படும் பொருள்கள்; 5. வணங்குவதன் நோக்கம்.

37. திருவிழாக்கள்

1. திருவிழாவின் பெயர்
2. மாதம், பட்சம், நாள்
3. காலம்
4. தலைமைச் செய்தி
5. குறிப்புகள்

40. கிராம சுகாதாரமும் மற்றக் குறிப்புகளும்

1. குளிக்கும் இடம்
2. குடி தண்ணீர்
3. சலவை செய்தல்
4. படுக்கையைச் சுத்தப்படுத்துதல்
5. உமிழும் வழக்கம்
6. காற்றுப்போக்கு
7. பற்களின் கவனிப்பு
8. மற்றச் செய்திகள்


மக்கள்தொகையும் தொழிலும்


1. எண்
2. சாதிக்குழு
3. பரம்பரைத் தொழில்
4. ஒரே காலத்திற்குரிய தொழில்:
   (அ) முதன்மையான
   (ஆ) துணையான
5. குடும்பத்தினரின் எண்ணிக்கை
6. மக்கள்தொகை
7. குறிப்புகள்.

S.K. Ganguly.
24.XII.59

20. AGRICULTURAL TOOLS : DIGGING
(Plough & Yoke)

Bihar / Singbhum
Ramgarh



# அனுபந்தம் 3

## 20. விவசாயக் கருவிகள் – தோண்டுவதற்குக் கலப்பையும் நுகத்தடியும்

(படம் பக்கம் 140–ல் காண்க)

கலப்பை, இங்கு 'ஹால்' என்று அழைக்கப்படுகிறது. இதில் மூன்று முக்கிய பாகங்கள் உள்ளன. (1) கலப்பை; (2) உத்திரம்; (3) நுகத்தடி.

கலப்பை (ஹால்) நடுவில் சிறிது வளைந்துள்ள ஒரே மரத் துண்டால் செய்யப்படுகிறது. இதன் கைப்பிடி (போன்டா) நீள மாகவுள்ளது; இது கலப்பை செய்யப்படும் மரத்திலேயே செய்யப் படுகிறது. கலப்பையின் மத்திய பாகத்தில் கொழுக்கால் (பால்) பொருத்தப்படுகிறது.

கலப்பையில் உள்ள சதுர வடிவமான துவாரத்தில் உத்திரம் (சானர் - Sanr) செருகப்படுகிறது. இது தட்டையான, நீண்ட மெல்லிய மரக்கட்டையாலானது. இதில் இரண்டு குழிவுகள் உள்ளன; உட்குழிவில் நுகத்தடி பொருத்தப்படுகிறது.

ஒரே கெட்டியான மரத்துண்டினால் நுகத்தடி (ஜுயஸ்) செதுக் கப்படுகிறது. இதன் இரு முனைகளிலும் உள்ள இரு துவாரங்களில், இரண்டு முளைகள் (Sol) செருகப்பட்டிருக்கின்றன. எருதுகளைச் சரியான நிலையில் நிறுத்த இவை உதவுகின்றன.

கலப்பையில் 'கொழு'வைத் தவிர மற்றப் பாகங்களைக் கிராம மக்களே செய்துகொள்கின்றனர். கிராமக் கருமார் ஏர்க்கொழு வைச் செய்கிறார்.